www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
பெப்.27-மார்ச்.05,1994
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 40

## உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் கட்சிகளின் பிரசாரங்கள்



## சாக்கடையாய் மாறிவரும் தமிழர் அரசியல்


எக்ஸ்ரே ரிப்போர்ட்

உலகில் மிகப்பெரிய மனிதரும் மிகச் சிறிய மனிதரும் அபூர்வ சந்திப்பு!

ரசிகனின் கொலை விழும் நேரம்

மற்றும்

இலக்கிய நயம்



தந்தையைத் தூக்கும் மலை போன்ற தனயன்

மகாபாரதம்

தங்க நகைப் பரிசுத் திட்டம்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஜெபம் அழிவைத் தடுத்து நிறுத்தும்!

மகா நகரமாகிய நினிவே பட்டணம் அசீரிய சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரமாக விளங்கியது. நோவாவின் கால ஜலப்பிரளயத்துக்குப்பின், முதன் முதல் கட்டப்பட்ட மிகப்பெரிய பட்டணங்களில் இதுவும் ஒன்று. ஆனால் இங்கு வசித்த மக்கள் பல பாவங்களைச் செய்து இறைவனுக்கு விரோதமாக எப்பொழுதும் அக்கிரமம் செய்கிற மக்களாகவே விளங்கினார்கள். இவ் அக்கிரம செயல்களை பொறுக்க முடியாத இறைவன் அவர்களை எச்சரிக்க யோனா என்கிற தீர்க்கதரிசியை அனுப்பினார். அவன் அங்கேபோய் நாற்பது நாட்களில் இப் பட்டணம் அழிக்கப்பட்டுவிடும் என்று சொல்லி மக்களை எச்சரித்தான். இவ் எச்சரிப்பைக்கேட்ட மக்கள் தேவனுக்கு பயந்து, தேவனை விசுவாசித்து, உபவாசித்து ஜெபிக்க ஆரம்பித்தனர்.

அரசனும் தனது சிங்காசனத்தைவிட்டு எழுந்து, அரச ஆடைகளை கழற்றிவைத்துவிட்டு, துக்க ஆடையை அணிந்துகொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான். பிரதானிகள் தொடக்கம் மிருகங்கள் வரை, அனைவரும் உணவு உண்ணாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், தேவனை நோக்கி கூப்பிடவும், பொல்லாத வழிகளைவிட்டு திரும்பவும், கொடுமைகளை நிறுத்தவும் வேண்டுமென கட்டளையிட்டான். மேலும் "யாருக்கு தெரியும், நாம் அழிந்துபோகாத படிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரக கோபத்தைவிட்டு திரும்பினாலும் திரும்புவார்" என்று கூறச்சொன்னான். இதனால் பட்டணத்திலுள்ள அனைவரும் தேவனை நோக்கி கூப்பிட்டனர். அதுமாத்திரமல்ல. தங்கள் பொல்லாத வழிகளையும் விட்டுவிட்டனர். இதைக்கண்ட இறைவன் "தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து, மனஸ்தாபப்பட்டு அதை செய்யாது இருந்தார்."

மேலும் "வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக "நான் பரிதபியாமல் இருப்பேனா?" என்று யோனாவுக்கு சொன்னார். உண்மையிலேயே அவர் மனந்திரும்பும் மக்கள்மேல் இரக்கமுள்ள ஆண்டவராகவே இருக்கிறார்.



நாமும் தேவன் வெறுக்கிற பாவமான செயல்களை செய்யாமல் அவற்றைவிட்டுவிட்டு, தேவன் விரும்புகிற நல்ல காரியங்களை செய்வோமானால், தேவன் எம்மீது இரக்கங்கொண்டு, எமது ஜெபங்களைக்கேட்டு, எம்மை மன்னித்து, எம்மை ஆசிர்வதிப்பார். அதுமாத்திரமல்ல, நமது நாட்டினரையும் வரப்போகும் பயங்கர அழிவுகளில் இருந்தும் பாதுகாப்பார்.

ரி.ஐ.இன்பநாதன்-நுகேகொடை.

## ஆன்மீகம்

# நோன்பு ஒரு கேடயம்

"நோன்பு ஒரு கேடயம்-அதனை உடைக்காமலிருக்கும்வரை" என்று ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் அருளியதாக, அபூ உபைதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

"நோன்பு கேடயம்" என்பதன் கருத்து என்னவென்றால் மனிதன் நோன்பு என்னும் கேடயத்தின் மூலம் தன் எதிரியான ஷைத்தானை விட்டும் தன்னைக் காத்துக்கொள்ள முடியும் என்பதாகும். நோன்பு அல்லாஹ்வின் வேதனையிலிருந்து பாதுகாப்பளிக்கிறது," என்று ஓர் அறிவிப்பிலும் "நோன்பு நரகத்திலிருந்து பாதுகாப்பளிக்கிறது" என்று மற்றோர் அறிவிப்பிலும் கூறப்பட்டுள்ளது.

நம்முடைய இக்காலத்தில் நோன்பைக் கழிப்பதற்காக வீணான விளையாட்டுகளிலும், வீண் பேச்சுக்களிலும் ஈடுபட்டுவிடுகின்றனர். சாப்பிடுவதும், குடிப்பதும் நோன்பை முறிக்கின்ற செயல்களாக இருப்பதைப் போன்றே பொய் பேசுவதும், புறம் பேசுவதும் நோன்பை முறித்து விடுகின்றன.

ஒரு நோன்பாளி தன் நாவின் மூலம் தீய பேச்சுக்கள், அறிவற்ற வார்த்தைகள், பரிகாசம் செய்தல் சண்டையிடுதல் போன்றவற்றைச் செய்யக்கூடாது. பிறர் நம்மிடம் சண்டையிட்டாலும் "நான் நோன்பாளி" என்றுகூறிவிடவேண்டும். அதாவது மற்றவர் சண்டையிட ஆரம்பித்தாலும், அவரிடம் தகராறு செய்யக்கூடாது. அவர் அறிவுள்ளவராக இருந்தால் "நான் நோன்பாளி" என்றுகூறிவிடவேண்டும். அவர் அறிவற்றவராக-விளங்காத் தன்மையுடையவராக இருந்தால் "நீ நோன்பாளியாக இருக்கிறாய். இவ்விதமான வீண் பேச்சுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருப்பது உனக்கு அவசியமில்லை." என்பதாக தமக்குத் தாமே கூறிக்கொண்டு ஒதுங்கிக்கொள்ளவேண்டும்.

குறிப்பாக புறம், பொய் இரண்டைவிட்டும் நீங்கியிருப்பது மிக அவசியம். ஏனெனில், இவற்றினால் நோன்பு முறிந்துவிடுகிறது என்று உலமாக்கள் சிலர் கூறியுள்ளனர்.

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
உள்ளூராட்சித் தேல்தலுக்கான
திகதி-
அருகில் வந்துவிட்டது.

கிழக்கிலும்-வவுனியாவிலும்
திருவாளர் பொதுஜனம்
சொல்லப்போகும் தீர்ப்பு என்னவென்று
தெரியும் நாள் வரப்போகிறது.

தடம்மாறி-தவறுகள் நிறைந்த
தமிழர் அரசியல் காரணமாக
ஒத்தவொரு கருத்தை
உலகின் செவிகளுக்கு எட்டும் வகையில்
சொல்லத்தக்கதாக
தேர்தல் முடிவுகள் அமையாது
என்பதை
இப்போதே துணிந்து சொல்லிவிடலாம்.

வாக்குச் சீட்டுக்களை
பழுதாக்கும் படியாக
இரு தமிழர் அமைப்புக்கள்
கூறியுள்ள போதிலும்
அதற்கு வாக்காளர் மத்தியில்
வரவேற்பு இருப்பதாகத் தெரியவில்லை.

அக்கோரிக்கையை வலியுறுத்தும்
குறிப்பிட்ட அமைப்புக்கள் கூட
தீர்க்கமான பிரச்சாரங்களை செய்யவில்லை.

போட்டியிடும் அமைப்புக்கள்
எப்படியாவது தம்
வேட்பாளர்களை வெற்றிபெறவைக்க
ஆர்வம் கொண்டுள்ளன.

ஆனால்-கிழக்கிலும்-வவுனியாவிலும்
உள்ள மக்களைப் பொறுத்தவரை
நடைபெறப்போகும் தேர்தலில்
அக்கறை காட்டவில்லை.

தேர்தல் பிரசார கூட்டங்களுக்கு
குறைவான தொகையில்தான்
கூட்டம் சேர்கிறது-அதனால்
ஒலி பெருக்கிகளை
ஒன்றுக்கு பத்தாகக் கட்டி
வீட்டிலிருப்போரின் காதிலும் விழக்கூடியதாய்
பிரசார முறைகள் அமைந்துள்ளன.

முன்பெல்லாம்-
தமக்குப் பிடித்தமான தலைவர்களது
பேச்சுக்களை கேட்க
பெருந்திரளாய் மக்கள் காத்திருப்பர்.

இப்போதெல்லாம்-
பேசுகின்றவர்களும் பிடித்தமாக இல்லை;
பேசுகின்ற பேச்சுக்களும்
பிடித்தமானதாக இல்லை.

குறிப்பாக-ஒருவரை ஒருவர்
குற்றம் சொல்லித் திட்டித்தீர்த்தல்கள்
சலிப்பையும், வெறுப்பையும் ஊட்டுகின்றன.

எல்லோரும்-
ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாக
வேட்பாளர் நியமன விடயத்திலும்
வேடிக்கைகள் செய்துள்ள நிலையில்
யாரை யார் குற்றம் சொல்வது?

ஒன்றுமட்டும் புரிகின்றது.
அரசியலின் தரத்தை
ஆக்கபூர்வமற்ற வழிமுறைகள்
தாழ்த்திவிட்ட போதிலும்
மக்களின் அவதானிப்பும்-பகுத்தாயும் திறனும்
பழுதாகிவிடவில்லை.

எதிர்வரும் தேர்தலும்
வழக்கம்போல் சில பாடங்கள் சொல்லும்.
அதிலிருந்து கற்றுக்கொள்ள
எத்தனைபேர் தயாராக இருக்கிறார்கள்!
என்பதுதான் கேள்வி.

தவறுகளை நியாயப்படுத்தி
விழுந்தும் மீசையில் மண்படாத கதைசொல்லி
மீண்டும்-மீண்டும்
தவறுகள் தொடருமானால்
சம்பந்தப்பட்டவர்கள் எவரும்
சரிவுகளில் இருந்து மீளவே முடியாது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

**தினமுரசு போன்: 820265**

## கவிதைப்போட்டி இல-37

வந்து குவிந்தவற்றில் வெற்றி பெற்றதுவும்-வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**ஆட்டிப் படைக்கும் ஆயுதம்**

வரட்சியால் வந்த
வறுமையல்ல-ஆயுத
விருத்தியால் வந்த
வினை.

அ. சாந்தி-திருமலை.

### பாராட்டுப்பெறும் கவிதைகள்

**மானம்**

கோவணத்தைக் கூட
கொடும் போர் பறித்ததென்று
மானத்தைக் காத்திடவா
முகம் புதைத்துத் தரைபார்த்தாய்?
ச. மகாலிங்கம்-வெளிமடை.


**அழுதல் வேண்டும்**

பாரதியார் வந்திவரைப்
பார்க்க வேண்டும்-அவர்
பாட்டாலே உலகமெல்லாம்
அழுதல் வேண்டும்.
எஸ். நாகராஜன்
காரைதீவு-02.

**யுத்த ஓவிய(ன்)ம்**

இது...
யுத்த ஓவியன்
உலகத்தின் சுவர்களில்
மாட்டி வைக்கும்
எலும்புச் சித்திரம்!
சதையும் இரத்தமும்
தொலைந்துபோன
சமாதானத்தைப் போல்-அவலமாய்...
ஒரு யுத்த பரிசு!
ஷர்மி-கண்டி.

## கவிதைப் போட்டி இல-40



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 05.3.1994. பட உதவி - க. அன்பழகன்-பிரான்ஸ்.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 40
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ், கொழும்பு-5

**"முத்திரை"**

ஆபிரிக்காவின்
புதிய "முத்திரை"
வெளியீடு.
மின்னாஹ். ஏ. ரஸூல்
கல்முனை-14.

**வதை முகாம்**

வதை முகாமுக்குள்ளே
வாலிபம் சிதைந்து..
வயோதிபம் ஆனது.
என். கே. சலீம்
இக்கிரிகொல்லாவ.

**சின்னம்**

படிப்படியாய் உலகம்
அடித்தளத்தை அண்டி விடும்
அபாய அறிவிப்பின்
அடையாளச் சின்னம்.
திருமதி. பூரணம்மா வல்லிபுரம்
மட்டக்களப்பு.

**இதுவா?**

இருபதாம்
நூற்றாண்டின்
போர் சின்னம்
இதுவா?.
மை. போஷியா
மட்டுநகர்.

அராஜகம் விரிந்ததால்
சுருண்டு கிடக்கிறது
மானுடம்.
ஏ. ஆர். நிஸ்வான்-புத்தளம்.



மாதவப் பேற்றில்
மனிதனாய்ப் பிறந்து
புழுவினுங் கேடாய்
பூமியில் கிடப்பதேனோ?
திருமதி. ரீ. பாலகிருஸ்ணன்
நமுனுகுல.

யாராலும்
உரிமை கோரப்படாத
யுத்த நாட்டின்
தேசிய சின்னமா?
எம்.எஸ்.எம். பாமிஸ்.

**மனித மலர்**

வறுமைப் புயலால்
உதிர்ந்து கிடக்கின்றது
மனித மலர் ஒன்று.
திருமதி. கிறேஸ் தங்கராசா
வந்தாறுமூலை.

**வெளிச்சம்**

உனைப் பார்த்ததும்
வரவில்லை கவிதை
வந்தது அழுகை
புரிந்தது யுத்தக் கொடுமை...
ரீ. ஜீவா-திருகோணமலை.

மெய்ஞானத்தை மிஞ்சிய
விஞ்ஞான வளர்ச்சியின்
படிக்கட்டுக்கள்
இதுதானா?
கா. ஜெகதீஸ்-வாழைச்சேனை.

**"புதிய பூ"**

"யுத்த செடியில்
நாள்தோறும் பூக்கும்
பூக்களில் இது ஒரு பூ"
இரா. இராமகிஷ்ஷ்ணன்
பொகவந்தலாவ.

**எஞ்சியதிதுதான்**

கலியுகமிதிலே
போரும் நோயும்
பசியும் பட்டினியும்
உண்டதுபோக
எஞ்சியதிந்த
எலும்பும் தோலும்.
க. குமாரசூரியம்
கரூவன்கேணி.

**இறுதி முத்தம்**

இசைவின்றி
ஈன்றுவிட்ட
பூமித்தாய்க்கான
இறுதி முத்தம்.
எம். ஷமீர்
அக்கரைப்பற்று-01.

## வாசகர் சாலை

அன்பின் முரசே,
எக்ஸ்ரே ரிப்போர்ட் படுசூடாகவும் அதிரடி அய்யாத்துரை என்னை அதிரவும் வைக்கின்றது. இராஜதந்திரி மற்றும் தேன்கிண்ணம் திகட்டாத சுவையாக உள்ளது.
கே.றவி-நிந்தவூர்-02.

•

இவ்வாரம் சுமந்துவந்தவை அனைத்தும் சூப்பர். குறிப்பாக ரசிகனின் இலக்கிய நயம் எப்படி சார் வர்ணிப்பது? மறு வெள்ளிக்கிழமை கொஞ்சம் அவசரமாக வா வா என்கிறோம்.
கன்சுல் இஸ்மாயில் அஸ்லம்-கம்பொல.

•

வார மலரே என் வாசமலரே!
இராஜதந்திரியின் இதமான அரசியல் அலசல்கள் என் உணர்வுகளுக்கு உவகையூட்டும்; தேன் கிண்ணம் தரும் மதுவில் நான் மயக்கமடைவேன். ரசிகனின் கரங்களுக்கு முத்தார விலங்கு சூட்டி இதயச்சிறையில் ஆயுட்கைதியாய் வைக்கவேண்டும். என் இனிய ரசிகன் எங்கே?
கொட்டுமுரசே இதழை.....
வானெட்டும் உன் புகழ்!
இரா.மதன்-அக்கரைப்பற்று-02.

•

அன்பின்முரசுக்கு!
வெள்ளிதோறும் சுமந்துவரும் தினமுரசின் அம்சங்கள் யாவும் எங்களை ஆக்கப்பாதைக்கே இட்டுச் செல்லுகின்றன. 'கண்ணே மதுமிதாவுக்கு நிறைவு கட்டிய ரசிகன் மீண்டும் "கொலைவிழும் நேரம்" தருகின்றார். முதல் அங்கமோ அசத்திவிட்டது. பரவாயில்லை ரசிகன் ஒரு பலே கில்லாடிதான்.
கடந்த முரசு 38ல் அக்குறணை ஹரீரா அனஸின் கண்ணீர் ராத்திரிகள் சிறுகதை சுவையாக இருந்தது. அதே முரசில் சூர்யாவின் சூடுபிடிக்கும் தேர்தல்கால கதையான "போலி முகங்கள்" புதுப் பொலிவுடன் திகழ்ந்தது. தொடர்ந்து சூடு-சுவை சுவாரசியமான சம்பவங்களை தினமுரசு அள்ளித்தரவேண்டும்.
செல்வன்.மசூத் அஹமத்-காத்தான்குடி-03.

**தற்காலத் தேர்தலை....**

13/02/94 முரசு இதழின் முகப்பு பிரமாதம். ஒவ்வொரு வார்த்தைகளும் சவுக்கடி. எல்லாவற்றையும் மீறி முகப்பின் படங்கள்..தற்காலத் தேர்தலை முரசு நன்றாகத்தான் புரிந்துவைத்திருக்கிறது. பாராட்டுக்கள். தொடரட்டும் பணி.
ஸ்ரீவரணி-வாழையூர்

•

தித்திக்கும் தினமுரசே!
உன் ஆக்கங்கள் தான் நவரசமாய் இருக்க, அதிலும் கவிதைப்போட்டி, தேன்கிண்ணம், இலக்கிய நயம் .என்பவற்றில் நீ ஒருபடி மேலாக இருக்கிறாய். வாரத்தில் ஒரு முறையன்றி நாளொன்று மலர்வதால் நீ தரம் குறைந்துவிடுவாயா?
ஹலீமா ஹஸன்
கும்பலங்கை.



•

இலக்கிய நயம் இதயத்தைத் தொட்டது. இன்றைய அரசியல் நிலவரங்கள் இதயத்தைச் சுட்டது.
எம்.எஸ்.எம்.ராசிக்-வரக்காமுறை.

•

தினமுரசை நாம் பொழுது போக்கிற்காக மட்டும் வாசிக்கவில்லை. அரிய செய்திகள்முதல் அறிவூட்டும் தகவல்வரை வழங்கும் தினமுரசை வாழ்த்த புதுச் சொற்கள் புனைய வேண்டும். வாழ்க. வளர்க. சிறுகுறை- இன்னும் முகப்பில் விஜயகாந்தின் படம் ஒன்றை வெளியிடவில்லையே? எதிர்பார்க்கும் அன்பு வாசகன்.
கே.கதிர்காமநாதன்-பாண்டிருப்பு-1.

"நீ வருவாய் என நான் நினைத்தேன்...ஏன் ஏன் முரசே தாமதம்" உன்னைப் பார்க்க நாங்கள் படும் அவதி உனக்கெங்கே தெரியப்போகின்றது. உன் பணி என்றும் உயர என் வாழ்த்துக்கள்.
திருமதி.ராஜா-நமுனுகுல.

•

எமது அன்பின் முத்தான முரசே, வாராவாரம் புதுமைத் தகவல்களை சுமந்து வருவதில் முரசுக்கு நிகர் முரசேதான். வாராவாரம் மலரும் முரசே, நீ ஏன் நாள்தோறும் மலர மாட்டாயா? என ஏங்கும் இதயங்கள் பல...வாழ்க நீ, வளர்க தமிழ், என்றும் உமது பணிதொடர எனது வாழ்த்துக்கள்.
திருமதி. சந்திராணி தங்கத்துரை
சவளக்கடை-7.

•

பண்பின் இலக்கணமான என் இனிய தினமுரசே! நீ தரும் ரசிகனின் இலக்கிய நயம், மகாபாரதம், லேடிஸ் ஸ்பெசல், தொடர் நவீனம், சிறுகதைகள் எம் நெஞ்சைக் கொள்ளைகொண்டுவிட்டன. உன்னை எப்படி பாராட்டுவது என்று தெரியவில்லை. முரசே! உன் சேவை இமயம்போல் வளர எமது நல்லாசிகள்!
செல்விகள். நியாஸா ஏ.அஸீஸா, பர்வீன், பர்ஸானா, சிபானா, றஸீன், சியாட்-நிந்தவூர்-6.

•

எம் நெஞ்சங்களில் நெடுநாளாய் பஞ்சணை போல், மயில் இறகுபோல் பல ரகமான ஆக்கங்களால் தடவிக்கொடுக்கும் தினமுரசு வாரமலரை ஒருவாரம் கூட படிக்காமல் இருக்கமுடியவில்லை. அப்படி என்னதான் சொக்குப் பொடி போட்டீர்களோ?
ஸஹீர்கான்-தர்காநகர்.

•

அறிவுத் தினமுரசே,
பாப்பா முரசு என்று ஒரு பக்கத்தை எங்களைப்போன்ற சிறுவர்களுக்காக ஒதுக்கினாயே அதற்கு எங்கள் நன்றிகள்.
சகோதரப் பாப்பாக்கள். எஸ்.என். ரமீஸ், சபீஸ், நிரோசா-அல்லை நகர்-06.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புலிகளைச் சொல்லி வாக்கு வேட்டை!
# வாக்குகளைப் பிரிக்கும் தமிழ் கட்சிகள்!!

## மெளனமாக வேடிக்கை பார்க்கும் தமிழ் மக்கள்

கிழக்கில் இருந்து
-ஒற்றன்-

கிழக்கில் தேர்தல் திருவிழாக் காட்சிகளை மனதால் படம்பிடித்து அனுப்புக என்று உத்தரவு.

சரி- திருகோணமலை நகரில் இருந்து புறப்படுவோம் என்று திட்டம்.

'தமிழ் ஈழத்தின் தலைநகர்' என்று கூட்டணி மேடைகளில் பேசப்பட்ட பூமி.

இராஜவரோதயம் போன்ற அரசியல் அனுபவம் மிக்க தலைவர்களை அரசியலுக்கு தந்த மண்.

இப்போது-வேடிக்கையான வேட்பாளர்களை சந்தித்து சிரித்துக் கொண்டிருக்கிறது.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்கள் தெருவெங்கும் ஓடித்திரிகின்றன.

எம்.ஜி.ஆர். படப்பாடல்களுக்கு நல்ல மவுசு.

"அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா. ஆறிலும் சாவு நூறிலும் சாவு தாயகம் காப்பது கடமையடா" என்றபாடல் திரும்பத்திரும்ப போடப்படுகிறது.

1977ம் ஆண்டு கூட்டணி மேடைகளிலும் ஒலித்த பாடல்.

அப்போது ஈழக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் நின்ற நேரம்.

இப்போது-நிலமை வேறு. தேர்தலில் நிற்கும் தமிழ் கட்சிகள் ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சனைக்கு தீர்வுகாணப்போவதாக சொல்லி ஜனநாயக நீரோட்டம் பற்றி பேசுகின்றன.

பின்னர் உணர்ச்சிகளை சூடேற்றும் பாடல்களை போட்டு வாக்கு வேட்டையும் நடத்துகின்றன.

ஆறிலும் சாவு- நூறிலும் சாவு என்ற பாடல் வரிகளை கேட்டுவிட்டு நண்பர் ஒருவர் சிரித்தார். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டோம்.

"ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்றால் 90ல் ஏனாம் இந்தியாவுக்கு ஓடினார்கள்?"

உடனே நாம் சொன்னோம்-

"அது 90ல் தானே அவர்கள் சொல்வதுஆறிலும், நூறிலும். இடையில் ஏன் என்றுதான்..."

இரு தமிழ் கட்சிகள் சுயேச்சைக் குழுக்களை நிறுத்தியிருக்கின்றன.

ஈ.பி.டி.பி. மீன் சின்னத்தில். ரெலோ வெளிச்ச. வீடு சின்னத்தில்.

திடீரென்று ஈரோஸ் என்று சொல்லிக் கொண்டு ஒரு குழு முளைத்துவிட, ரெலோ-ஈரோஸ் கூட்டு என்று ஒரு கதை.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் ரெலோவை விட தமக்கே அதிக செல்வாக்கு என்று காட்ட ஈரோஸ் என்ற பெயரில் உள்ள குழு வெளிச்சவீடு சின்னம் சீறி கீழே ஈரோஸ் என்று பெரிய எழுத்தில் எழுதத்தொடங்க ரெலோவுக்கு ஒரு சிக்கல்.

தமது செல்வாக்கால்தான் வாக்குகள் கிடைத்தன. ரெலோவுக்கு செல்வாக்கே கிடையாது என்று அந்தக் குழு கூறி விடப்போகிறதே என்ற கவலை.

தேர்தலில் வெல்ல முன்னரே சிறிய பிடுங்குப்பாடுகள். ஈரோஸ் என்ற பெயரில் உள்ள குழுவில் முக்கியமானவர் கவிஞன் என்று அழைக்கப்படுகிறார். அவர் திருமலை ஈரோஸ் பொறுப்பாளர் உள்ளே போக காரணமானவர்- அவருக்கும் புலிகளுக்கும் தொடர்பு என்று தகவல் கொடுத்தவர், "வெள்ளை வான் விவகாரத்தில்" சம்பந்தப் பட்டவர் என்று பேச்சுக்கள் அடிபடு கின்றன.

புலி வேட்டை என்று பலரை மிரட்டிய 'கவிஞன்' வாக்கு வேட்டைக்காக ஒரு புத்திசாலித்தனமான கதையை அவிழ்த்து விட்டுள்ளார். புலிகள்தான் தங்களை தேர்தலில் நிற்கச் சொன்னார்களாம். மக்களை மிகவும் மட்டமாக எடை போடுகிறார்கள்.

'தேர்தலில் நிற்பவர்கள் தேசத்துரோகக் குழுக்கள்' என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் சொல்லுகிறார்கள். கிழக்கில்தேர்தலில் நிற்குமாறு கூறி ஒரு தமிழ் இளைஞரை ரெலோ வற்புறுத்த, அவர் மறுக்க, சுட்டுக்கொன்றுவிட்டார்கள் என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் செய்தி வெளியிட்டுள்ளார்கள். இவர்களோ புலிகள்தான் தங்களை தேர்தலில் நிற்கச் சொன்னார்கள் என்று கூறுகிறார்கள். இதுதான் வேடிக்கை.

ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்தலாம். ஆறாயிரம் பொய் கூறிதேர்தல் திருவிழா நடத்தலாம் என்று நினைத்து விட்டார்களோ தெரியவில்லை.

ஈ.பி.டி.பி. மீன் சின்னத்தில் போட்டியிடுகிறது. மக்கள் என்றும் கடலில் வாழும் மீன்கள் தான் தமது வேட்பாளர்கள் என்று சொல்கிறது. அந்த மீன்களில் சில இந்தியக் கடலை நோக்கி ஓடிவிட்டு திரும்பிவந்த, அல்லது ஈ.பி.டி.பி. தூண்டில்போட்டு பிடித்து மீண்டும் கொண்டு வந்த மீன்கள்.

இரண்டு முஸ்லீம் வேட்பாளர்களும் ஈ.பி.டி.பி.பட்டியலில் இருக்கிறார்கள்.

முஸ்லிம் அமைச்சர் ஒருவர் திருமலை தேர்தல் பிரச்சாரத்தில் பேசும்போது ஒரு விஷயத்தை சொன்னார்.

"தமிழ் அமைப்புக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன. அவைகள் எல்லாம் நம்பக்கம்தான். யோசிக்க வேண்டாம்."

யூ.என்.பியை காரசாரமாக கண்டித்து நீதான் யூ.என்.பி. சார்பு என்று ஒருவரை ஒருவர் திட்டித் தீர்த்து அதன்மூலம் வாக்கு தேடும் முயற்சிக்கு அது நல்ல பதிலடி.

அதே சமயம் , யூ.என்.பியின் திருமலை நகர வேட்பாளர் தமிழ் அமைப்புக்களை பயங்கரவாதிகள் என்று பூச்சாண்டி காட்டுகிறார்.

திருமலையை காப்பாற்ற யூ.என்.பிக்கு வாக்களிக்குமாறு கூறுகிறார். ஆனால் யூ.என்.பி.யின் திருமலை நகரசபைக்கான பட்டியலில் நான்குபேர் மட்டுமே தமிழர்கள். பட்டியலில் கூட தமிழ் பெரும்பான்மையை காப்பாற்ற முடியாதவர் மண்ணை எப்படி காப்பாற்றப் போகிறார் என்று மக்கள் கேட்கிறார்கள்.

வாக்குக்கேட்டு அவர் உவர்மலைப் பகுதிக்கு போனபோது "வைத்தியம் செய்ய வரச்சொன்னால் வரமாட்டார். இப்போது வாக்கு கேட்டு வந்தீரோ?" என்று தாய் ஒருவர் ஏறிப்பாய்ந்ததாக ஒரு செய்தி.

யூ.என்.பியில் இருந்து பிரிந்துபோய் சுயேச்சைக்குழு ஒன்றுக்கு தலைமை தாங்குபவர் சுமதிபால. சின்னம் தராசு. பட்டியலில் இரண்டுபேர் மட்டுமே தமிழர்கள். "தமிழ் குழுக்களும், யூ.என்.பியும் ஒன்றுதான். நாம் மட்டுமே அரசுக்கு எதிராக தேர்தலில் நிற்கும் குழு" என்று சொல்லுகிறார். ஓரளவு உண்மையுள்ள வாதம். எனினும் அவர் யூ.என்.பியில் இருந்து பிரிந்ததற்குக் காரணம் திருமலை அமைப்பாளரோடு ஏற்பட்ட முரண்பாடே! கொள்கை முரண்பாட்டால் அல்ல என்ற விசயம்தான் உதைக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் வழமைபோல் முஸ்லிம் உரிமை பற்றிய பேச்சுக்களோடு இறங்கியிருக்கிறது.

பொதுவாக திருமலை நகரைப் பொறுத்தவரை தமிழ் அமைப்புக்கள் ஒன்றை ஒன்று நேரடியாக தாக்கிப் பேசுவதை பலர் விரும்பவில்லை. இரசிக்கவும் இல்லை. மக்களால் நன்கு இனம் காணப் பட்ட, மரியாதை பெற்ற அரசியல் ரீதியான வேட்பாளர்கள் என்று எவரையும் சுட்டிக் காட்ட முடியவில்லை. அப்படியான அரசியல் தலைமைத்துவத்தை தமிழ் கட்சிகள் வளர்க்கவும் இல்லை. வேட்பாளர்களை வளைத்துப் பிடிக்க தெரிந்தளவுக்கு, அரசியல் தலைமைத் துவத்தை வளர்க்கத் தெரியவில்லை என்று கவலைப்பட்டார் ஒரு முதியவர்.

வாக்குகளை பிரிக்கப்போகிறார்கள். வாக்காளர்களோ மெளனமாக இருந்து வேடிக்கை பார்க்கிறார்கள். தம்மை அதிகம் ஏமாளிகளாக்க நினைக்காத, உள்ளதில் ஓரளவு தரமானவர்களாகப் பார்த்து வாக்களிப்பார்கள் என்று தெரிகிறது.

■

மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் மட்டுமே போட்டியிடுவதாகவும், அதனை மட்டுமே உலகம் உற்று நோக்குவதாகவும் கூறும் ஈரோஸ் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் குழுவும், ரெலோ பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனின் ஆதரவு பெற்ற சுயேச்சைக்குழுவும் மட்டக்களப்பு மாநகரசபையில் மோதுகின்றன.

ஈரோஸ் என்று தம்மை அழைக்கும் குழு வெளிச்சவீட்டிலும், ரெலோ கருணாவின் குழுவினர் அரிக்கன் லாம்பு சின்னத்திலும் கேட்டு வாக்குகளை பிரிப்பதில் போட்டி போடுகிறார்கள்.

ரெலோ கருணாகரன் குழுவினரின் சுயேச்சைக்குழுவில் முக்கியமானவர் செழியன் பேரின்பநாயகம். பத்திரிகையாளர். இலக்கியவாதி. பெயரைக் கெடுத்துக்கொள்ளாதவர். வம்பு தும்புகளுக்கு போகாதவர் என்ற சாதகமான அம்சங்கள் அவருக்கு கை கொடுக்கின்றன.

யூ.என்.பி. மாநகரசபையைக் கைப் பற்றியே தீருவது என்று பம்பரமாய் வேலை செய்கிறது.

அதிகாரத்தில் உள்ள கட்சி என்பதால் துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் பல எதிர்தரப்பு வேட்பாளர்களால் கூறப் படுகின்றன.

படையினர், யூ.என்.பி. விடயத்தில் மென்போக்கையும், சார்புப் போக்கையும் கடைப்பிடிப்பதாகவும் கூறுகிறார்கள்.

புளொட் அமைப்பினர் மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் ரெலோ கருணாகரனின் சுயேச்சைக்குழுவை ஆதரிக்கிறார்கள்.

ஈ.பி.டி.பி. மட்டக்களப்பு மாநகரசபையில் யாரை ஆதரிப்பது என்று பகிரங்கமாகச் சொல்லவில்லை. ஏன் போட்டியிடவில்லை என்பதற்கு மட்டுமே சுவாரசியமில்லாத ஒரு அறிக்கை வந்தது. ஒற்றுமையைக் குலைக்க விரும்பவில்லை என்றார்கள். அது தேர்தலில் இருந்து முற்றாக ஒதுங்கி நின்று கொண்டு மட்டுமே கூறியிருக்க வேண்டிய கருத்து.

மட்டக்களப்பு-அம்பாறை பகுதிகளில் உள்ள பிரதேச சபைகள் சிலவற்றில் தராசு சின்னத்தில் ஈ.பி.டி.பி. போட்டியிடுகிறது.

■

மறந்தே விட்டேன். திருகோணமலையில் திடீரென்று சில சுவரொட்டிகள் தலை காட்டியுள்ளன.

"ஜனநாயகத்தை பாதுகாக்க வாக்களியுங்கள்."

"வாக்குகளை துப்பாக்கிகளால் பறிக்க முடியாது."

என்ற வாசகங்கள் காணப்படுகின்றன. அரசியல் கட்சிகள் எதுவும் அந்தச் சுவரொட்டிகளை ஒட்டியதாகத் தெரியவில்லை.

அப்படி ஒட்டியிருந்தால் கீழே தமது அமைப்பின் பெயரைப் போட்டிருப்பார்கள். அல்லது இப்படிக்கு தமிழ் மக்கள் என்றாவது போட்டிருப்பார்கள்.

அதுபோல் மட்டக்களப்பு-அம்பாறைப் பகுதிகளிலும் படையினர் தேர்தல் பிரச்சாரங்களை கவனிக்கின்றனர்.

'தேர்தலில் வாக்களிக்க ஊக்குவிப்போம்' என்ற கருத்துக்குள் பல விசயங்கள் அடக்கம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளைப் பகுதிக்கு அதிகாரத்தில் உள்ள ஒருவர் விஜயம் செய்திருக்கிறார். விஜயத்தின் நோக்கம் தேர்தல் பிரச்சாரம்.

அவர் திடீரென்று வந்துவிட்டதால் போட்டுக்கு வரவேற்க ஒரு மாலைகூட இல்லை.

## பிடுங்கிப் போகப்பட்ட பிள்ளையாரின் மாலை
## எம்.ஜி.ஆர். படப்பாடல்களுக்கும் மவுசு!

உடனே ஒரு யோசனை வர களுதாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு ஆயுதம் தரித்தவர்கள் ஓடிவந்தார்கள். பிள்ளையார் கோவில் மாலையை எடுத்துக் கொண்டு ஓடிப்போய் அவருக்கு போட்டு சமயோசிதமாக நடந்துகொண்டார்கள். தேர்தல் நேரம் என்றால் பிள்ளையாரும் கவனமாகத்தான் இருக்கவேண்டும்.

இன்னொரு சுயேச்சைக்குழு போத்தல்களில் கசிப்பு அடைப்பதில் படு தீவிர முயற்சியில் இருப்பதாகத் தகவல். அந்தக் குழுவில் உள்ள சிலர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் முன்பிருந்தவர்கள். இந்தியப்படைக் காலத்தில் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு சுருட்டியவர்கள்.

இப்போது வெளிமாகாண தலைமை வேண்டாம் என்கிறார்கள். வெளிநாட்டுப் படை இல்லாவிட்டால் தாம் உழைத்திருக்க முடியாது. வெளிநாட்டு மண் இல்லாவிட்டால் தாம் இன்றுவரை பிழைத்திருக்கவே முடியாது என்பதை எப்படி மறந்தார்கள்?

தேர்தல் திருவிழாக் காட்சிகளில் ஓட்டு மொத்தமாகத் தெரிவது வேடிக்கைகள்.

அதனால் சகலமானவர்களும் அறிய வேண்டிய உண்மை- தமிழர்கள் தங்கள் அரசியல் தலைமைத்துவத்தை பறி கொடுத்துவிட்டு தவிக்கிறார்கள் என்பது.

"ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை" ஆனால் இலுப்பைப்பூ கூட இல்லை. கிலு கிலுப்பைக் காரர்கள்தான் அதிகமாக தெரிகிறார்கள்.

## இது தேர்தல் திருவிழாவின் பின்!



"தேர்தலில் படுதோல்வி அடைந்துவிட்டபடியால், தீவிர சிந்தனைக்குப் பிறகு எங்கள் கட்சியை இன்றிலிருந்து மெல்லிசைக்குழுவாக மாற்றிவிட்டோம் என்பதைத் தாழ்மையுடன் கூறிக்கொள்கிறோம்...!"

## பிரச்சாரம் செய்யமறுத்தவர் கொலை?

மட்டக்களப்பில் கரடியனாற்றுப் பகுதியில் 19 வயதான தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த 10ம் திகதி இரவு தமிழ் இயக்கமொன்றால் சுட்டுக்கொல்லப் பட்டதாக யாழ்ப்பாணத்தில் புலிகள் கூறியுள்ளனர்.

கடந்த 16ம் திகதி புலிகளின் குரல் வானொலியில் வெளியிடப்பட்ட அந்தச் செய்தியில், தமிழர் அமைப்பொன்று தமக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ய வருமாறு அந்த இளைஞரை அழைத்ததாகவும், அவர் மறுப்பு தெரிவித்தமையால் இரவு 11 மணியளவில் வந்த அந்த இயக்கத்தினர் அவரை சுட்டுக்கொன்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசத்துரோகக் குழுவால் அப்பாவி இளைஞர் பலி என்று புலிகளின் குரல் குற்றம் சாட்டியது.

## ஐ.சி.ஆர்.சி.புலிகளுக்கு உதவியா? மறுக்கிறார் யாழ் பிரதிநிதி!

யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் 'ஐ.சி.ஆர்.சி' புலிகளுக்கு உதவி செய்து வருவதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் தெற்கில் கூறப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.சி.ஆர்.சி பிரதிநிதி மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர். "நாம் எவருக்கும் ஆதரவளிக்க வில்லை. இன, மத வேறுபாடின்றி ஜெனிவா உடன்படிக்கையின்படி வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடமையாற்றுகிறோம்" என்று அவர் கூறியுள்ளார்.

## சோளத்திலிருந்து பாண்! புதிய கண்டுபிடிப்பு!!

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினர் ஏற்கனவே சோளம், அரிசி போன்றவற்றில் இருந்து திரவ குளுக்கோஸ் தயாரிக்கும் முறையை கண்டு பிடித்திருந்தனர்.

தற்போது பாண் தயாரிக்கப்பயன்படும் ஈஸ்ற் சோளத்திலிருந்து எடுக்கப்படும் முறையை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினர் கண்டுபிடித்துள்ளனர். ●

## நம்பிக்கை இழப்பு!

இவ்வாண்டு இனப்பிரச்சனை தீரும் என்ற நம்பிக்கையை யாழ் மக்கள் இழந்துவிட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பொறுப்பதிகாரி டொமினிக் டுபோர் தெரிவித்துள்ளார். ●

## படகு விபத்தில் பலியானோர் குடும்பங்கள் அவதி! நஷ்டஈடு உடன் கொடுக்க கோரிக்கை!!

(திருமலை நிருபர்)

"கடந்த வருடம் ஜனவரியில் இடம்பெற்ற திருமலை -மூதூர் படகு விபத்தில் இறந்த நாற்பதுக்கும் அதிகமானவர்களது குடும்பங்களுக்கு இதுவரை எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படவில்லை. வறிய குடும்பங்களைச் சேர்ந்த இவர்களுக்கு உடனடியாக நஷ்டஈடு கொடுக்க நடவடிக்கை எடுத்து உதவுங்கள்"

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை சமூக சேவகரும் சமாதான நீதவானுமாகிய திரு.எஸ்.குணநாயகம், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

"இதற்கென விசேடமாக நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணைகள் முடிவடைந்துவிட்டபோதும் இன்னமும் நஷ்டஈடு வழங்கப்படாதது கவலைக்குரியது. உழைப்பாளி உறுப்பினர்களை இழந்துவிட்ட குடும்பங்களில் அகோர வறுமை தாண்டவமாடுகிறது" என்றும் அம்மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் பிரதிகள் வர்த்தக கப்பற்துறை ராஜாங்க அமைச்சர் எம்.ஈ.எச்.மகரூப் அவர்களுக்கும் மாவை சேனாதிராசா, பா.உ. அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## விளம்பரப் பகுதி



**மலையாள மாந்திரீகம்**

கொழும்புவாழ் நகரவாசிகளின் நலனைக் கருதி ஒவ்வொரு மாதமும் (எம்மாதமும்)
வினோத் இன்
இல.33, மூன்றாவது மாடி
சிறீ குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.

"VINNODH INN"
No.33, 3rd Floor
Sri Gunanantha Mawatha
Kotahena

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வழியாகவும், ஸ்ரீ குணானந்த மாவத்தை உபதபால் கந்தோர் முன்பாகவும் வீற்றிருக்கும் எமது துர்க்கையம்மனை நாட நினைத்ததை நினைத்தவாறு நினைத்தபோதே எமது மலையாள உச்சாடன பீடத்திற்கு வந்து உங்களுக்கு பில்லியா, சூனியமா, கணவன் மனைவி பிணக்கா, கல்யாணத் தடையா, காதலில் படுதோல்வியா, தீரா நோயா, ஆஸ்துமாவா? வியாபார விருத்தி இல்லையா, பொருளாதாரத் தங்கு தடையா? அச்சொட்டான விதியின் சுவடி ஜாதகங்கள் எதுவானாலும்-

நிர்வாக அமைப்போ ஆலோசனையோ- 072-27024
மாந்திரீகக் குரு: 072-26088
வெளிநாட்டுத் தொடர்பு: 078-61933, 052- 2508, 052- 3093
நிர்வாகக் குழு: 072- 27098
கடிதத் தொடர்பு: ஜோதிட மாந்திரீக தத்துவஞானி P.K.சாமி,
தபால் பெட்டி 33, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
நுவரெலியா, சிறீலங்கா.

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088,*
*078-61933, 078-71243.*

**வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்**



### முகவர்கள் தேவை

**கஹவத்தை, தியத்தலாவ, தெமோதர, நொச்சியாகம, மினுவாங்கொட, எல்பிட்டிய, மீரிகம, மருதங்கடவெல, பெரிய குளம், ரதிகம, றம்படகல்ல, றங்கல, ஹமம்பொல, கரந்தெனிய.**

மேற்காணும் ஊர்களுக்கு தினமுரசு விற்பனை செய்யக்கூடிய முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

CIRCULATION MANAGER
THINAMURASU
**88/14, Somadevi Place,**
**Kirilapone, Colombo-6.**
Phone- 820265


தருவது **தமிழகச் செய்திகள்** ஏழுமலை

# புலிகளா தந்தனர் பணம்?

# பொதுக்கூட்டங்களில் கேட்கிறார் வை.கோ.!

**த**னிக்கட்சி துவங்கும் அவசியமே கிடையாது. தி.மு.க கோபாலபுரத்து குடும்பச் சொத்தல்ல என்பது வை.கோபால் சாமியின் வாதம்.

தி.மு.க. இரண்டாக பிளவுபட்டுப் போனதில் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள் இனிவரும் தேர்தல்களில் வெளிப்படும்.

"என் காரிலே ஒரு ரயர் காற்றுப்போய்விட்டது. கழற்றி பின் டிக்கிக்குள் போட்டிருக்கிறேன். அதனை ஒட்டுப்போட்டுப் பாவிப்பதா எறிந்து விடுவதா? என்று இன்னும் முடிவு செய்யவில்லை" என்று முன்னர் கலைஞர் கருணாநிதி பேசியிருந்தார்.

காற்றுப்போன ரயர் என்று வை.கோபால்சாமியை கலைஞர் சித்தரித்தது பொருத்தமில்லை என்பதை வை.கோபால்சாமிக்கு திரண்டுவரும் ஆதரவு காட்டுகிறது.


"இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிக்கிறோம். ஆனால் தீவிரவாதத்தை ஆதரிக்கவில்லை" என்று வை.கோ இப்போது பேசுகிறார்.

"புலிகளுக்கு ஆதரவாளர் வை.கோ" என்ற கருத்தை தணிக்கவே அவர் அப்படிப் பேசவேண்டியதாகிவிட்டது.

அரசியலில் நேர்மை, பொதுவாழ்வில் தூய்மை, இலட்சியத்தில் உறுதி என்ற முழக்கங்களை வை.கோ முன்வைத்துள்ளார்.

"தமிழக அரசியலின் தலைவிதியை நிர்ணயிக்கும் தலைமைச் சக்தியாக நாங்கள் இருப்போம்" என்று வை.கோபால்சாமி தன்னம்பிக்கையோடு கூறிவருகிறார்.

கருணாநிதியே என்மூச்சு. அவர்தான் என்றும் என் தலைவர். என்று உணர்ச்சி பொங்கப்பேசியவர் வை.கோ.



வை.கோ.

புலிகளோடு இணைந்து தன்னைக் கொல்ல வை.கோ திட்டமிட்டுள்ளதாக கலைஞர் கூறியபோது தலைவன்-தொண்டன் உறவுகள் யாவும் பொய்யாகிப் போய்விட்டன.

துரோகி என்ற குற்றச்சாட்டு ஒரு விசுவாசமான தொண்டனை விசுவரூப மெடுக்கச் செய்துவிட்டது என்றே அவதானிகள் கூறுகின்றனர்.

தி.மு.க. என்ற பெயரை விட்டுக்கொடுக்க வை.கோ அணி தயாராக இல்லை.

"எம்.ஜி.ஆர், ஈ.வெ.கி. சம்பத் போல தனிக்கட்சி ஏன் தொடங்கவில்லை என்று என்னைக் கேட்கிறார்கள். எங்களுக்கு ஒன்றும் ஆலோசனை வேண்டாம். நாங்கள் ஏன் புதுக்கட்சி தொடங்கவேண்டும்? அண்ணா உருவாக்கிய தி.மு.கவை கோபாலபுரத்து குடும்பச் சொத்தாக்க அனுமதிக்கமாட்டோம். ஒவ்வொரு தொண்டனும் தன்னை வை.கோ என்று நினைத்துச் செயல்படுவான்" என்று வை.கோபால்சாமி பேசியிருக்கிறார்.

"எனக்கு ஜெயலலிதா பணம் கொடுக்கிறார். புலிகள் பணம் கொடுக்கிறார்கள் என்று கலைஞர் கூறுகிறார்." என்று கூறிய வை.கோ கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து "நீங்கள் அதனை நம்புகிறீர்களா?," என்று கேட்கும்போது கூட்டத்தினர் "இல்லை. இல்லை" என்று குரல் கொடுக்கின்றனர்.

வை.கோ. வளர்ச்சியை கலைஞர் அலட்சியம் செய்துவிடமுடியாது.

# வித்தியாசமான சுவரொட்டி!

## ரஜனி பக்தர்கள்




அமரர் எம்.ஜி.ஆருக்குப் பின்னர் ரஜனிகாந்துக்குத்தான் அதிகளவு இரசிகர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பது அறிந்தவிடயம். எம்.ஜி.ஆர். படங்களுக்கு கற்பூர ஆரத்திகள் எடுத்து இரசிகர்கள் தமது பக்தியை வெளிக்காட்டுவது வழக்கம். அதேபோல் இப்போது ரஜனிக்கும்! தமிழ்நாட்டில் திருநெல்வேலி பகுதியில் உள்ள பூர்ணகலா என்ற திரையரங்கில் ரஜனிகாந்த் நடித்த 'தளபதி' படம் விசேஷ காட்சியாக திரையிடப்பட்டது. அதனை முன்னிட்டு ரஜனி இரசிகர்கள் சிலர் வெளியிட்ட சுவரொட்டி தான் இது. இவ்வாறான இரசிகர்கள் இருப்பதால்தான் ரஜனி அரசியலுக்கு வந்தால் வெற்றி நிச்சயம் என்று நினைக்கிறார்களோ?

## விமோசனம் பெறாத வீதிகள்

அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள கியுலேக்கடை, அசரிக்கூகொட்டியாவை இக்கிராமங்களுக்குச் செல்லும் வீதிகள் மேடும் பள்ளமுமாக மிகவும் படுமோசமான நிலையை அடைந்துள்ளது. இவ்வீதியில் நடந்துகூட செல்லமுடியாத நிலைமை. மழைகாலங்களில் இரண்டு மூன்றடி புதைகின்றது. ஆடுமாடுகள் கூடசெல்ல முடியாத நிலைமை! அவ்வளவு மோசமாக இவ்வீதிகள் காணப்படுகின்றன. இவ்வீதிகளால் மக்கள் செல்லமுடியாமல் அல்லோல கல்லோலப்பட்டு பெரும் தவிப்பில் காணப்படுகின்றார்கள்.

ஆகவே இவ்வீதிகளை கூடிய சீக்கிரத்தில் புனரமைக்கும்படி உரிய அரசாங்க அதிகாரிகளை பணிவாய் வேண்டுகின்றேன்.

**எஸ்.ஐ.நிலாம்தீன்**
**கட்டுகெலியாவை.**

### புகார் பெட்டி

## நூலகத்திற்குள் வரும் துர்வாடை!

மட்டக்களப்பு வாசிகசாலைக்குச் சென்றால் சற்றுநேரம் இருந்தும்கூட பத்திரிகை வாசிக்க முடியாதுள்ளது. இதம் தரும் கடற்காற்று வாசிகசாலையை ஊடறுத்துச் சென்றாலும் கூடவே வாசிக சாலை ஓரமாக ஆற்றுப் பக்கத்தில் கழிக்கப்படும் சிறுநீர் துர்வாடையும் கலந்தே போகிறது. இங்கு வரும் வாசகர்களுக்கு சிறுநீர் கழிக்க மலசலகூட வசதியில்லாத காரணத்தால் அவர்கள் இவ்வசதிக்காக வாசிகசாலையின் ஆற்றுப் பக்க ஓரப் பகுதியையே பயன்படுத்துகின்றனர். எனவே இந்த அசௌகரியத்தை தடுக்க சம்பந்தப் பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டுமென்று வாசகர்கள் சார்பாக வேண்டுகின்றோம்.

**ஏ.எச்.ஏ.ஹுசைன்**
**ஏறாவூர்.**

## பிரயாணிகள்-பஸ் நடத்துநர்கள் கவனிக்கவும்!

தனியார் மற்றும் மக்கள் மயப்படுத் தப்பட்ட போக்குவரத்து பஸ்களில் "கர்ப்பிணிப் பெண்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது" என்ற அறிவித்தல் அடங்கிய போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. இவ்வறிவித்தல் தற்போது மாயமாய் மறைந்து இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

இன்று நடைமுறையிலுள்ள அனுபவங்களை குறிப்பிட விரும்புகிறேன். வேலைக்கு அல்லது வேறு தேவைகளுக்காக பிரயாணம் செய்யும் கர்ப்பிணிப் பெண் களுக்கு யாரும் தற்போது எழுந்து இடம் கொடுப்பதில்லை. அதிலும் பார்க்க இக்கர்ப்பிணிப் பெண்கள் நிற்பதை பார்த்துவிட்டு தலையை குனிந்துகொண்டு ஆசனத்தில் அமர்ந்துவரும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். நல்ல மனம் படைத்த ஓரிருவர்களைத் தவிர இப்பெண்களுக்கு வேறு யாரும் இடம் கொடுப்பதில்லை. இவற்றை கண்ணால் பார்க்கும் போது அடைகின்ற வேதனை எவ்வளவு என்று கூறமுடியாதுள்ளது. உதாரணமாக சொல்லப்போனால், ஒரு கர்ப்பிணிப் பெண் பஸ்ஸில் பிரயாணம் செய்ய ஆரம்பித்த நேரத்தில் இருந்து குறிப்பிட்ட தரிப்பிடம் வரும்வரை நின்று கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. நடத்துநர்களும் இவர்களுக்கு ஆசனம் பெற்றுக்கொடுக்க அக்கறை செலுத்துவதும் இல்லை. இவையனைத்தையும் பார்க்கும்போது இவர்களும் தாயின் வயிற்றில் பிறந்தார்களா என்ற சந்தேகமும், இவர்களது தாய், அல்லது, சொந்த சகோதரி, மனைவி போன்றவர்களுக்கு (கர்ப்பிணி நிலையில் உள்ளவர்கள்) எழுந்து ஆசனம் கொடுப்பார்களா என்ற கேள்வியும் மனதில் எழுகின்றது.

ஆகவே, கடந்த காலங்களைப் போலவே எதிர்காலத்திலும் மேற்குறிப்பிட்ட பஸ்வண்டிகளில் "கர்ப்பிணிப் பெண்களுக்கு ஆசனம்" ஒதுக்குவதை சட்டரீதியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென போக்குவரத்து அமைச் சையும், சுகாதார மகளிர் விவகார அமைச்சையும் கேட்டுக்கொள்வதுடன் இச்செயலானது 1994ம் ஆண்டில் "சர்வதேச மகளிர் தினத்தில்" பெண் சமுதாயத்தை கௌரவப்படுத்தும் ஒரு செயலாகவும் அமையும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**திருமதி.சரஸ்வதி ஜெயராஜ்**
**கொழும்பு-15.**

## மீள்குடியேற்ற பாடசாலையில் கூரை இல்லை! பற்றாக்குறைகளை கவனிக்க யாருமற்ற நிலை!!

**(காரைதீவு நிருபர்)**

சென்ற ஆண்டு மீளக்குடி யமர்த்தப்பட்ட மல்வத்தை, கணபதிபுரம், புதுநகரம், மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களின் பாடசாலைகள் கடந்த மூன்று வருட அஞ்ஞாத வாசத்தின்பின்பு மீண்டும் சொந்த இடங்களில் ஆரம்பமாகியுள்ளன.

ஆனால் அவை பல வசதியீனங்களுக்கு மத்தியில் ஆரம்பமானதென்பது கசப்பான உண்மையே. சம்மாந்துறைக் கல்விக்கோட்டத் திற்குள் இயங்கும் மேற்படி மல்வத்தை விபுலானந்த வித்தியாலயம், புதுநகரம் அ.த.க.பாடசாலை, ஆகிய பாடசாலைகளே கூரை இல்லாமல், தளபாடங்களில்லாமல் ஆரம்பிக்கப்பட்டது.

சம்மாந்துறைக் கோட்டத்திலுள்ள கணிசமான தமிழ்ப் பாடசாலைகளை கவனிக்க ஓர் தமிழ் இணைப்பாளராவது இல்லாதது வேதனைக்குரியதே.

மல்வத்தை விபுலானந்த வித்தியாலயம் ஆண்டு 11 வரையுள்ள பாடசாலை. அங்கு ஒரேயொரு கட்டிடமே உண்டு. இரு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தளபாட வசதி இல்லை. ஆசிரியர் களுட்பட மாணவர்கள் தரையிலிருந்து பாடம் கற்பிக்கப்பட வேண்டியுள்ளது. புதுநகரப் பாடசாலைக்கு கூரையே இல்லை. வானம்பார்த்த பூமியிலிருந்து கல்வியைத் தொடரும் அவல நிலை. நிலமை அம்பாறை மாவட்ட புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளர் ஏ.ஏ. பாவா, மல்வத்தை அதிரடிப்படை பொறுப்பதிகாரி ஐ.பி.சமரநாயக்க ஆகியோருக்கு தெரியவர உடனடியாக நடவடிக்கையிலீடுபட்டுள்ளனர்.

## எடுத்துக்கூறியும் எவரும் கேட்கவில்லை!

கல்லடி வட்டதெனிய பாதையில் தவுலகலவிற்கு அப்பால் வட்டதெனிய வரையும் பாதை மோசமாக உள்ளது. இப்பாதையால்தான் உடுநுவர பிரதேச சபைக்கும் தவுலகல பொலிஸ் நிலையம், வைத்தியசாலை போன்ற இடங்களுக்கும் போக வேண்டியுள்ளது. பாதை எல்லா இடங்களும் குன்றும் குழியாகவும் உள்ளது. அவசர தேவைக்காக இப்பாதையால் நோயாளிகளை கண்டி, பேராதனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதாயின் 1 1/2 மணித்தியாலயம் பிடிக்கிறது. இதனால் அவசர நோயாளிகள் நிலை மோசமடையவும் இப்பாதை காரணமாக உள்ளது.

வட்டதெனிய வெலம்பொடை கவ்வாத பட்டுப்பிட்டியா, தவுலகல, பிலிமதலாவை போன்ற பகுதி மக்களும் இப்பாதையால்தான் நாள்தோறும் பயணம் செய்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கண்டியிலிருந்து பேராதனை தவுலகல வரும்வரை பாதை நன்றாக உள்ளது. தவுலகல முதல் வட்டதெனிய வரும் பாதை இவ்வாறு மோசமாக உள்ளது. தவுலகல முதல் வட்டதெனிய வரையும் இப்பாதையை செப்பனிட உடுநுவர பிரதேச சபையோ மத்திய மாநகரசபையோ நடவடிக்கை எடுப்பதுபோல் இல்லை. பலமுறை எடுத்துக்கூறியும் பலனில்லை. புதிய நகர அபிவிருத்தி அமைச்சாவது நடவடிக்கை எடுக்குமா? தினமுரசு வாரமலர் புகார் பெட்டிமூலம் வெலம்பொடை ஊர் மக்கள் கோரிக்கை விடுவது கைகூடுமா?

**எம்.எஸ்.எம்.லரீப்-வெலம்பொடை.**

## இருள் அகற்ற கோரிக்கை!

**(இராகலை நிருபர்)**

வலப்பனை தேர்தல் தொகுதி யிலுள்ள அல்மா-கும்பால்கம ஆகிய இடங்களுக்கு இடையில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்குமாறு சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி. ரேனுஹா ரணவீரவுக்கு வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் திரு.கே. சின்னையா எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வைத்தியசலையில் மூன்று வார்டுகள், 40 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் மின்சார வசதிகள் இல்லாதது பெரும் குறை யாகவுள்ளது. இதனால் நோயாளிகள் பல கஷ்டங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என மேலும் அக்கடி தத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

**நாரதர்**

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# உள்ளூராட்சிசபைத் தேர்தல்களும் தமிழ்கட்சிகளின் பிரசாரங்களும்

எதிரி யார்? நண்பர் யார்? ஆயுதப் போராட்டத்தில் என்றால் என்ன, ஜனநாயக அரசியல் அரங்கில் என்றால் என்ன, மிக முக்கியமாக விடை காணப்பட வேண்டிய கேள்வி அதுதான்.

துரதிஷ்டவசமாக தமிழ் அமைப்புக்கள் அக் கேள்விக்குரிய தெளிவான விடையை இதுவரை கண்டறியவில்லை.

கிழக்கிலும், வவுனியாவிலும் நடைபெறுகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ் அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்ற நடைமுறைகள் அதனை மீண்டும் மெய்ப்பித்துள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சனை விடயத்தில் சிங்கள-தமிழ்-முஸ்லீம் கட்சிகளுக்கிடையே ஒருமித்த கருத்து ஏற்படவேண்டும் என்று கூறப்படுகிறது.

அது அத்தனை சுலபமான விசயமல்ல என்பதனை தமிழ் கட்சிகள் மத்தியில் நிலவும் போட்டா போட்டிகளே வெளிப்படுத்தி விடுகின்றன.

தமிழர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் விடயத்தில் தமிழ் கட்சிகள் இடையேகூட ஒருமித்த கருத்து ஏற்படுவது குதிரைக் கொம்பாகிவிட்டது.

சாதாரணமான உள்ளூராட்சித் தேர்தலில்கூட குறைந்தபட்சமான புரிந்துணர்வுகூட ஏற்படவில்லை.

ஒன்று சேர்ந்து தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும்கூட ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு வாக்குகளை பிரிக்காத வகையிலான மோதல் தவிர்ப்பு நிலைக்குக்கூட வரமுடியவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்படும் முன்னரே, எக்ஸ்ரே ரிப்போட்டில் தமிழ் கட்சிகள் இணைந்து போட்டியிடும் சூழல் இல்லை என்று சொல்லியிருந்தேன்.

அதனைச் சொல்ல பெரிய அரசியல் ஞானம் ஒன்றும் தேவையில்லை.

தமிழ் கட்சிகள் பலவற்றின் குறுகிய வட்டப் பார்வைகளையும், அதனடிப்படையிலான நடவடிக்கைகளையும் புரிந்து கொண்டாலே போதும்.

மாற்றங்களை உருவாக்கவேண்டும். பொதுவான பிரச்சனைகளை பொதுமைப் படுத்தி தகுந்த தீர்வுகாண பரந்துபட்ட ரீதியில் பலத்தை ஒன்றுதிரட்டவேண்டும் என்பனவெல்லாம் மறந்துபோன விசயங்கள்.

ஒவ்வொரு பிரச்சனையும் அந்தந்த இயக்கத்தின் சொந்த நலன்களின் அடிப்படையில்தான் நோக்கப்படுகின்றன.

தேர்தல் என்றவுடன் எப்படியாவது யாரையாவது வேட்பாளர்களாக நிறுத்தி 'எமது கட்சியும் தேர்தலில் நிற்கிறது. எங்களுக்கும் ஆட்கள் இருக்கிறார்கள்' என்பதை வெளிப்படுத்தவே விரும்பினார்கள்.

தேர்தல் நடைபெறும் சூழல் என்ன? தேர்தல் நடத்தப்படுவதன் காரணம் என்ன? தேர்தலில் பங்குகொள்வதாயின் வெளிப்படுத்த வேண்டிய நிலைப்பாடு, அரசியல் இலக்கு என்ன? யாரோடு அணிசேர வேண்டும்? யாரைத் தனிமைப்படுத்த வேண்டும்?

பொதுவாக தமிழ் இயக்கங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கையீனங்களும், வெறுப்புகளும் உருவாகிவரும் காலகட்டத்தில் ஜனநாயக அரங்கை பயன்படுத்தி மக்களுக்கு நம்பிக்கையூட்ட என்ன செய்யவேண்டும்?

இவ்வாறான அடிப்படைக் கேள்விகளுக்கு விடைகண்டுபிடிக்கவே பல கட்சிகளுக்கு நேரமிருக்கவில்லை.

முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலை வடக்கு-கிழக்கில் வீசியபோது தென்னிலங்கைக் கட்சிகளுக்கு அங்கே தமது பட்டியலுக்கு வேட்பாளர் தேடுவதே பெரிய கஷ்டமான காரியம்.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் தமது சார்பில் போட்டியிட யாராவது முன்வந்தாலே போதும் என்று கதவைத் திறந்து வைத்திருந்தன. பலரது வீட்டுக் கதவுகளை தட்டி அழைப்பும் விடுத்தன.

ஆனால், இப்போது நிலமை தலைகீழாகி விட்டது. தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் தமிழ் கட்சிகள் நான் முந்தி நீ முந்தி என்று வெள்ளைத்தாளுடன் வீட்டுக்கதவுகளை தட்டத் தொடங்கிவிட்டன.

கொள்கையே இல்லாதபோது கொள்கை உடன்பாடு பற்றிய பேச்சே கிடையாது. போட்டியிட சம்மதமானால் ஒரு கையெழுத்துப் போடுங்கள் போதும் என்று வெள்ளைத் தாள்கள் நீட்டப்பட்டன.

ஊருக்குள் ஒரளவு மரியாதை உள்ளவர்கள் நிலை தர்மசங்கடமாகிவிட்டது.

ஒரு அமைப்பு வந்து பேசிவிட்டுப் போன கையோடு இன்னொரு அமைப்பு வந்து தம்மோடு சேருமாறு அன்பான வேண்டுகோள் விடுக்கும்.

மறுபுறம் புலிகளது மிரட்டல்கள். தேர்தலில் குதித்தால் தேசத்துரோகம் என்ற அறிவித்தல். எச்சரிக்கை.

ஊருக்குள் மரியாதை இருப்பதே கெட்ட நேரமாகிவிடுமோ என்று சிலர் பயப்பட வேண்டியதாகிவிட்டது.

இவ்வாறான வெட்டி ஓடல் விவகாரங்களால் அரசியல் ரீதியில் விவேகமான முடிவுகளுக்கு எந்தவொரு அமைப்பாலும் வரமுடியவில்லை.

சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ற கதையாக அவசரப்பட்டு அறிக்கைகள் விட்டார்கள்.

சுயேச்சைக்குழுக்களை நிறுத்தினார்கள். அது மட்டுமல்ல ஒரே இயக்கத்தின் பெயரில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான அறிக்கைகள். பேச்சுக்கள். செயல்பாடுகள்.

வவுனியாவில் புளொட்டும், ரெலோவும் தேர்தலில் மோதிக்கொள்கின்றன. ஆனால் கிழக்கில் - மட்டக்களப்பில் ரெலோவின் முன்னாள் செயலதிபரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோ.கருணாகரன் புளொட் உறுப்பினர்களோடு உறவைப் பேணுகிறார். அவரது முயற்சியில் உருவான சுயேச்சைக் குழுவுக்கு புளொட் ஆதரவும் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில் வெளிச்சவீடு சின்னத்தைப் பெற ரெலோ கருணாகரனின் ஆதரவுபெற்ற குழுவும், ஈரோஸ் என்று கூறிக்கொள்வோரின் ஆதரவு பெற்ற குழுவும் போட்டா போட்டியில் இறங்கின.

இறுதியில் பூவா தலையா போட்டுப் பார்த்து ஈரோஸ் என்று தம்மைக் கூறிக் கொள்வோரின் குழுவுக்கே வெளிச்சவீடு சின்னம் கிடைத்தது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெளிச்சவீடு சின்னத்திற்கு அதிக வாக்குகள் கிடைத்தமையால் இம்முறை அதனை தமது சின்னமாகப் பெற பலத்த போட்டிகள்.

தமிழ்நாட்டில் இரட்டை இலைச் சின்னத்திற்கு ஜெயலலிதாவும் ஜானகி அம்மாவும் அடிப்பட்டதுபோல வெளிச்ச வீட்டுச் சின்னத்திற்கு அடிபாடுகள்.

இரட்டை இலைச் சின்னத்திற்குக்கூட ஒரே கட்சியில் இருந்து பிரிந்தவர்கள்தான் அடிபட்டுக்கொண்டார்கள். இங்கே வெளிச்ச வீட்டுச் சின்னத்திற்கு பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தோர் அடிபட்டுக்கொண்டதுதான் வேடிக்கை.

சென்ற பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்த பழக்கதோசத்தில் இம்முறையும் வாக்காளர்கள் புள்ளடிபோட்டுவிடுவார்கள் என்று ஒரு தந்திர ஆசைதான் போட்டிகளின் காரணம்.

கொள்கைகள், அரசியல் ரீதியான தன்னம்பிக்கைகள் இல்லாமல் போகும்போது அதிஷ்டத்திலும் வாக்காளர்களது அப்பாவித் தனங்களிலும் நம்பிக்கை வைத்துப் பார்க்கிறார்கள்.

இத்தனைக்கும் தேர்தலில் போட்டியிடும் தமிழ் கட்சிகளுக்கு தேர்தல் திணைக்களத்தால் ஏற்கனவே ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட சின்னங்கள் உள்ளன.

ஈழவர் ஜனநாயக முன்னணிக்கும் (ஈரோசின் பிரிவு) ஒரு சின்னம் இருக்கிறது.

எனினும் தமது கட்சிகளுக்கான சின்னங்களின் மீது அவற்றுக்கு நம்பிக்கையில்லை. எனவே சுயேச்சைக் குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்களில் ஒன்றான வெளிச்ச வீட்டுக்கு அடிபடும் நிலை ஏற்பட்டது.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு.கோ.கருணாகரனுக்கு தமது கட்சி சின்னத்தின் மீது மட்டுமல்ல, தமது கட்சியில் கூட நம்பிக்கை கிடையாது. ரெலோ என்ற பெயரையே உச்சரிக்கத் தயங்குகிறார்.

திருகோணமலையில் ரெலோ சார்பான குழுவுக்கு வெளிச்சவீடு சின்னம் கிடைத்துள்ளது. திடீரென்று ஈரோஸ் என்ற பெயரில் ஒரு பிரசுரம் வந்து மக்களை குழப்பிவிட்டது. ஆக, திருமலையில் வெளிச்சவீடு சின்னத்தில் தேர்தலில் நிற்பது யார்? ஈரோசா, ரெலோவா என்பதுதான் குழப்பம்.


திருகோணமலையில் ஈரோசும் ரெலோவும் கூட்டாகப் போட்டியிடுகிறதா? அப்படி எனில் மட்டக்களப்பு மாநகர சபையில் ரெலோவும் ஈரோசும் மோதுவது ஏன்? திருமலையில் வெளிச்சவீடு சின்னத்தில் நிற்கும் சுயேச்சைக்குழுவுக்கு சூரியமூர்த்தி என்பவரே தலைமை தாங்குகிறார். அவர் ரெலோவும் அல்ல. ஈரோசும் அல்ல. ஈ.என்.டி.எல்.எவ் என்னும் அமைப்பில் இருந்தவர்.

இந்த ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பை இந்தியாவின் கூலிகள் என்று கூறியது ஈரோஸ் அமைப்பு. இப்போது அதன் முக்கிய உறுப்பினர் எவ்வாறு வேட்பாளராக்கப் பட்டார்?

ஈ.பி.டி.பி திருகோணமலையில் மீன் சின்னத்தில் தனது சுயேச்சைக் குழுவை நிறுத்தியுள்ளது.

அதன் வேட்பாளர்களில் ஒருவராக நிறுத்தப்பட்டுள்ளவர் பீற்றர். இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் வரதராஜப்பெருமாளின் செயலாளராக இருந்தவர். ஈ.பி.டி.பி.க்கு வரதராஜப் பெருமாளைப் பிடிக்காது. அவரது செயலாளராக இருந்தவரைப் பிடித்துவிட்டது. வரதராஜப்பெருமாள் நாட்டை விட்டு வெளியேறும்வரை அவருக்கு விசுவாசமாக இருந்தவரான பீற்றர் இப்போது "கொள்கை முரண்பாடு" காரணமாக விசுவாசத்தை துறந்து விட்டார்.

வவுனியாவில் மட்டுமே தேர்தல் நடத்தக்



கூடிய சூழல் உண்டு என்று அறிக்கை விட்டது புளொட் அமைப்பு. இப்போது கிழக்கில் தேர்தலில் நிற்கும் சுயேச்சைக் குழுக்களுக்கு ஆதரவு தெரிவித்து விளம்பரம் செய்துள்ளது.

அங்கும் தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இப்போது ஏற்பட்டுவிட்டது என்று புளொட் அமைப்புக் கருதுகிறதோ என்று தெரியவில்லை.

இவ்வாறு பொதுவாகவே தமிழ் கட்சிகள் ஒன்றை ஒன்று முந்தி ஓடும் அவசரத்தில் தாமே குழம்பிக்கொண்டுள்ளன.

ஒரு தேர்தல் நடந்து முடிவடைவதற்கிடையில் பல்வேறு நிலைப்பாடுகள்.

தமிழ் அமைப்புக்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுவது ஒரு புறம் இருக்கட்டும்.

முதலில் அந்தந்த அமைப்புகளுக்குள் ஒற்றுமை ஏற்படவேண்டும்.

ஈரோஸ், ரெலோ என்ற இரு அமைப்புக்களின் பெயரில் பல குழுக்கள் வெவ்வேறு விதமான நிலைப்பாடுகளை வெளியிட்டு வருகின்றன.

ரெலோ ஒற்றுமை பற்றிப் பேசுகிறது. ஆனால் ரெலோவுக்குள் கூட ஒற்றுமை இல்லை. பின்னர் எப்படி தமிழர்களை ஒற்றுமைப்படுத்தப் போகிறார்கள்.

இன்னொரு விடயமும் கவனிக்கத்தக்கது. புலிகள் பற்றிய கடுமையான விமர்சனங்களை தேர்தலில் போட்டியிடும் தமிழ் அமைப்புக்கள் தவிர்த்துக்கொண்டுள்ளன.

ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள பிரசுரத்தில் மட்டுமே புலிகள் பற்றிய கண்டனம் ஒரு பந்தியில் மட்டும் தலைகாட்டியுள்ளது. அதிலும் வழமைபோன்ற "பாசிசப் புலிகள்" என்ற பதப் பிரயோகங்கள் காணப்படவில்லை.

திருகோணமலையில் ஒரு குழுவினர் தமது பிரச்சாரத்தில் தமக்கு வாக்களித்தால் நாளை புலிகள் வந்தால்கூட வாக்களித்தோருக்கு பிரச்சனை ஏற்படாது என்று சொல்லுகின்றனர். தம்மைவிட புலிகளை நம்புகின்றனர்.

இதைவிட வேடிக்கை - திருமலை நகர சபையில் போட்டியிடும் ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர் ஹேமச்சந்திரா தேர்தலில் போட்டியிடும் தமிழர் அமைப்புக்கள் பயங்கரவாதிகள் என்று சொல்லுகிறார்.

ஜனாதிபதி புலிகளை மட்டும்தான் பயங்கரவாதிகள் என்றார். ஆனால் ஹேமச்சந்திரா "புலிகள் என்றாலும் போராடுகிறார்கள். ஏனைய தமிழ் அமைப்புக்கள் பயங்கரவாதிகள்" என்கிறார். பின்னர் எதற்காக இவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கிறார்? தேர்தலில் போட்டியிடுவோர் தேசத்துரோகிகள் என்று புலிகள் கூறியிருப்பதால் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் பலர் ஏனைய தமிழ் அமைப்புக்களை காரசாரமாக கண்டிக்கிறார்கள். அதன் மூலமாக புலிகளை திருப்திப்படுத்த நினைக்கிறார்களோ தெரியவில்லை.

மட்டக்களப்பு பிரதேச சபை ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஈ.பி.டி.பியும் மோதிக்கொள்கின்றன. யானைச் சின்னத்தை அழித்து தராசு கீறப்படுகிறது. ஐ.தே.க. சுவரொட்டிகளை மறைத்து ஈ.பி.டி.பி சுவரொட்டி ஒட்டுகிறது.

வவுனியாவில் புளொட்டும் ஐ.தே.கட்சியும் பலத்த போட்டியில் குதித்துள்ளன.

தனது கணவர் புலேந்திரனின் கொலைக்கு காரணமானவர்கள் புளொட் அமைப்பினர் என்று நம்பப்படுவதால் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் வவுனியாவில் ஐ.தே.கட்சியை வெற்றிபெற வைக்க கடுமையாக உழைக்கிறார். முயற்சி திருவினையாகுமோ என்பது சந்தேகம்தான்.

ஆக, மொத்தத்தில் வாக்குகளை எப்படியாவது கவர்ந்துகொள்வதே நோக்கம்.

கொள்கைகள், கோட்பாடுகள், நேர்மையான அரசியல் என்பதெல்லாம் புறம்தள்ளப்பட்டு எப்படியாவது சில ஆசனங்களை கைப்பற்றிவிடும் ஆவல் மேலோங்கியுள்ளது.

தமக்கும் மக்களது ஆதரவு இருப்பதாக சொல்லிக்கொள்ள, தாமும் ஒரு அமைப்பு என்று பெயர்களை காப்பாற்றிக்கொள்ள வழி தேடும் முயற்சிதான் நடக்கிறது.

ஒவ்வொரு தமிழ் கட்சிக்கும் தமது நெஞ்சைத் தொட்டுப்பார்த்தால் தெரியும், தாம் ஒரு நேர்மையான அரசியல் பாதையைக்கூட உருவாக்க முடியவில்லை என்பது.

எங்கோ பரிசுத்தமான இடங்களில் இருந்து வேட்பாளர்களை கொண்டுவருமாறு கூறவில்லை. அதற்காக சாக்கடைகளுக்குள் போய் விழுந்து வேட்பாளர்களை தேடுவதும், அவர்களை பிரதிநிதிகள் ஆக்குவதும் நல்ல பயனைத்தராது. வேண்டுமானால் எமக்கும் வேட்பாளராக ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள அது உதவும். ஆனால் அரசியல் நாகரிகத்திற்கு அது வேட்டு வைக்கும். சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் புரிந்துகொண்டால் நல்லது. ■

---

## அதிரடி அய்யாத்துரை



நாடாளும் மன்றத்தில் தமிழ்பேசும் வெகுஜனப்பிரதிநிதியைப் பார்த்து அம்மையார் கட்சி பிரதிநிதி கேட்டாராம். "வடக்கில் ஒரே ஒரு சிங்களவரைக்கூட உங்களால் காட்டமுடியுமோ?" எண்டு. பிரதிநிதி வாயே திறக்கவில்லை. வடக்கில் உள்ள படைமுகாம்களிலும், வவுனியா மற்றும் தீவுப் பகுதிகளிலையும் இருக்கிற படையினர் எல்லாம் என்ன தமிழர்களோ? எங்கடை பிரதிநிதி அதைச் சுட்டிக்காட்டியிருக்கலாம். பேசாமல் இருந்து போட்டார். முந்தி எண்டால் சுடச்சுட பதில் கொடுக்கிற பிரதிநிதியள் இருந்தினம். இப்ப நிலமை பரிதாபம்தானுங்கோ.

வதந்திகளைப் பரப்பி வாக்குவேட்டை நடத்திற வேலைகளும் நடக்குது. "எங்கள் உறுப்பினர்களை அடிச்சுப் போட்டினம் எண்டு." ஒரு தமிழ் அமைப்பு இன்னொரு தமிழ் அமைப்பு மீது குற்றம்சொல்ல, விசாரித்துப் பார்த்தா அப்படி ஒண்டும் நடக்கேல்லையாம். எங்கடை இயக்கங்கள் சில பல காலம் தமிழ்நாட்டிலை இருந்தவை. அதாலை அனுதாபத்தை வைச்சு வாக்குதேடும் வித்தைகளையும் கற்றுக்கொண்டு வந்திருக்கினம்.

மாறி மாறி ஆள் பிடிக்கிற வேலைகள் நடந்தபடியால் சில வேட்பாளர்களுக்கு தாங்கள் எந்த அமைப்புச் சார்பான குழுவில் இருக்கிறோம் எண்ட விசயமே தெரியேல்லையாம். ஒரு வேட்பாளரை சந்தித்த தம்பி ஒருத்தர் "அண்ணர் பாத்தியளே. நாங்கள்தானே உங்களை முதலில் கேட்டனாங்கள். நீங்கள் அந்தப் பக்கம் போட்டியள்" எண்டு சொல்ல, அந்த வேட்பாளர் உடனடியாகக் கேட்டாராம் பாருங்கோ ஒரு கேள்வி, "அப்பிடியெண்டால் தம்பி நான் உங்கள் குரூப்பிலை இல்லையோ?" பார்த்தியளோ- இவர் மாதிரி ஆட்கள் எல்லாம் பிரதிநிதிகள். இவரை வளைக்கவும் போட்டிகள். கஷ்டகாலம்தான்.

மலையக தனித்துவக் கட்சியின் 'செல்லமானவரை' தேர்தல் பிரச்சாரம் செய்ய கிழக்குக்கும், வவுனியாவுக்கும் பச்சைக்கட்சியினர் கூப்பிட்டவையாம். தமிழ் கட்சிகள் போட்டியிடும் இடங்களுக்கு வந்து எதிராய் பேசமாட்டன் எண்டு சொல்லிப்போட்டாராம்.

யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்துக்காரர் வியாபார நிறுவனங்களுக்கு எல்லாம் தூய தமிழ் பெயர்சூட்ட வேணும் எண்டு சொல்லியிருக்கினம். முந்தி ஒரு காலத்திலை கூட்டணி வண்ணை ஆனந்தனும் உப்பிடி வெளிக்கிட்டவர். பிறகு ஒய்ஞ்சு போனவர். அவற்றை கையிலே ஆயுதம் இல்லை. இப்ப ரெண்டு எழுத்தார் ஆயுதத்தோடை இருக்கினம். சொன்னது நடக்கும். இந்த இடத்திலை ஒரு உறுத்தல் பாருங்கோ. ரெண்டு எழுத்தார் தங்கட பலியான உறுப்பினர்களை கப்டன், லெப்டினன்ட், மேஜர் என்றெல்லாம் தகுதிவாரியாய் அறிவிச்சுக் கொண்டிருக்கினம். அதுகளுக்கும் தூய தமிழ் அர்த்தங்களிலை சொல்லுவினமோ?

யாழ்ப்பாணத்திலை இருந்து வந்த முதியவர் மாகோவிலை ரீ குடிக்க இறங்கினவராம். "ஐயா வாங்கோ" எண்டு கூப்பிட்டுக் கொண்டுபோய் கட்டின வேட்டியையும், கையிலை இருந்த காசையும் பக்குவமாய் வாங்கிப்போட்டு அனுப்பிப் போட்டினம். சூழல் விளங்காமல் இடையில் இறங்கும் பயணிகள் இதைக் காதில் போட்டுக்கொள்ளுங்கோ.

*"கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்*
*கவர்ந்திட மாட்டாவோ?-அட*
*மண்ணில் தெரியுது வானம், அது நம்*
*வசப்படலாகாதோ?"*

பாரதியாருக்கு பெரிய ஆசை. இஞ்சை எங்கட ஆக்கள் உள்ளாட்சிச் சபைகளை வசப்படுத்த படுற பாட்டைப் பார்கேக்கை, வானத்தை வசப்படுத்த வெளிக்கிட்டால் ஒருத்தரும் மிஞ்சமாட்டினம். இடையிலே நிண்டு பிடுங்குப்பட்டு பிய்ஞ்சு போயிடுவினம். இஞ்சை நல்ல கனவுகள் கைப்படுறது கஷ்டம். ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு வீரனின் மறுபக்கம்!

# உடலிலே இரும்புப் பலம்- இதயத்திலே ஈர குணம்!!

## முகம்மது அலி பற்றிய புதிய தகவல்கள்



மேடையில் ஏறிவிட்டால் கொடியமூர்க்கன். எதிரில் நிற்கும் வீரனை தனது அதிபார முஷ்டியால் குத்தி வீழ்த்தும் அதி பராக்கிரமசாலி. எதிரியை வீழ்த்தவேண்டும் என்ற ஒரே மன எழுச்சியால் தினசரி பயிற்சி பெற்று தனது கைகளுக்கு உரமேற்றுபவர்.

காசியஸ் கிளே என்ற பெயருடன் வாழ்ந்து, பின்னர் இஸ்லாம் மதத்தைத் தழுவி முகம்மது அலி என்ற பெயர் பெற்ற அதிபார குத்துச்சண்டை வீரரின் மறுபக்கம் மிகவும் வித்தியாசமானது. குத்துச் சண்டை நேரத்தில் மட்டும்தான் அவர் பொல்லாதவன் கொடியவன். சாதாரண வாழ்க்கையில் மிக மிக மென்மையான உள்ளம் படைத்தவர். ஒரு எறும்புக் குத்தானும் தீங்கு விளைவிக்க நினைக்காத ஒரு அப்பாவி. வறியவருக்கு வலிந்து உதவும் பண்பாளர்.

அமெரிக்க மக்கள் குறிப்பாக ஆண்கள் தங்களுடைய 20வது வயதுக்குள் இராணுவத்தில் சேர்ந்து பணிபுரிய வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியிருந்த காலகட்டத்தில், யுத்த முனைக்குச் சென்று எவரையும் கொல்ல தன்னால் முடியாது என்று ஒரு பெரும்போராட்டமே நடத்தியவர் முகம்மது அலி. அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவியமைக்கும் இது ஒரு காரணமாகும்.

வியட்நாம் யுத்தத்தில் ஈடுபட்டு கைகால் போன்ற உறுப்புக்களை இழந்து அமெரிக்கா திரும்பிய பல வீரர்கள் ஒரு குறிப்பிட்டகாலம் அரசாங்கத்தின் பாராமுகத்தால் அல்லற்பட்டனர். யுத்தமுனையிலிருந்து திரும்பிய அங்கவீனர் ஒருவர் பல ஆண்டுகளாக தனிமையில் விரக்தியுற்று ஒரு ஒன்பது மாடிக்கட்டிடத்தின் மேற் தளத்திலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்ய முயற்சித்தார். அதே வழியில் பிங்ஹாம் என்ற தனது நண்பருடன் மோட்டாரில் சென்றுகொண்டிருந்த முகம்மது அலி மோட்டாரை விட்டிறங்கி மாடிப்படி ஏறிச்சென்றுஅந்த மனிதனை கீழே விழுந்து விடாமல் அணைத்து, அவருடைய தேவைகளைத் தானே கவனிப்பதாகக் கூறிக்காப்பாற்றினார். சொன்னதுடன் நின்றுவிடாமல் அன்றைய தினமே 2,000டொலர் செலவு செய்து அவருக்கு உடைகளும் அத்தியாவசியப் பொருட்களும் வாங்கிக்கொடுத்து, இருப்பிட வசதியுடன் ஒரு நிரந்தர வருமானம் தரும் ஒரு தொழிலையும் பெற்றுக் கொடுத்தார். இது 1981ல் நடைபெற்றது.

லா வேஜஸ் நகரில் அலியை கௌரவிக்கும் முகமாக ஒரு இரவு விருந்து வைபவம் நடைபெற்றது. வைபவம் முடிந்து வெளியேறிய அலியை ஒரு பெண்மணியின் குரல் தடுத்து நிறுத்தியது. தனது வலதுகுறைந்த- எழுந்து நடக்கமுடியாத பெண்குழந்தையை சக்கர வண்டியில் வைத்த வண்ணம் ஒரு பெண் நின்றிருந்தாள். தனது மகள், அலியுடன் ஒரு புகைப்படம் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப் படுவதாகக் கூறினார். உடனே அலி படம் பிடித்துக் கொண்டார்.

அதுமட்டுமல்ல- பாராட்டு வைபவத்தின்போது அவருக்கு அணி விக்கப்பட்ட விலையுயர்ந்த வைர மோதிரத்தை அந்தச் சிறுமியின் கைவிரலில் அணிந்துவிட்டு ஓசைப்படாமல் நகர்ந்துவிட்டார். சுற்றி வளைத்து நின்ற எவருமே இதனை அவதானிக்கவில்லை. அலி இடத்தைவிட்டு அகன்றபின்னர்தான் சிறுமி தன் கையில் கிடந்த மோதிரத்தைக் காட்டியபோது அவள் தாய் ஆனந்த மேலீட்டால் உரக்கக்கூவியிருக்கிறாள்.

இன்று விளம்பரத்துக்காகவே தான தருமம் செய்து, புகைப்படங்களை எடுத்து பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்தியும் படங்களையும் பிரசுரிப் போரையே காண்கிறோம். இத்தகைய காலத்தில் வலது கை கொடுப்பதை இடது கை தெரியாமல் நடப்பவராக முகம்மது அலி விளங்குகிறார்.

நியூயோர்க் நகரில் 1975ல் ஒருநாள் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருக்கும் போது யூத இன வயோதிபர்களுக்கான ஒரு பராமரிப்பு இல்லம், போதிய நிதியுதவி இல்லாமையினால் மூடப்படவிருப்பதாக ஒரு செய்தி இடம்பெற்றது. இந்த இல்லத்தில் 60, 80, 90 வயதானவர்கள்தான் இருப்பதாக அறிவிக்கப்பட்டதுடன் அவர்களுடைய தோற்றங்களும் படம்பிடித்துக்காட்டப் பட்டன. இதனைக் கண்ட அலியின் கண்களில்இருந்து கண்ணீர் வடிந்தது.

அடுத்த நாள் காலை அந்த இல்லத்தினுள் ஒரு பெரிய மோட்டார் வண்டி சென்று அலுவலகத்தின் முன் நின்றது. அதிலிருந்து இறங்கிய முகம்மது அலி இல்ல நிர்வாகியிடம் 100,000 டொலருக்கு ஒரு காசோலையைக் கொடுத்து விட்டு, வியப்பிலாழ்ந்து போயிருந்த நிர்வாகி நன்றி சொல்வதற்கு முன்னரே மோட்டார் பறந்து சென்றுவிட்டது.

அலி அனேகமாக நாடு பூராவும் சுற்றுப்பயணம் செல்பவர். 100 டொலர் நோட்டுகளாக மாற்றி வைத்துக்கொள்வார். வறியவர்கள் எவரைக்கண்டாலும், அவர் களுடைய கையில் 100 டொலர் நோட்டை திணித்துவிட்டுச் சென்றுவிடுவாராம்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அப்போது காசியஸ் கிளே என்ற பெயருடனிருந்த முகம்மது அலி, 1965ல் தெருவில் நடந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு சென்றார். ஒரு பத்திரிகைப் படப்பிடிப்பாளரான ஹோவாட் பிங்காம் அலியை அடையாளம் கண்டு தனது மோட்டாரில் ஏற்றி நகரைச் சுற்றிக் காண்பித்தார். அன்றிலிருந்து அலியும் பிங்காமும் நெருங்கிய நண்பர் களாகிவிட்டனர்.

'முகம்மது அலி- ஒரு முப்பதாண்டுப் பயணம்' என்ற ஒரு நூலை ஹோவாட் பிங்காம் இப்பொழுது வெளியிட்டுள்ளார். இந்நூலில்தான் எவரும் அறியாத முகம்மது அலியின் மறுபக்க கதைகள் வெளியாகி யுள்ளன.

## செஞ்சீனத்திலும் கடும் குற்றங்கள்!

சீனாவில் தற்போதும் கம்யுனிஸ்ட் கட்சியே பதவியில் இருக்கிறது.
சோவியத் யூனியன் சிதறிய பின்னும் சீனா கம்யுனிஸத்தை கைவிடவில்லை.
எனினும், சீனாவில் சமூக விரோதச் செயல்கள் கடந்த ஆண்டுகளைவிட தற்போது அதிகரித்து வருகின்றன.
சீனர்கள் பலர் தமது பாதுகாப்புக்குறித்து அச்சமடையத் தொடங்கியுள்ளனர்.
நகரின் மத்தியில் இரவில் நடமாட சீனப்பெண்கள் அஞ்சுகின்றனர்.
மாடிவீடுகளில்கூட பாதுகாப்புக்கருதி பலம் வாய்ந்த இரும்புக்கதவுகள் பொருத்தப்படுகின்றன.
மக்களது அச்சத்தைப் புரிந்துகொண்டுள்ள சீன அரசு குற்றவாளிகளை முறியடிக்க விசேஷ பிரிவுக்ளை ஏற்படுத்தி நவீன பயிற்சிகள் வழங்கிவருகிறது.

## சினிமாவில் செய்யப்படும் கேலிகள்! சவரத் தொழிலாளர்கள் கண்டனம்!

தங்கள் தொழிலை இழிவுபடுத்தும் வகையில் சில திரைப்படங்களில் இடம்பெறும் வசனங்கள், காட்சிகள் தொடர்பாக இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள சவரத்தொழிலாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய மத்திய திரைப்பட தணிக்கைக்குழு, தென்னிந்திய நடிகர் சங்கம் சினிமா வர்த்தக சபை தலைவர்களைச் சந்தித்து சங்கம் பேச்சுநடத்தியது.

சவரத் தொழிலை இழிவுபடுத்தும் காட்சிகள் இனி இடம்பெறாமல் பார்த்துக்கொள்வதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

## சாத்தானுக்கு பூஜை-பெண்களுக்கு கொடுமை!

கிரேக்க நாட்டின் தலைநகரான ஏதென்ஸ் நகரில் இரண்டு பெண்கள் பாலியல்வதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

கொலையாளிகளை பிடிக்க வலை விரித்த பொலிஸ் இரு இளைஞர்களைப் பிடித்தது. அவர்களும் மறு பேச்சில்லாமல் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

1992ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 வயதுப் பெண் தியோடராவையும், அதே ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டு குழந்தைகளின் தாயான 30 வயதுப் பெண் கேரிபலியா ஜியார்சாவையும் கற்பழித்துக்கொன்றுள்ளார்.

கொலைகளை செய்துவிட்டு இருவரும் இராணுவத்தில் சேர்ந்துவிட்டனர். விசாரணையில் மாட்டிக்கொண்டனர்.

இரு இளைஞர்களும் சாத்தான்மீது பற்றுக்கொண்டவர்கள். அடிக்கடி பூஜை நடத்துபவர்கள். மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக அவ்வாறு பூஜை நடத்தினார்கள் என்ற விபரங்கள் விசாரணையில் வெளியாகியுள்ளன.

## எதையும் தாங்கும் ஈராக் சதாம் ஹுசைன் உறுதி!



ஈராக்கின்மீது ஐக்கிய நாடுகள் சபை கடுமை காட்டிவருகிறது.

வளைகுடா யுத்தம் நடந்து முடிந்த பின் ஈராக்கின் வலிமை குறைந்து விட்டதாகவே கருதப்பட்டு வருகிறது.

ஆனால் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அந்தக் கருத்தை மறுக்கிறார்.

"போர் முடிந்தபின் முன்பைவிட நாம் பலமடங்கு வலிமை பெற்றுள் ளோம். வளர்ச்சியும் பெற்றிருக்கிறோம்" என்று கூறுகிறார்.

ஈராக்மீது பொருளாதாரத் தடை விதித்துள்ள நாடுகள்மீது கோபமடைந் துள்ள சதாம் ஹுசைன் அந்த நாடுகளை கடுமையாகச் சாடுகிறார்.

"ஈராக் பொருளாதாரத் தடைகளை கண்டு அஞ்சாது. அவற்றையெல்லாம் தாங்கி வீறுநடைபோடும்" என்று சதாம் மக்களிடம் கூறிவருகிறார்.

இதேவேளையில் மேற்குலக சஞ்சிகைகள் சதாம்மீது எதிர் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளன.

சதாம் மிக மோசமானவர் என்றொரு அபிப்பிராயத்தை ஏற்ப டுத்தவே அவை முயல்வதாக ஈராக் கூறுகிறது.

## கடமையோ கடமை



வெள்ளப்பெருக்கு, கலவரச் சூழல் என்றெல்லாம் காரணம் சொல்லி வேலைக்கு லீவு போடும் ஆட்களும் இருக்கிறார்கள். எந்த நிலையிலும் முக்கிய கடமைகளில் கண்ணும் கருத்துமாக உள்ளவர்களும் இருக்கிறார்கள். படத்தில் இருக்கும் தபால்காரர் கடமைவீரர். பிரான்சில் வெள்ளப்பெருக்கு. வீட்டில் இருந்து விடுமுறை எடுக்காமல் படகில் வந்து தபால்களை விநியோகிக்கிறார். இது படம் மட்டுமல்ல நம் நாட்டில் உள்ள சிலருக்கு பாடமும்கூட.

## கொன்றுவிட்டு குப்பைக்குள் வீசினார்!

கனடாவில் உள்ள மொன்றியல் நகரைச் சேர்ந்தவர் ரிமோதிடேல். வயது 30.
இப்போது அவருக்குக் கிடைத்திருப்பது ஆயுள் தண்டனை. இன்னும் 25 வருடங்கள் வரை அவர் உள்ளே இருக்கவேண்டும்.
காரணம், அவர் செய்த கோரமான கொலை. கொலையானவர் ஒரு பெண். வயது 16. பெயர் டியூரூல்.
பாலியல் ரீதியாக அப்பெண்ணைத் தாக்கிவிட்டு அவளது கழுத்தை நெரித்துக் கொன்றுள்ளார் ரிமோதிடேல். கொலை செய்தது மட்டுமல்ல உடலை குப்பையில் வீசிவிட்டுப் போய்விட்டார். விசாரணையின் பின் ரிமோதிடேல் சிக்கினார்.
தற்போது நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஆயுள்தண்டனை பெற்றுள்ளார்.

# அலசுவது - இராஜதந்திரி

# எஸ்.ஜே.வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் காலத்தில் தீர்க்கப்படாத பிரச்னைகள் வேலுப்பிள்ளை பிரபாகரனின் காலத்தில் தீர்க்கப்படுமா?

கொழும்பு பரி.தோமஸ் (St. Thomas) கல்லூரியினரால் களியாட்ட நிகழ்ச்சியொன்று இருவாரங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டிருந்தது.

கொழும்பு கல்கிஸ்ஸையில் அமைந்துள்ள மேற்படி கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமான முறையில் களியாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை அமைச்சரவையில் அரசியலமைப்புத்துறைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரான திரு.கே.என். சொக்ஸி அவர்களினால் இக்களியாட்டு வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் ஒரு பிரபல சட்டத்தரணியாக இருக்கும் திரு.கே.என். சொக்ஸி கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரியின் ஒரு பழைய மாணவராவார். அத்துடன் இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் மிகச் சிறுபான்மையினராக இருந்துவரும் பாஸி இனத்தைச் சேர்ந்தவராகவும் திரு.கே.என்.சொக்ஸி காணப்படுகின்றார்.

கல்கிஸ்ஸை பரி. தோமஸ் களியாட்ட விழாவை ஆரம்பித்து வைத்தபின்னர் உரையாற்றிய திரு.சொக்ஸி சகல இனங்களுக்குமிடையே, குறிப்பாக மாணவப் பருவத்திலுள்ள சகல இனங்களினதும் இளஞ் சந்ததியினரிடையே இன, மத வேறுபாடுகள் அறவே இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் தமது உரையில், "சகல இன மாணவர்களையும் ஒருங்கிணைத்து அவர்களிடையே வேற்றுமைகளைத் தவிர்க்கும் வகையில் கல்வி முறை அமைந்திருக்க வேண்டும்," என்று கூறியிருந்தார்.

கொழும்பில் உள்ள பிரபல கல்விக்கூடங்களில் முக்கியமானதே கல்கிஸ்ஸை பரிதோமஸ் கல்லூரியாகும்.


கொழும்பு றோயல் கல்லூரி, கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரி ஆகியன தம்மிடையே அனைத்துத் துறையிலும் போட்டியிடுவனவாகவே காணப்படுகின்றன.

தலைநகரின் இந்த இரு கல்லூரிகளும் ஆங்கிலேய மிஷனரிமாரினால் உருவாக்கப்பட்டவையாகும்.

ஆங்கிலேய மிஷனரிமார் இலங்கையில் கல்விப் பணியை விரிவாக மேற்கொள்ளும் வகையில் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகிய பிரதேசங்களில் பிரமாண்டமான கல்விக்கூடங்களை நிறுவியிருந்தனர்.

கொழும்பில் றோயல், பரி.தோமஸ், சென்.ஜோசப் கல்லூரிகளைப் போன்று கண்டியில் திரித்துவக் கல்லூரியும் ஆங்கிலேயரால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

வடக்கே வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி ஆகியன ஆங்கிலேய, அமெரிக்க மிஷனரிமார்களினால் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய கல்விக்கூடங்களாகும்.



இக்கல்விக்கூடங்களில் இலங்கையின் அனைத்து இன,மத மாணவர்களும் பிரதேச வேறுபாடுகளைக் கடந்த நிலையில் கல்வி பயின்றிருந்தனர்.

இத்தகைய கல்வி முறைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகவே கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரி விளங்கி நிற்கின்றது.

இலங்கையின் முதலாவது பிரதமரான அமரர்.டி.எஸ்.சேனநாயக்கா கல்வி பயின்றதும் கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரியிலேயே.


தமிழ் அரசியல் பிரமுகர் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரியின் ஒரு பழைய மாணவராவார். அமரர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை (எஸ்.ஜே.வி) செல்வநாயகம் இக்கல்லூரியில் ஓர் ஆசிரியராகவும் பணிபுரிந்திருந்தார்.

அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் வழிகாட்டலின்படியே மற்றுமொரு தமிழ் அரசியல் பிரமுகரான அமரர் மு.திருச்செல்வமும் இளம் பிராயத்தில் கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றிருந்தார்.

இவர்கள் தவிர இலங்கையின் முன்னாள் பிரதமர்களான அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா, அமரர் டட்லி சேனநாயக்கா ஆகியோரும் கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல், ஆட்சிப் பீடங்களில் பிரகாசித்த மேற்குறிப்பிட்ட பிரமுகர்களை விட இலங்கையின் நிர்வாக மற்றும், வெளிநாட்டுச் சேவை, நீதித்துறை என்பனவற்றில் அன்றுதொட்டு இன்றுவரை முன்னணியில் இருந்துவரும் பிரமுகர்கள் பலரும் கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரி, மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி ஆகியனவற்றின் பழைய மாணவர்களாகவே காணப்படுகின்றனர்.

அரசியலமைப்பு அமைச்சர் திரு.கே.என். சொக்ஸி கல்கிஸ்ஸை பரி.தோமஸ் கல்லூரியின் களியாட்ட விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசியபோது இலங்கையின் எதிர்காலச் சந்ததியினர் மத்தியில் இன,மொழி,மத பேதங்களற்ற கல்விச் சூழ்நிலையை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.



அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கியூ.சி.

ஆனால் கே.என். சொக்ஸி கல்வி பயின்ற பரி.தோமஸ் கல்லூரியின் பழைய மாணவரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே 'சிங்களம் மட்டும்' என்ற இனவாத சட்டம் இலங்கையில் அமுலுக்கு வந்திருந்தது.

கூடவே 1958ம் ஆண்டில் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான இனக்கலவரம் வெடித்திருந்ததும் பரி. தோமஸ் கல்லூரியின் பழைய மாணவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது.



பண்டாரநாயக்கா

## பரி.தோமஸ் பழைய மாணவர்களின் காலத்தில் உருப்பெற்ற இனப்பிரச்னை!

'சிங்களம் மட்டுமே' என்ற இனவாத அரசியலின் சூத்திரதாரியாக எஸ்.டபிள்யூ. ஆர்.டி .பண்டாரநாயக்கா விளங்கியிருந்தார்.

இந்த இனவாதப் போக்கையடுத்து இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை, பிரதேச தனித்துவம் ஆகியனவற்றைப் பாதுகாத்து, தமிழ் மொழிக்கும் உரிய அந்தஸ்தைப் பெறும் வகையில், கல்கிஸை பரி.தோமஸ் கல்லூரியின் மற்றுமொரு பழைய மாணவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அரசியல் ரீதியாக, ஜனநாயக வழிநின்று போராட்டங்களை முன்வைத்திருந்தார்.

இலங்கையின் இனத்தகராறு சம்பந்தப்பட்ட அரசியல் நடவடிக்கைகளை நோக்கும்போது எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோர் சிங்கள- தமிழ் இனங்கள் தொடர்பாக கொண்டிருந்த அரசியல் நிலைப்பாடுகளே இன்றுவரை ஒரு தொடர்கதையாக இருப்பதை நன்கு அறியக்கூடியதாக இருக்கின்றது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகியோர் இனத்தகராறு குறித்த கெடுபிடிகளைத் தணிக்கும் வகையில் தத்தமது பெயரிலேயே 'பண்டா-செல்வா ஒப்பந்தம்' என்ற உடன்பாடொன்றையும் தயாரித்திருந்தனர்.

ஆனால் இந்த பண்டா-செல்வா ஒப்பந்தமும் நாளடைவில் கிழித்தெறியப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்துக்கு எதிரானவர்களில் ஜே.ஆர்.ஜயவர்த்தனா முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா அன்று கண்டியாத்திரை சென்றிருந்தார்.

திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர். அத்துடன் றோயல் கல்லூரி உருவாக்கிய இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாகவும் பிற்காலத்தில் திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா விளங்கியிருந்தார்.

அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது பாராளுமன்ற நாட்களில் இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை, பிரதேச தனித்துவம், பாரம்பரியம் என்பனவற்றை உறுதிசெய்யும் வகையில் சமஷ்டி நிர்வாக முறையைக் கோரியிருந்தார்.

இது சம்பந்தமாக திரு. செல்வநாயகம் அன்று நிகழ்த்திய பாராளுமன்ற உரையொன்றில், "சமஷ்டி முறையை இலங்கை அரசு பரிசீலிக்கத் தவறுமாயின் எதிர்காலத்தில் நாட்டில் பிரிவினைக்கான போராட்டம் ஒன்று ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்," என்று கூறியிருந்தார்.

1977ம் ஆண்டு திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் யாழ்ப்பாணம் வைத்திய சாலையில் மரணப்படுக்கையில் இருந்த வேளை, அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா யாழ்ப்பாணம் சென்று யாழ் வைத்திய சாலையில் திரு.செல்வநாயகத்தைப் பார்வையிட்டிருந்தார்.

அத்துடன் திரு.செல்வநாயகத்தின் உயிரைக் காப்பாற்றும் வகையில் இரத்ததானஞ் செய்வதற்கும் திரு.ஜயவர்த்தனா முன்வந்திருந்தார்.

1977ம் ஆண்டு திரு.எஸ்.ஜே.வி செல்வநாயகம் மறைந்தார். 1977ம் ஆண்டு இலங்கையில் ஆட்சி மாற்றம் இடம்பெற்று 1978ம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்த்தனா இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டார்.

திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மரணப்படுக்கையில் இருந்தபோது எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த திரு.ஜயவர்த்தனா, செல்வாவின் உயிரைக் காப்பாற்றும் வகையில் இரத்ததானஞ் செய்வதற்கும் முன்வந்திருந்தார்.

ஆனால் இதே திரு.ஜயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக 1978ம் ஆண்டுமுதல் 1988ம் ஆண்டுவரை பதவி வகித்த பத்துவருட காலப் பகுதியிலேயே யாழ்குடா நாட்டில் இரத்தப் பிரவாகம் பெருக்கெடுத்திருந்தது.

திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் இலங்கையின் அரசியல் அமைப்பில் பல்வேறு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

ஆனால் அத்திருத்தங்களும், ஜே.ஆரின் நிறைவேற்று அதிகாரங்களும் வடக்கு-கிழக்குப் பிரச்னையை மேலும் மோசமாக்கி விட்டிருந்தனவே தவிர இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் அவை எந்தவகையிலும் பயன்பட்டிருக்கவில்லை.

இலங்கை இனப்பிரச்னை குறித்த நூல் ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்த புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.டி.முனி என்பவர்கூட ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் அரசியல் திருகுதாளங்களே இலங்கையர்களில் அநேகர் அவரை 'இருபதாம் நூற்றாண்டின் குள்ளநரி' (20th Century Fox) என்று அழைப்பதற்கும் காரணமாக இருந்தது என்று குறிப்பிட்டிருந்தார்.

இன்று ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் பதவியில் இல்லை; அவரது காலத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள அரசியல் வாதிகளில் மிகச் சிலரே தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட்டிருக்கக் காணப்படுகின்றனர்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை பல புதிய முகங்கள் அரசியலில் முக்கிய பதவிகளை வகித்திருக்கக் காணப்படுகின்றன.

## பிரபாவைப் பேச்சுக்கு அழைத்து பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண விரும்பும் பிரதமர் ரணில்

அத்துடன் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கும் ஒரு தீர்வு எட்டப்படவேண்டும் என்ற அவா தென்னிலங்கையில் நிலவக்காணப்படுகின்றது.

தென்னிலங்கையின் இன்றைய இளஞ்சந்ததியினர் வடக்கு-கிழக்கு யுத்தம் அர்த்தமற்றதொன்று என்பதனை உணரத் தலைப்பட்டுள்ளனர்.

இன, மத,வாரியான தீவிரவாதக் கருத்து மோதல்களால் நாட்டில் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதனை தென்னிலங்கையின் இன்றைய இளஞ் சமூகத்தினர் உணர்ந்து வருகின்றனர்.

இந்த உணர்வின் வெளிப்பாடாகவே இலங்கையின் இளம்பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி அழைப்பு விடுத்து வருகின்றார்.

தாம் பங்குபற்றும் பொதுக் கூட்டங்கள் மூலமாகவும், மற்றும் தாம் வழங்கும் பத்திரிகைப் பேட்டிகள் மூலமாகவும் புலிகளை நோக்கி பிரதமர் ரணில் அழைப்புவிட ஆரம்பித்துள்ளார்.

திரு.ரணில் விக்கிரமசிங்க பொதுக் கூட்டங்களில் எதுவித தீவிரக்கருத்துக்களையும் வெளியிடாதவராகவும் இருந்து வருகின்றார்.

பிரச்னை இருக்கின்றது; அது மோதல் எதுவுமின்றி பேசித்தீர்க்கப்பட வேண்டுமென்பது திரு. ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பமாக இருக்கின்றது. அவ்விருப்பம் தென்னிலங்கையின் இன்றைய இளஞ் சந்ததியினரின் அரசியல் கண்ணோட்டங்களைப் பிரதிபலிக்கின்றது.

ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் பெரும்பான்மை, சிறுபான்மை இன வேறுபாடுகள் குறித்த கருத்துக்கள் சமரசத் தீர்வை விரும்பும் சமாதான விரும்பிகளிடையே மனக்கிலேசத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றன. அத்துடன் கடந்தகாலச் சந்ததியினர் அரசியல் ரீதியாகக் கொண்டிருந்த பகைமைகளை மீண்டும் ஞாபகப்படுத்துவதாக திரு.டி.பி. விஜேதுங்கவின் பேச்சுக்கள் காணப்படுகின்றன.

தென்னிலங்கையில் இருந்தும் கிறிஸ்தவ, கத்தோலிக்க மதகுருமார்கள் வடக்கிற்கு கடந்தவாரங்களில் நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதுதவிர சர்வோதயத் தலைவர் டாக்டர் ஏ.ரி. ஆரியரத்ன கூட இருவாரங்களுக்கு முன்னர் குடாநாடு சென்று நிலைமைகளை அவதானித்து பின்னர் கொழும்பு திரும்பியிருந்தார்.


இவ்வாறு வடக்கிற்கு நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்ட மதகுருமார் மற்றும் டாக்டர் ஆரியரத்ன ஆகியோர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை மேற்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று தெரிவித்திருந்தனர்.

அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நேர்மையாகவும், மனந்திறந்து பேச்சுக்களை நடத்தும் பட்சத்தில் ஓர் அரசியல் தீர்வுக்கான வழிவகைகளை ஏற்படுத்த முடியுமென்றே அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக அமரர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், விவாதங்கள் என்று ஜனநாயக ரீதியாக அன்று போராடினார்.

ஆனால் தென்னிலங்கை அரசியலாளர்கள் அமரர் செல்வநாயகத்தின் நடவடிக்கைகளை பலாத்காரங்கள், காடைத்தனங்கள், மூலமாக தட்டிக்கழித்து வந்தனர்.

இன்று தென்னிலங்கையர்களே வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வுக்கு



பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

கூடவே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனையும் பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி அழைத்து நிற்கின்றனர்.

இந்நிலையில் அமரர் எஸ்.ஜே. வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் காலத்தில் நிறைவேற்றப்படாத வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள், திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனின் காலத்திலாவது நிறைவேற்றப்படுமா? என்பதே வடக்கு-கிழக்கில் வாழும் இன்றைய சந்ததியினரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# லேடீஸ் ஸ்பெஷல்

**த**ன்னம்பிக்கைதான் மனிதனின் முதல் அழகு.

நிச்சயமாக நான் அழகாக இருக்கிறேன் என்ற நம்பிக்கை உங்களிடம் உறுதியாக இருக்கவேண்டும்.

இந்த தன்னம்பிக்கை உங்களைவிட்டு அகலாதவரை உங்கள் அழகுக்கு குறைவே இருக்காது.

உங்கள் அழகைப் பிற பெண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். அது மிகவும்

# அழகாய் இருக்க மனதும் உதவும்

## அழகுக்கலை நிபுணர் கூறும் யோசனைகள்



தவறான முறை. ஏனெனில் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு விதத்தில் அழகானவள்.

உங்களைப் போன்ற தோற்றம், எழில் வேறு பெண்களிடம் இருக்கமுடியாது.

அதேபோல் பிற பெண்களின் சில அழகுச் சாயல் உங்களிடம் இல்லாமல் இருக்கலாம்.

அழகான மேனியழகு இல்லாத சில பெண்களுக்கு கட்டான உடல் அமைந்திருக்கும். அந்த உடற்கட்டே ஒரு அழகுதான். உடற்கட்டை காப்பாற்றிவைத்திருப்பதும் ஒரு அழகுதான்.

உங்கள் உடலின் நிறம் சிவப்பாக இருப்பது மட்டுமே அழகு என்று நினைக்க வேண்டாம். கறுப்பான உடல் நிறத்திற்கும் ஒருவித கவர்ச்சி உண்டு. கறுப்பு நிறம் என்று எந்தப் பெண்ணும் கலங்கத் தேவையில்லை.

அளவுக்கு மீறி தங்களின் உடல் நிறம் கறுப்பாக இருக்கிறது என்று நினைக்கும் பெண்கள் பசும்பாலுடன் கசகசாவைச் சேர்த்து அரைத்து குளிப்பதற்கு முன் உடல் முழுவதும் தடவி 1/2 மணிநேரம் கழித்துக் குளிக்கலாம். உடலின் நிறம் வெளுப்பாகும்.

குழந்தைகளைப் பெற்ற பெண்களுக்கும், உழைப்பு அதிகமில்லாத பெண்களுக்கும் இடுப்பு, வயிறு பகுதிகளில் சதைப்பிடிப்பு ஏற்படுவதுண்டு. இத்தகைய நிலைக்கு இலக்கான பெண்கள் அதிகாலையில் வெறும் வயிற்றோடு நின்றுகொண்டு இரண்டு கைகளாலும் இடுப்பு வயிற்றுப் பகுதியை உருவி விடுவது நல்லது. முடிந்தால் உருவிவிடும் சமயம் ஒலிவ் எண்ணெய் அல்லது விளக்கெண்ணையை சதைப்பகுதியில் தடவி விடுவது நல்லது.


அதே போல் கை,கால்களுக்கும் செய்வது நல்லது.

தினசரி ஒரு மாதம் வரை அப்படிச் செய்தால் நல்ல பலன் தெரியும்.


வசதியுள்ளவர்கள் பாதாம் எண்ணெய் உபயோகிக்கலாம். இந்த எண்ணெய் விரைவில் பலன் கொடுக்கும். தோல் மிகவும் மிருதுவாக இருக்கும். பளபளப்பாகவும் இருக்கும்.

# நீங்களும் தைக்கலாம்

## பிளவுஸ்




சட்டை அகலம் 20"÷2 =10"
சட்டை உயரம் 25"
தோள் நீளம் 13"÷2=6 1/2"
கழுத்தகலம் 2 1/2"
பின் கழுத்து இறக்கம் 1"
முன் கழுத்து இறக்கம் 3"
கை நீளம் 14"
கை அகலம் 8 1/2"
நுனிக்கை அகலம் 6 1/2"





Aயிலிருந்து Fவரை கழுத்தகலம் 2 1/2" உம் Aயிலிருந்து Eவரை பின் கழுத்திறக்கம் 1" வரை குறித்து E,Fஐ இணைக்குக. Fஇலிருந்து Gவரை 4" குறித்து தோள் நீளமும் Bயிலிருந்து Hவரை 6" குறித்து, G,Hஐ இணைத்து கையும் வெட்டிக்கொள்க. Cயிலிருந்து Jவரை 1" குறித்து H இலிருந்து வளைத்து வெட்டவும்.

முன் சட்டை அகலம் 24" எடுத்து இரண்டாக மடித்துக்கொள்ளவும். பின்




பின்உடம்பு வெட்டியது போலவே கழுத்தகலம், தோள் நீளம், கை என்பவற்றை




நீர்கொழும்பு- சுதா.

வெட்டிக் கொள்க. முன் கழுத்து Aயிலிருந்து Fவரை3" பதிவாக அளந்து G,Fஐயும் அத்துடன் படத்தில் உள்ளவாறு Eஐயும் சரித்து எடுத்து வெட்டிக்கொள்க.

10"நீளமும் 3" அகலமுமான துணியை எடுத்து நடுப்பகுதியை அளந்து வைத்துத் தைத்துக்கொள்ளவும். படத்தில் உள்ள மாதிரியான கொலர் உங்களுக்குக் கிடைக்கும்.

Bயிலிருந்து Eவரை5" அளந்து A,Eஐ வளைத்துக்கொள்க. Dயிலிருந்து Fவரை 6 1/2" அளந்து E,Fஐ வளைத்து வெட்டிக் கொள்ளவும்.

கையை உடம்புடன் பொருத்தும்போது நான்கைந்து சுருக்குகள் வைத்துக் கொள்ளவும்.

**குறிப்பு:** நீங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்ப கையின் நீளத்தைக் கூட்டிக்குறைத்துக் கொள்ளலாம். அதேபோல் கொலர் நீள, அகலத்தையும் உங்கள் விருப்பத்திற்கேற்ப தைத்துக்கொள்ளவும்.

பரிசுத் திட்ட கூப்பன் இல-2

# தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## சுயசோதனை

# வம்பளப்பதில் நீங்கள் எப்படி?

**பெ**ண்களில் இரண்டு வகை உண்டு. ஒருசிலரை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. அவர்களது நடவடிக்கைகள் மர்மமாகவே இருக்கும். அதிகம் அலட்டிக்கொள்ளாமல் இருக்கும். அந்தப் பெண்களைப் பற்றி தெரிந்துகொள்ள மற்றவர்கள் அபூர்வமாக இருப்பர்.

இன்னொரு வகைப் பெண்களோ சதா வம்பளந்து கொண்டே இருப்பர். மற்றவர்கள் அந்த பெண்களைப்பற்றி கவலைப்படமாட்டார்கள். அவர்களது எல்லா நடவடிக்கைகளும் எல்லாருக்கும் தெரிந்தே இருக்கும்.

பெண்களே! நீங்கள் இதில் எந்தவகையைச் சார்ந்தவர்கள்? இதை சுலபமாக தெரிந்துகொள்ள ஒரு எளிய குவிஸ் போட்டி. வழக்கம்போல் கீழே கொடுக்கப்பட்டுள்ள 12 கேள்விகளுக்கு ஆம்/இல்லை என பதிலளியுங்கள்.



1. நான் எங்காவது வெளியே சென்றால் எங்கே செல்கிறேன் என்பதை பிறருக்கு தெரிவிக்க குறிப்பு எழுதி வைப்பதை விரும்பமாட்டேன்!
2. என்னுடைய கணவர் என்னை எந்த அளவு காதலிக்கிறார் என்பதை அவர் வாயாலே சொல்லுவதை கேட்டு பெருமிதமடைவேன்.
3. சாப்பிடப்போவோம் என சொல்லி யாரையாவது ஓட்டலுக்கு அழைத்து செல்வேன். பில் வந்தவுடன் யார் பணம்கொடுப்பது என்பதை பூவா, தலையா போட்டு முடிவு செய்யவேண்டும் என்பேன்.
4. என் கணவர்மீது எனக்கு கொள்ளை பிரியம் இருப்பதை, வார்த்தையாலோ செய்கையாலோ அவ்வப்போது வெளிப்படுத்துவேன்.
5. அதிகமாக கேள்வி கேட்கும் நபர்களைத் தான் எனக்கு அதிகம் பிடிக்கும்.
6. ஒரு பெண்ணின் சிறந்த நண்பன் அவள் படிக்கும் தின பத்திரிகைதான்.
7. பெண்கள் என்றாலே வம்பளப்பவர்கள் என பரவலாக உள்ள கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.
8. விடுமுறை நாட்களில் என்ன செய்கிறேன் என்பது எனக்கு உள்ள சொந்த உரிமை. மற்றவர்களிடம் அதுபற்றிகூறமாட்டேன்.
9. எல்லாம் எனக்கு தெரியும் என சொல்பவரை எனக்கு பிடிக்காது.
10. குடும்பத்துடன் வெளியே செல்வதைவிட, கணவருடன் மட்டும் தனியாக வெளியே செல்வதையே அதிகம் நான் விரும்புவேன்.
11. எனக்கு ஏதாவது உடல் உபாதைகள் ஏற்பட்டால்கூட வெளியே காட்டிக் கொள்ளமாட்டேன்.
12. செலவான பணத்தை ஈடுகட்ட கூடுதல் சிக்கனத்தை கடைபிடிப்பேனே தவிர, யாரிடமும் கடன் கேட்க மாட்டேன்.

### மதிப்பெண்:

- 9-12'ஆம்'-உங்களை யாராலும் எதிர்க்க முடியாது என ஆண்கள் கருதுவார்கள். உங்களைப் பார்த்து பெண்கள் பொறாமைப்படுவார்கள். நீங்கள் மிகவும் உண்மையானவர்.
- 5-8 'ஆம்'- நீங்கள் ஒரு புரியாத புதிர் என மற்றவர்களால் கருதப்படுவீர்கள். ஆனால், சிலநேரங்களில் எல்லாவற்றையும் போட்டு உடைத்துவிடுவீர்கள். ஆனால், தேவைப்பட்டால் உங்களால் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்க முடியும்.
- 1-4'ஆம்'- மற்றவர்களால் நம்மை புரிந்துகொள்ள முடியாதபடி நடித்து கொள்ள வேண்டும் என நீங்கள் விரும்புவீர்கள். ஆனால், ஐயோ பாவம் உங்களால் முடியவில்லை. உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் அனைவரும் தெரிந்து வைத்து இருப்பார்கள். நீங்கள் கொஞ்சம் முயற்சி செய்தால் மற்றவர்கள் உங்களை புகழும்படி நடந்துகொள்ளலாம்.

நன்றி-தினமலர்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - சுகந்தினி

## சீஸ் போல்ஸ்

**தேவையானவை-**

பாண்துண்டுகள்-12
துருவிய சீஸ்- 50 கிராம்
பெரிய வெங்காயம்- 4
பச்சை மிளகாய்- 4 அல்லது 6
இஞ்சி -சிறுதுண்டு
உப்பு-தேவையான அளவு.

**செய்யும் முறை:**

1. வெங்காயம், இஞ்சி, பச்சைமிளகாய் முதலியவற்றை துருவியில் துருவிக் கொள்ளவும்.
2. துருவிய வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி முதலியவற்றுடன் துருவிய சீஸைச் சேர்க்கவும். தேவையான அளவு உப்புச் சேர்த்து ஒன்றாகக் கலக்கவும்.
3. ஒவ்வொரு பாண்துண்டையும் ஒரு விநாடி தண்ணீரில் தோய்த்து எடுத்து, உள்ளங்கையில் அழுத்தித்தண்ணீரைப் பிழிந்து விடவும்.
4. பாண் துண்டின் நடுவில் தயாரித்த கலவையைக் கொஞ்சம் வைத்துப் பந்துபோல் செய்து கொள்ளவும்.
5. சூடான எண்ணெயில் பொரித்து எடுத்து, சூடாகப் பரிமாறவும். அதன் ருசியே தனி.

■

## வெண்டைக்காய் தயிர் கறி

**தேவையானவை:**

வெண்டைக்காய்-1/2கிலோ
பச்சை மிளகாய்- 6
இஞ்சி- சிறுதுண்டு
பச்சைக்கொத்தமல்லி-1 கட்டு
சீரகம்- 1 தேக்கரண்டி
மஞ்சள்பொடி- 1/2 தேக்கரண்டி
உப்பு-தேவையான அளவு
தயிர்- 1 கோப்பை
எண்ணெய்- 1/4 கோப்பை
கடுகு- 1 தேக்கரண்டி

**செய்யும் முறை:**

1. பச்சைக் கொத்தமல்லி, இஞ்சி, சீரகம் பச்சைமிளகாய் என்பவற்றை ஒன்றாக அரைத்துக்கொள்ளவும்.
2. அரைத்த விழுதைத் தயிருடன் கலக்கவும். மஞ்சள் பொடி மற்றும் உப்புச் சேர்க்கவும்.
3. வெண்டைக்காயை நீளவாட்டில் நறுக்கிக் கொள்ளவும்.
4. அரைத்த மசாலாவை வெண்டைக் காய்களில் அடைக்கவும்.
5. எண்ணெயில் கடுகைத் தாளிக்கவும். மசாலா அடைத்த வெண்டைக்காய்களைப் போட்டு வதக்கவும்.
6. வெண்டைக்காய்கள் மொர மொரப்பாக ஆகும்வரை வதக்கவும்.

## வீட்டுக்குறிப்புகள்

- மேசைகளின் மீது பழச்சாறு படிந்து உலர்ந்துவிட்டால், அதற்காகக் கவலைப் படவேண்டாம். மண்ணெண்ணை போட்டுத் துடைத்துவிட்டால் கறை போய்விடும்.
- இரவில் சமயலறையில் குறைந்த வோட் பல்பை எரிய விட்டுவைத்தால் கரப்பான் போன்ற பூச்சிகளின் தொல்லை இருக்காது.
- எலுமிச்சம்பழத் தோல்களை நன்றாகக் காயவைத்துப் பொடியாக்கிக்கொண்டு தலையில் தேய்த்து முழுகிவந்தால் பொடுகு போய்விடும்.

# சீவிக்கொள்ள உதவி தேவை!

இஷ்ராத் ஜஹன் தனது 72 அங்குல நீளத் தலைமுடியினை ஒழுங்காகச் சீவிச் சிங்காரிக்க பெரும் சிரமப்படுகிறார். அவருடைய சகோதரிகளில் ஒருவரை உதவிக்கு அழைத்தே தலைமுடியினைச் சீவி ஒழுங்கு செய்யவேண்டியுள்ளது. பங்களாதேஷ் நாட்டில் கொமில்லா என்ற ஊரில் வாழும் இஷ்ராத் பல்கலைக்கழக மாணவி. தொடர்ந்து கேசம் வளர்வதால் உலக சாதனை ஏடான கின்னஸ் புத்தகத்தில் இவர் இடம்பிடித்து புகழ்சேர்க்கப் போகிறார். கின்னஸில் இடம்பிடிக்கும்வரை முடி வடம்போல நீளமாக வளர்ந்துகொண்டே இருக்கும்.




www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# அபூர்வமான சந்திப்பு

## சின்னவர் பெரியவரைச் சந்தித்தபோது......





**வித்தியாசமான இருவர் சந்தித்துக்கொண்டால் ஆச்சரியம் என்றே அர்த்தம். அர்த்தம்! அந்த ஆச்சரியம் நடந்தது ஜப்பான் தலைநகரான டோக்கியோவில்.**

இருவருமே கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துக் கொண்டவர்கள். "உலகில் வியக்கத்தக்க விந்தை மனிதர்கள்" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி டோக்கியோவில் நடைபெற்றபோதே இவ்விரு விந்தை மனிதர்கள் சந்தித்துக் கொண்டனர். உடனே நெருங்கிய நண்பர் களாகவும் மாறிவிட்டனர்.

ஆலம் கன்னா பாகிஸ்தானைச் சேர்ந்தவர். 7.87அடி உயரமுடையவர். நெல்சன் டிலா றோஸ் ஆக 23.62 அங்குல உயரமானவர். (இரண்டு அடிகூட இல்லை) சாந்தோ டொமிங்கோவிலிருந்து கப்பல் மூலம் வந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

நிகழ்ச்சியின் பெரும்பாலான நேரம் நெல்சன் ஆலமின் மடியில் ஏறி உட்கார்ந்த வண்ணம் இருந்துகொண்டார். நிற்கும்போது ஆலமின் முழங்காலைக் கட்டிப்பிடித்துக்கொள்வார். இவர்களுக்கிடையில் உயரவேற்றுமை மிகவும் பாரதூரமாக இருந்தபோதிலும் மிகவும் நெருக்கமாகப் பழகிக்கொண்டனர். நிகழ்ச்சி முடிந்து பிரியும்போது சோகம் இருவரையும் ஆட்கொண்டதை அனைவரும் அவதானித்தனர்.

ஆலமுக்கு 38 வயதாகிறது. நெல்சனின் வயது 22.

# ஐம்பது ஆண்டுகள் வெட்டாமல் வளரும் முடி!

பழங்காலத்தில் முனிவர்கள் தலை முடியை வெட்டாமல் நீளமாக வளர்த்து வந்தனர். காலம் மாறி 'கிராப்பு', 'ஸ்டெப்' 'பங்கி' என்று ஸ்டைலாக தலைமுடி அலங்காரம் மாறியபோதிலும் ஒருவர் மட்டும் இன்னமும் ஜடா முடியுடன் இருக்கிறார்.

அவர்-நியூஜன். வியட்நாமைச் சேர்ந்த மீனவரான இவர், பிறந்ததில் இருந்து கடந்த 50 ஆண்டுகளாக முடியே வெட்டவில்லை.

தாயின் வேண்டுதலை நிறைவேற்று வதற்காக இவர் இப்படி முடி வளர்க்கிறார். நியூஜன் பிறந்தபோது வியட்நாமில் கொடியநோய் ஒன்று பரவி இருந்தது. இந்த நோய்க்கு குழந்தைகள் அதிக அளவில் பலியானார்கள்.



அப்போது கடவுளிடம் நியூஜனின் தாய் வேண்டிக்கொண்டார். நோயில் இருந்து குழந்தை பிழைத்துவிட்டால் அவன் ஆயுட் காலம் முழுவதும் தலைமுடியை வெட்டாமல் இருக்கப் போவதாக பிரார்த்தனை செய்தார்.

அவரது வேண்டுதல் பலித்தது. தாயின் பிரார்த்தனைக்காக 50 ஆண்டுகாலமாக நியூஜன் முடி வெட்டாமல் முடிவளர்த்து வருகிறார். மீன்பிடிக்க போகும்போது மட்டும் முடியைச் சுருட்டிவைத்து துணியால் தலைப்பாகை போல கட்டிக்கொள்கிறார்.

# இரவு உணவு-ஆக, இரண்டு முழுக்கோழிகள் மட்டும் வஞ்சகமில்லாமல் வளரும் உடம்பு! வயது 14!!





பெற்றவர்கள்தான் தம் பிள்ளைகளை தூக்கிக்கொஞ்சி மகிழ்வதுண்டு.

ஆனால் தென்ஆபிரிக்காவில், போக்ஸ் பேக் என்ற பகுதியைச் சேர்ந்த டேவிட் பொஷோஃப் தனது தந்தையை மிகச் சுலபமாக தூக்கிவைத்திருக்கிறான்.

அவனுடைய வயது 14. எடை 310 இறாத்தல்.

டேவிட் பிறக்கும்போது சாதாரண குழந்தைகள் போலவே இருந்தான்.

மூன்று வயதுவரை தாய்-தந்தையர் கவலைப்பட்டதும் உண்டு. அந்தளவுக்கு மெலிந்த தோற்றம் கொண்டி ருந்தான்.

மூன்று வயதிற்கு பின்னர்தான் 'ரொன்சில்ஸ்' எனப்படும் தொண்டையில் சவ்வு வளரும் நோய் ஏற்பட்டது.

அந்த நோய்க்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடிந்தபின் டேவிட் நன்றாகச் சாப்பிடத் தொடங்கினான். உணவு உள்ளே போக உடலும் பெருக்கத் தொடங்கியது. எடையும் ஏறத் தொடங்கியது.

பெற்றவர்களுக்கு ஆச்சரியம். டேவிட்டின் மார்பளவு 60 அங்குலமாகிவிட்டது. அதனால் பள்ளிக்கூடம் செல்லும் போது மார்புக் கச்சை அணிந்தே செல்லவேண்டியதாகி விட்டது.

வெளியே செல்லும்போது எல்லோரும் அவனையே வியப்பாக நோக்குவார்கள். டேவிட் அதனால் வெட்கப் படவில்லை. பெருமைப்பட்டுக்கொள்வானாம்.

"எடை கூடுகிறதே என்று உனக்கு கவலை இல்லையா?" என்று டேவிட்டிடம் கேட்டால்,

"இல்லவே இல்லை. நான் பெறும் ஒவ்வொரு இறாத்தல் எடையும் எனக்குப் புகழும், பெருமையும் தருகிறது" என்கிறான் டேவிட்.

உணவுக் கட்டுப்பாட்டை ஓரளவு கூட அனுசரிப்பது கிடையாது. ஏறட்டும் எடை. கூடட்டும் புகழ் என்று உள்ளே இடமிருக்கும்வரை சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறான்.

டேவிட்டின் தினசரி சாப்பாட்டு வகைகளின் அட்டவணைகளை பாருங்கள். அதிர்ச்சியடைய வேண்டாம். பாவம் டேவிட். கண்டப்பட்டுவிடக் கூடாதல்லவா?

காலை உணவு-

ஒருபெரிய கோப்பை ஓட் கஞ்சி.

முட்டைகள்- 12மட்டும்.

10 துண்டுப்பாண்- தொட்டுக்கொள்ள ஒரு இறாத்தல் பன்றி இறைச்சி.

பள்ளி சென்று படிக்கும்போதும் இடைவேளை நேரத்தில் பசிக்கும். வயிற்றுக்கு வஞ்சகம் பண்ணாமல் ஹம்பேர்கஸ் இரண்டும், பல பக்கற்றுக்களில் உருளைக் கிழங்குப் பொரியலும், சுவையான சொக்க லேட்டுக்களும், கொக்காகோலாவும் உள்ளே போகும்.

மதிய உணவு காலை உணவை விட இரண்டு மடங்கு மட்டும் அதிகமாக

இரவு உணவு-இரண்டு முழுக் கோழி. சோறு மற்றும் உருளைக் கிழங்குடன் ஏனைய காய்கறி வகைகள் என்று மிக அக்கறையாக ருசித்து மூக்குமுட்ட ஒரு பிடி.

இந்த சாப்பாட்டு ராமனுக்கு உணவு கொடுப்பதில் பெற்றவர்கள் கஷ்டப்படு வார்களே என்று நினைப்பீர்கள் அல்லவா? அவர்கள் உணவு விடுதிகளுக்கு உணவு சமைத்துக்கொடுக்கும். தொழில் செய்வதால் ஒருவிதமாகச் சமாளித்துக் கொள்கிறார்கள்.

இல்லாவிட்டால் சாப்பாட்டு ராமனை சமாளிப்பது கஷ்டம்தான்.

## நாகரிகமாய் உண்ணும் விருந்து!




மனித நாகரிகம் வளரும் போது, மனிதர்கள் மத்தியில் வளரும் பிராணிகளுக்கும் நாகரிகப் பழக்கங்கள் பிடித்துப் போய்விடுகின்றன. ஐஸ்கிரீமை சுவைத்துண்ணும் இரு பூனைகளும் அதற்குச் சாட்சி!

...படம்-செந்தமிழ் செல்வன்

இளையராஜாவோடு பரிவாரத்தைப் போலும் கங்கை அமரன், தன் அண்ணனுக்கு எதிரானவர்களை கூட்டணி சேர்க்கும் வேலையில் ஈடுபட்டு வருவதாக ஒரு தகவல்.

இளையராஜாவோடு இணைந்திருந்து பிரிந்த வைரமுத்துவை பாட்டெழுத வைத்து தான் இசையமைக்க கங்கை அமரன் யோசித்து வருவதாகவும் மற்றொரு தகவல்.





ரோஜா, ரூபினி
படம்-அதிரடிப்படை

## "அர்த்தம் தெரியாமல் பாடுகிறோம்"

"ஆயிரம் நிலவே வா" பாடல் மூலம் அறிமுகமானவர் எஸ்.பி. பாலசுப்ரமணியம்.

வயது ஏற ஏற குரல் மாறும் என்ற கதையைப் பொய்யாக்கி இன்றுவரை வெளுத்துக்கட்டுகிறார்.

பழைய பாடல்களுக்கும் புதிய பாடல்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று கேட்டபோது எஸ்.பி.பி. சொன்ன பதில்,

"பழைய பாடல்களில் இலக்கணம் அதிகம் இருந்தது. கதைக்குத் தகுந்தாற்போல் பாடல்களும் இருக்கும். இப்பொழுதெல்லாம் பாடுகின்ற எங்களுக்கே அர்த்தம் தெரிவதில்லை. உண்மையைச் சொல்லப்போனால் இப்பொழுது வரும் பாடல்கள் கதைக்கு சம்மந்தம் இல்லாமல் வருகின்றன." என்கிறார் எஸ்.பி.பி.

## ரோஜாவின் ஆசை!

தனது காதல் இயக்குநர் ஆர்.கே. செல்வமணியோடு இணைந்து 'அதிரடிப்படை' படத்தை தயாரித்தவர் ரோஜா.

இப்போது ரோஜாவுக்கு ஒரு ஆசை. தெலுங்கு மொழியில் பத்திரிகை ஒன்று தொடங்கவேண்டும் என்று துடியா வர. நடிகர், டாக்டர் ராஜசேகரை அனுமி ஆசிரியராக இருக்குமாறு கேட்டிருக்கிறார். யோசித்துச் சொல்வதாக பதில் சொல்லி தற்போதைக்கு நழுவிவிட்டார் ராஜசேகர்.

## இளையதிலகம் நடிப்பதை காணவந்த இமயம்!

பிரபு மீனா, ட்சேஷாத்ரி நடித்துவரும் 'நேட' படத்தின் படப்பிடிப்புக்கள் வேகமாய் நடந்து வருகிறது.

கே. பாலசந்தர் இயக்கத்தில் பிரபு முதன்முதலில் நடிக்கும் படம் என்பதால், சென்னையில் படப்பிடிப்பு நடந்தபோது சிவாஜி கணேசன் வந்திருந்தார். பிரபு நடித்த காட்சியைப் பார்த்துவிட்டு, பாலசந்தரோடு பேசிவிட்டு விடைபெற்று சென்றார்.






## மினிசினி

- ★ மணிரத்தினத்தின் 'ரோஜா' இந்தியில் மொழிமாற்றப்பட்டுப் பெருவெற்றி பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து பல இந்தி நடிகைகள் மணிரத்தினத்தின் படங்களில் நடிக்க விரும்புகின்றனர்.
- ★ பொங்கலன்று வெளியான 'அமைதிப்படை', 'ராஜகுமாரன்', 'மகாநதி', 'வீட்ல விசேஷங்க' ஆகிய நான்கு படங்களின் திருட்டு வீடியோ கசட்டுகள் தமிழ்நாட்டின் சகல பகுதிகளிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதனால் இப்படங்களை விலைக்கு வாங்கி தியேட்டர்களில் வெளியிட்டுள்ள விநியோகஸ்தர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
- ★ தமிழில் வெற்றி பெற்ற 'வால்டர் வெற்றிவேல்' படத்தைத் தெலுங்கில் எடுக்கிறார்கள். சத்தியராஜ் வேடத்தில் ஆந்திர சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவியும், சுகன்யா வேடத்தில் ஸ்ரீதேவியும் நடிக்கிறார்கள். இப்படத்தில் வரும் பாடல்காட்சிகள் முழுவதையும் நெதர்லாந்து மற்றும் ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளில் படமாக்கவுள்ளனர்.
- ★ தமிழ்த் திரையுலகின் முன்னணி கதாசிரியர்களில் ஒருவர் 'அன்னக்கிளி' ஆர். செல்வராஜ். இவர் தற்போது கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் 'குயில் தோப்பு' படத்தில் ரீத்து என்னும் புதுமுகத்தை அறிமுகப் படுத்துகிறார். ரீத்து குதிரையோட்டம், ஸ்கேட்டிங், ஜாவா, மற்றும் சினிமாவுக்குத் தேவையான நடனங்களைக் கற்று வைத்திருக்கிறார்.
- ★ பாக்கியராஜின் பல படங்கள் தெலுங்கில் மொழி மாற்றப்பட்டு வெற்றிபெற்றுள்ளன. இப்போது முதன் முறையாக நேரடித் தெலுங்குப் படமொன்றை இவர் இயக்கவுள்ளார். மீனா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்திற்கு 'ஒக ஊரிலே ஒக ராஜகுமாரி' என்று பெயர் வைத்துள்ளார்.
- ★ மலையாள நடிகர் ஜெயராம்-குஷ்பு நடித்த 'புருஷ லட்சணம்' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 'மனசு ரெண்டும் புதுசு' படத்தின் மூலம் மீண்டும் இந்த ஜோடி இணைகிறது.
- ★ இந்தியாவின் தலைசிறந்த ஓட்டப்பந்தய வீராங்கனையாக இருந்தவர் அஸ்வினி நாச்சப்பா. மௌலியின் இயக்கத்தில் அஸ்வினி, 'ஆணென்ன பெண்ணென்ன', 'இன்ஸ்பெக்டர் அஸ்வினி' போன்ற படங்களில் நடித்துள்ளார். மீண்டும் மௌலியின் இயக்கத்தில் 'அந்தரு அந்தரே' என்ற படத்தில் நடிக்கிறார். இதுவே நான் நடிக்கும் கடைசிப் படம் என்று கூறியுள்ளார் அஸ்வினி.
- ★ பாரதிராஜா அடுத்து பெண் சிசுக்கொலை பற்றிய படமொன்றை இயக்குகிறார். 'கருத்தம்மா' என்று பெயரிடப் பட்டுள்ள இந்தப் படத்தின் கதை, வசனத்தை ரத்னகுமார் எழுதுகிறார்.
- ★ 'பொன்னுமணி' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகியவர் சௌந்தர்யா. தமிழில் அவருக்கு போதிய வாய்ப்பில்லாத போதும் தெலுங்கில் மிகவும் பிஸியாக இருக்கிறார்.

## "கதை தெரியாமல் நடிக்கிறோம்"

நடிகர் செந்திலிடம் பழைய படங்களைப் பார்க்கும்போது என்ன நினைப்பீர்கள்? என்று கேட்டால் மனிதர் சலித்தெரிச்சலை கொட்டி விடுகிறார். "பழைய படங்களில் ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு கருத்து இருக்கும். இப்பொழுது வரும் படங்களில் கதை என்னவென்று நடிக்கிற எங்களுக்கே தெரியாமல் நடிக்கிறோம். இப்பொழுது வரும் படங்கள் பிரமாண்டமாக இருக்கின்றன. ஆனால் பிரமாதமாகத்தான் இல்லை" செந்தில் சொல்வதில் நியாயம் இல்லாமல் இல்லை.



சிவரஞ்சனி

## ரேவதியின் சாட்சி

'பிரியங்கா' திரைக்குவரத்... பிரபு கௌரவ வேடத்தில்...

ரேவதிக்கு ஜோடி ஜெயரா... நடிக்கிறார்.

ரேவதியின் வீட்டில் பணிபு... தம்பி பலாத்காரம் புரிந்துவி... செய்து விடுகிறார்.

தனது கணவரின் தம்பி... என்பதை அறிந்த ரேவதி ... சொல்ல, கணவருக்கு ... வருகிறது.

தனது மனைவி மனநிலை... என்று கணவரே கூறுகிறார்... உதவுகிறார்.

இப்படித்தான் போகிறது... மாபெரும் வெற்றியடைந்த ... படத்தின் உரிமையை வாங்கி... பெயரில் தமிழில் எடுத்துள்...

படத்தில் வரும் மனநல... காட்சிக்காக மட்டும் மூன்று... ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## மாறிவிட்டார்

கதாநாயகியாகத்தான் ... அறிவித்துவிட்டு, பின்னர் 'சபாஷ்பாபு' போன்ற ப... நடனமாடி, தற்போ... ஓடிக்கொண்டிருக்கும் அமைதிப்படையிலும் சத்யராஜுடன் நடனமாடிவிட்டார் விசித்ரா. இப்போது முன்புபோல கதாநாயகியாக நடிப்பேன் என்றெல்லாம் விசித்ரா பேசுவது கிடையாது. மூச்!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

பாப்பா முரசு சிறுகதை

# வெள்ளை யானை

பொன்னுசாமிக்குப் பெரிய விவசாய நிலம் இருந்தது. மற்றவர்கள் அவரவர்கள் நிலத்தில் நெல் பயிரிட்டார்கள். பொன்னுசாமியோ தன் நிலத்தைக் கொத்திப் பண்படுத்தி ஆழ உழுது வாழை பயிரிட்டான். வாழைக்கேற்ற மண்ணாக அவன் நிலம் இருந்ததால், வாழை செழித்து வளர்ந்தது. பெரிய பெரிய குலைகளாகத் தள்ளிற்று. ஒவ்வொரு குலையிலும் இருநூறு, முந்நூறு வாழைக்காய்கள் இருந்தன. இயற்கையாகவே அவை பழுத்தால் அவைகள் மிகவும் சுவையாக இருப்பதோடு நல்ல விலைக்கும் போகும் என்பதால் காய்களை அப்படியே வாழை மரங்களிலேயே பழுக்கவிட்டான் பொன்னுசாமி. வாழைக்காய்கள் பழமாகிக் கொண்டு வந்தன. ஓரிரு நாட்களில் கூடப் போகும் சந்தைக்கு வாழைப்பழங்களை எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்கலாம் என்றெண்ணிக்கொண்டிருந்தான் பொன்னுசாமி.

பழக்குலைகள் வெட்டுகின்ற பருவத்திற்கு வந்துவிட்டதா? என்பதை எதற்கும் ஒருமுறை பார்த்துவிடலாம் என்று எண்ணித் தன் வாழைத் தோட்டத்திற்குச் சென்றான் அவன்.

வாழைத் தோட்டத்தில் புகுந்திருந்த ஒரு யானை வாழை மரங்களைத் துவம்சம் செய்து பழங்களைக் குலைகுலையாக சாப்பிட்டுக்கொண்டிருந்தது. அது மற்ற யானைகளைப் போல் கறுப்பாக இல்லாமல் வித்தியாசமாய், வெள்ளையாக இருந்தது. அழகாகவும் இருந்தது.

தான் பாடுபட்டு பயிரிட்ட, கண்மணி போல் காத்த வாழைத்தோட்டத்தை எங்கிருந்தோ வந்த ஒரு யானை அழித்து நாசம் செய்வதைக் கண்ட பொன்னுசாமிக்கு ஆத்திரமும், கோபமும் உண்டாயிற்று. அருகில் இருந்த மரமொன்றின் கிளையை முறித்து யானையைக் கண்மண் தெரியாமல் அடித்தான். சந்தோசமாகப் பழுத்த வாழைப் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த யானை திடீரென்று தன்மீது சரமாரியாக அடிவிழவும் பொறிகலங்கிப் போயிற்று.

"பொன்னுசாமி! என்னை அடிக்காதே...! நான் சாதாரண காட்டு யானையுமில்லை, கோயில் யானையுமில்லை... தேவலோகத்து யானை. பூலோகத்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசையாக வந்தேன். பூலோகம் எங்கள் சொர்க்கலோகத்தை விட அழகாக இருக்கிறது. அப்போது இந்த வாழைத் தோட்டத்தைப் பார்த்தேன்.


"பழுத்த வாழைப்பழங்களின் வாசனை என் பசியை அதிகரிக்கச் செய்துவிட்டது. உன் தோட்டத்து வாழைப்பழங்கள் மிகவும் சுவையுடையதாகவும், இனிப்பாகவும் இருந்தன." என்றது வெள்ளை யானை.

"இவ்வளவு வாழை மரங்களை நட்டு நீர் பாய்ச்சி, மாடு கன்று மேய்ந்திடாமல் எவ்வளவு நாட்கள் இரவு, பகல் பாராமல் நான் காத்திருப்பேன். ஒரு நொடியில் எல்லாவற்றையும் அழித்துவிட்டாயே," என்ற பொன்னுசாமி, வெள்ளையானையை மீண்டும் அடிக்க ஆரம்பித்தான்.

வலி பொறுக்கமுடியாத வெள்ளை யானை, "உன் வாழைத்தோட்டத்தை நான் அழித்தது தப்புதான். அதற்கு மாறாக நான் உன்னைச் சொர்க்க லோகத்திற்கு அழைத்துச் செல்கிறேன். கவலைப்படாதே!" என்றது வெள்ளையானை.

"என்னைச் சொர்க்க லோகத்திற்கு அழைத்துச் செல்வாயா? உண்மையாகவா? எனக்கு சொர்க்க லோகத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசைதான்...அதுசரி நான் ஆசைபட்டாலும் சொர்க்க லோகத்துக்கு என்னை நீ எப்படி கூட்டிக்கொண்டு செல்ல முடியும்?" என்று கேட்டான் பொன்னுசாமி.

"நான் இன்னும் சிறிது நேரத்தில் வானில் பறந்து சொர்க்கலோகம் செல்லப் போகிறேன். நான் அப்படிப் பறந்து செல்லும் பொழுது என் வாலைக் கெட்டியாகப் பிடித்துக்கொள். நான் உன்னைச் சொர்க்க லோகத்தில் சேர்க்கிறேன்!" என்றது வெள்ளை யானை.



பொன்னுசாமிக்குத் தன் மனைவியையும் சொர்க்கலோகத்துக்குக் கூட்டிச்சென்று இந்திரசபை, ரம்பை, ஊர்வசி, காமதேனு, கற்பக விருட்சமெல்லாம் அவளுக்குக் காட்டவேண்டும் என்கிற ஆசை உண்டாயிற்று. வெள்ளை யானையிடம், "என் மனைவியையும் சொர்க்க லோகத்திற்கு அழைத்துக் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டான். வெள்ளை யானையும், "உன் மனைவியை உன் கால்களைப் பிடித்துக் கொள்ளச் சொல்!" என்றது.

உடனே, வீட்டுக்கு ஓடிப் போய் மனைவியிடம் அவர்கள் இருவரும் சொர்க்கலோகம் போகப் போற விசயத்தைச் சொன்னான் பொன்னுசாமி. அவளுக்கு அதைக் கேட்டு மிகுந்த சந்தோசம் உண்டாயிற்று. தன் பிள்ளைகளையும், பெண்களையும் அழைத்துச் சமாச்சாரத்தைச் சொன்னாள். உடனே, அவர்களும் "அம்மா, அப்பா நாங்களும் வரோம்" என்று கெஞ்சினார்கள். குழந்தைகளையும் சொர்க்க லோகத்துக்குக் கூட்டிச் செல்லவே விரும்பினார்கள் பொன்னுசாமியும், அவன் மனைவியும்.

பொன்னுசாமி, "குழந்தைகளே! அம்மா என் கால்களைப் பிடித்துக் கொண்டு தொங்குவாள். உங்களில் ஒருவர் அம்மாவின் காலைப் பிடித்துக் கொள்ளுங்கள். இப்படி ஒருவர் காலை மற்றவர் பிடித்தபடி நாம் எல்லோரும் சொர்க்கலோகம் போய்விடலாம்," என்று சொன்னான் பொன்னுசாமி.

ஒரே குதூகலமாக எல்லாரும் புறப்பட்டார்கள். அவர்கள் குடியிருக்கும் வீட்டுக்காரி எதிரே வந்தாள். அவளிடம் பொன்னுசாமியின் மனைவி, "நாங்கள் எல்லாம் சொர்க்க லோகம் போகப்போகிறோம்!" என்றாள். வீட்டுக்காரி, "நானும் வரட்டுமா?" என்றாள். அவளையும் தங்ளோடு சேர்த்துக் கொண்டாள்.

வெள்ளை யானையிடம் சென்று பொன்னுசாமி, "நாங்கள் எல்லாம் வந்துவிட்டோம்! சொர்க்கலோகத்துக்குப் புறப்படலாமா?" என்று கேட்டான்.

எல்லாரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, "இவ்வளவுபேர்களா?" என்று கேட்டது வெள்ளையானை.

"ஏன் இவ்வளவு பெரிய வாழைத் தோட்டத்தை அழித்து எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டாயே! இவ்வளவு பேர்கள் குறைவுதான்!" என்றான் பொன்னுசாமி.

"சரி நிறைய பேர்களை அழைத்துவந்துவிட்டாய். சொர்க்கலோகத்தில் என்னைத் திட்டப் போகிறார்கள். சரி..சரி, நான் மேலே எழும்புகிறேன். நீ என் வாலைப்பிடித்துக் கொள். அப்புறம் உன்னோடு நான் மேலே செல்ல உன் மனைவி உன் காலைப்பிடித்துக் கொள்ளட்டும்... அப்புறம் நான் மேலே செல்லச் செல்ல ஒவ்வொருவராக மற்றவர்களின் காலைப்பிடித்துக்கொள்ளட்டும்.." என்றது வெள்ளையானை.

"சரி அப்படியே செய்கிறோம்," என்றான் பொன்னுசாமி.

வெள்ளையானை மெதுவாகப் பூமியிலிருந்து வானை நோக்கிக் கிளம்பிற்று. அது சற்று உயரம் போனதும் அதன் வாலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான் பொன்னுசாமி. அவன் சற்றுமேலே போனதும் அவன் கால்களைப் பிடித்துக்கொண்டாள் அவன் மனைவி. அவள் கால்களை ஒரு பிள்ளை. பிள்ளையின் கால்களை ஒருபெண். இப்படி மாற்றி மாற்றிப் பிடித்துக்கொண்டு ஒரு மனிதச் சங்கிலியாக உருவெடுத்து வானில் செல்லத் தொடங்கினார்கள். பூமியில் உள்ள பொருட்கள் எல்லாம் சிறிதாகிக்கொண்டே வந்தது.

வெள்ளை யானை தேவலோகம் நோக்கி அத்தனைபேர் பாரத்தையும் இழுத்துக் கொண்டு மேலே சென்று கொண்டிருந்தது.

பொன்னுசாமியின் மனைவி, "என்னங்க தேவலோகம் நம்ம ஊர்மாதிரி இருக்குமா," என்று கேட்டாள் அவனிடம்.

"நம்ம ஊர் சுண்டங்காய்....தேவலோகம் பெரிசா இருக்கும்," என்றான் பொன்னுசாமி.

"எவ்வளவு பெரிசா இருக்குமுங்க?", என்று விடாமல் கேட்டாள் அவன் மனைவி.

"இவ்வளவு பெரிசா இருக்கும்" என்று சொல்லி வெள்ளை யானையின் வாலைப் பிடித்திருந்த பிடியை விட்டுக் கைகளை விரித்துக்காட்டினான் பொன்னுசாமி.

அவ்வளவு பேரும் அடுத்த கணமே பூமியில் தொப்பென வந்து விழுந்தனர்.

வெள்ளையானை தேவலோகத்திற்குப் போய்விட்டது.

மனிதர்களுக்குச் சந்தர்ப்பங்கள் வாய்ப்பது அதிசயமன்று. அதை நன்றாக, சரியாகப் பயன்படுத்தினால் தான் வெற்றி அடையலாம். ●

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.03.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 30
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 27

**பரிசுக்குரியவர்**
செல்வன். பிரசன்னா இரங்கசாமி
மத்திய மகாவித்தியாலயம்
வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்**

எஸ்.எச்.எம்.இம்ராஸ்
கொழும்பு-14.

துஷ்யந்தன்-கோட்டைக்கல்லாறு-2.

இ.உதர்ஷன்-கண்டி.

செல்வன்.ரவி.துஷ்யந்தன்
புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி
திருகோணமலை.

எஸ்.சரீபா ஜன்னா ஷஹறாப்டீன்
ஆமினா மகாவித்தியாலயம்- மாத்தளை.

க.சி.பிரேம் ஆனந்
கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருகோணமலை.

ரிஸ்னா முலாபர்-வெலிகம.

வேல்முருகு ராமு
புனித மிக்கேல் கல்லூரி- மட்டக்களப்பு.

எம்.என்.முஹம்மத்ரிசா-சிலாபம்.

செல்வன்.பு.சிறிகாந்
மண்டூர் மகாவித்தியாலயம்-மண்டூர்.

பிரியானந்-நடராஜா-புத்தளம்.

எம்.ஜே. முஹம்மட் பஜ்ரி-ருக்காவில.

ஏ.விஜயலெட்சுமி-மண்டூர்-1.

எம்.ஐ.முகம்மது முனாஸ்
புஹாரி வித்தியாலயம்-முள்ளிப்பொத்தானை.

ச.ஷியாமினா-கொழும்பு-6.

யோகராசா திஷாகாந்
கோணேஸ்வராஇந்துக்கல்லூரி-திருகோணமலை.

கீத்தா தவபால்-வவுனியா.

எஸ்.பரமேஸ்வரன்-அக்கரைப்பற்று-07.

ஆர்.கலா-இரத்தினபுரி.

## அறிவோம் மனதில் பதிவோம்



கிறிஸ்துவுக்குப்பின் 1715ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டுக் கப்பல் ஒன்று 30 கோடி நாணயங்களுடன் கடலினுள் மூழ்கிவிட்டது. தொல்பொருள் ஆய்வாளர் எடுத்த முயற்சிகளால் இதுவரை 1/2 கோடி நாணயங்களே மீட்கப்பட்டுள்ளன. இன்னும் 29 1/2 கோடி நாணயங்கள் மீட்கப்படாமல் கடலிலேயே அமிழ்ந்துள்ளன.



உலகில் குதிரைகளின் எண்ணிக்கை 75 கோடி. முதன் முதலில் ரஷ்யாவில் உள்ள உக்ரெய்ன் என்ற இடத்தில்தான் 6500 ஆண்டுகளுக்கு முன்பு குதிரைகள் வீட்டுப் பிராணிகளாக வளர்க்கப்பட்டன.



அமெரிக்காவில் மிசிசிப்பி மாநிலத்தில் 1979ம் ஆண்டு நடந்த 'கமிஷனர்' பதவிக்கான தேர்தலில் வெற்றி பெற்றவருக்கும் தோற்றவருக்கும் ஒரு வாக்கு வித்தியாசமே இருந்தது.



அமெரிக்காவில் 'உடா' மாநிலத்தில் மார்மோன் என்ற சமயப்பிரிவினருக்கான மிகப்பெரிய ஆலயம் உள்ளது. 1893ம் ஆண்டு இது கட்டப்பட்டது. இதன் பரப்பளவு 2 இலட்சத்து 53 ஆயிரத்து 15 சதுர அடி.


## விஞ்ஞான விளக்கங்கள்

1. வேகமாகச் செல்லும் பஸ்வண்டிக்கு திடீரெனத் தடுப்பு பிரயோகிக்கும் போது பயணிகள் முன்னோக்கி விழுகின்றனர்.
   - ஓடும் பஸ்ஸில் பயணிகள் பஸ்ஸின் வேகத்துடனேயே முன்னோக்கி இயங்குவர். திடீரென தடுப்பு பிரயோகிக்கப்படும்போது பஸ்சுடன் தொடர்புபட்டுள்ள உடலின் கீழ்ப்பகுதி மட்டும் சடுதியாக ஓய்வு நிலையடையும். இதனால் பயணிகள் முன்னோக்கி விழுகின்றனர்.
2. எண்ணெய் சிந்திய சீமேந்துத் தரையில் வேகமாக நடக்க முடிவதில்லை.
   - எண்ணெய், பாதத்துக்கும் சீமெந்து தரைக்குமிடையிலான உராய்வைக் குறைக்கின்றது. இதனால் தொடர்பு இடப்பெயர்ச்சி நிகழப் போதுமான விசை பாதத்துக்கும் தரைக்குமிடையே இல்லாது போகின்றது. எனவே வேகமாக நடக்கமுடிவதில்லை.
3. காரமான உணவு உண்டதும் காதினுள் அரிக்கின்றது.
   - நடுக்காது ஊத்தேக்கியாவின் கால்வாய் மூலம் தொண்டையுடன் தொடர்புபட்டுள்ளது. இதனால் காரமான உணவுத் துணிக்கைகள் நடுக்காதையடைந்து செவிப்பறையை தாக்க காதினுள் அரிக்கின்றது.
4. பன்சன் சுடரடுப்புக்கு மேல் கம்பி வலையம் ஒன்றைப்பிடித்தால் கம்பி வலைக்குமேல் சுவாலை செல்லாது.
   - கம்பியானது உலோகத்தினால் ஆனது. பொதுவாக உலோகங்கள் கூடிய வெப்பத்தைக் கடத்தக்கூடியவை. இதை பன்சன் சுடரடுப்பில் பிடித்தால் கம்பியினூடாக வெப்பம் கடத்தப்படும். எனவே கம்பிக்கு மேல் காணப்படும் வாயு எரிவதற்கு வெப்பம் குறைவாகையால் கம்பி வலைக்கு மேல் சுவாலை செல்லாது.
5. சுண்ணாம்புச் சாந்து காலப்போக்கில் உறுதிபெறும்.
   - சுண்ணாம்புச் சாந்தில் கல்சியமொட்சைட்டும் நீரும் உண்டு. அது வளியிலடங்கியுள்ள காபனீரொட்சைட்டு வாயுவுடன் தாக்கம் புரிவதால் கல்சியம் காபனேற்று தோன்றுகிறது. காலப்போக்கில் நீர் ஆவியாதலால் திண்மக் கல்சியம் காபனேற்று எஞ்சும். எனவே சுண்ணாம்புச்சாந்து உறுதி பெறும்.
6. இறைச்சி சமைக்கும்போது, இறைச்சியை மென்மையாக்குவதற்காக அதனுடன் பப்பாசிக் காய்த் துண்டுகள் சேர்க்கப்படுவதுண்டு.
   - இறைச்சியில் புரதம் அடங்கியுள்ளது. இறைச்சி மென்மையடைவதற்கு புரதச் சமிபாட்டு நொதியம் (பப்பேன்) தேவை. பப்பாசிப் பாலில் புரதச் சமிபாட்டு நொதியம் அடங்கியுள்ளது. எனவே இறைச்சி சமைக்கும்போது பப்பாசிக் காய்த்துண்டுகள் சேர்க்கப்படும்.

தொகுப்பு: செல்வன் சோ.துளசிதாஸ்
கோளாவில் விநாயகர் மகாவித்தியாலயம்
அக்கரைப்பற்று.

## ஸ்போர்ட்ஸ்

# பதவியே போனபோதும் கவலையே படாத வீரர்!



கிரிக்கெட் வீரர் கிரகாம் கூச்சிற்கு 1993ம் ஆண்டு மிகவும் மோசமான ஆண்டாக அமைந்து விட்டது. அதை நினைத்து, நினைத்து அவர் வேதனைப்படுகிறார்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் அவரது குடும்பவாழ்க்கையில் குழப்பம் ஏற்பட்டது. மனைவியை விட்டுப்பிரிந்தார். அவர் மனைவி எவளவோ அழுது புலம்பியும் அவர் கண்டு கொள்ளவே இல்லை.

அதில் ஏற்பட்ட குழப்பம் அவரது விளையாட்டிலும் எதிரொலித்தது. அவர் தலைமையில் வெளிநாடுகளுக்கு சென்ற இங்கிலாந்து கிரிக்கெட் அணி தோல்வி மேல் தோல்வி கண்டது. வரலாறு காணாத தோல்விகள்.

கப்டன் பதவியில் இருந்து கூச் தூக்கியெறியப் பட்டார். ஆனால் அதற்காக அவர் கவலைப் படவில்லை.

சொந்தமாகத் தொழில் ஒன்றைத் தொடங்கி நிம்மதியான வாழ்க்கை வாழ முனைந்துள்ளார். இந்த ஆண்டாவது அவருக்கு நிம்மதியான ஆண்டாக இருக்கட்டும்.

## ஒத்துழைக்கும் உடல்



அகில இந்திய யோகாசனப் போட்டியில் ஹரியானாவைச் சேர்ந்த வீராங்கனை பங்கஜ் சர்மா வில் போல் தன் உடல் வளைக்கும் காட்சி.


# "அவுட்டாக்க கஷ்டமானவர் அரவிந்த டி சில்வா"

## -சொல்கிறார் அனில் கும்ளே-

இந்திய அணியில் சிறந்த பந்து வீச்சாளராகவும், இந்திய அணியின் இளம் நம்பிக்கை நட்சத்திரமாகவும் ஜொலிப்பவர் அனில் கும்ளே.

முதலில் நடுத்தர வேகப் பந்து வீச்சாளராகவே இருந்தார். நடுவர் ஒருவர் கும்ளேயை 'சக்கிங்' என்று அழைத்துவிட, அன்றே நடுத்தர பந்துவீச்சுக்கு முழுக்குப் போட்டுவிட்டார். லெக்ஸ்பின்னுக்கு தாவி விட்டார். இப்போது உலக அரங்கில் முன்னணிப் பந்துவீச்சாளராக பேசப் படுகிறார்.

தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அனில் கும்ளே அளித்துள்ள பதில்கள்:



கே: உங்களுக்கு 15 வயதாக இருந்தபோது நீங்கள் ஒரு நடுத்தர வேகப்பந்து வீச்சாளர். பின்பு எப்படி சுழற்பந்து வீச்சாளரானீர்கள்?

ப: பள்ளியில் நான் நடுத்தர வேகப்பந்து வீச்சாளராகத்தான் இருந்தேன். ஆனால் நடுவர் எனது ரவுண்டு ஆர்ம் ஆக்சனை சந்தேகக் கண்ணுடன் பார்த்தார். இதை நினைத்து நான் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்த போதுதான் எனது சகோதரர் லெக்ஸ்பின் வீசும்படி அறிவுரை கூறினார். அதற்கான பயிற்சியில் ஈடுபட்டு இரண்டே மாதங்களில் 15 வயதிற்குட்பட்டவர்களின் கர்நாடகா அணியில் விளையாட தேர்வு செய்யப் பட்டேன்.

கே: உங்களது குரு யார்?

ப: குரு என்று யாரும் கிடையாது. எனக்கு நிறைய கிரிக்கெட் வீரர்களைப் பிடிக்கும். குறிப்பாக ஜி.ஆர். விஸ்வநாத், ஈ.ஏ.எஸ். பிரசன்னா, பி.எஸ். சந்திரசேகர், கபில்தேவ், மற்றும் சுனில் கவஸ்கர் போன்றவர் களைப் பிடிக்கும். ஆனால் யாரையும் போல் செய்வது எனக்குப் பிடிக்காது.

கே: உங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவம் எது?

ப: கண்டிப்பாக ஹீரோக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 6 விக்கெட் வீழ்த்திய சம்பவம்தான்.

கே: துடுப்பாட்டக்காரர்களில் அவுட்டாக்கு வதற்கு கஷ்டமான வீரர் யார்?

ப: அரவிந்த டி சில்வா என்றுதான் கூறுவேன். இலங்கைச் சுற்றுப் பயணத்தின்போது மிக அற்புதமான அவரது திறமையைக் கண்டேன். மைக்கேட்டிங்கும் அவுட்டாக்கக் கஷ்டமானவர்.

கே: உலகில் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் யார்?

ப: சந்தேகமே இல்லாமல் ஷேன்வோன் தான். அவரிடம் நிறைய வித்தியாசமான பந்து வீச்சு இருக்கிறது.

கே: உங்களது பந்து வீச்சிலும் சில வேறுபட்ட வகைகளைச் சேர்ப்பீர்களா?

ப: ஒவ்வொரு பந்துவீச்சாளரும் விக்கெட்டை வீழ்த்த ஒவ்வொரு வழியைக் கையாளுகிறார்கள். நான் ரெகுலராக 'ஹுக்லி' வீசுவதை இப்போதுதான் துவங்கியுள்ளேன். இருந்தும் இன்னும் சில 'டிரிக்கு'களை எனது பந்துவீச்சில் சேர்க்கத் திட்டமிட்டுள்ளேன்.



## தேன் கிண்ணம்



### அவள் ஒரு யுத்தம்!

கவலைப்படாதே!
நான் உனக்குத்தான்!
என் தேசத்தில்
நிர்ப்பந்தங்கள் இல்லை.
வன்முறைகள் இல்லை!
நீ பேசலாம்.
உனக்கு இங்கே
கருத்துச்
சுதந்திரமுண்டு!!

அவள் ஒரு
அழகான யுத்தம்!
கண்கள்,
கலிபர் துப்பாக்கிகள்!
கன்னம்,
"ஷெல்"லின் பளபளப்பு!
இதழ்கள்,
செஞ்சிலுவைச் சங்கம்!
பற்கள்,
சின்ன ரவைகள்!
நெற்றி,
வடக்கின் நிலா!
கழுத்து,
கிழக்கின் பாலம்!

மார்பு....
அது தடைசெய்யப்பட்ட
பிரதேசம்!

ஏனையவை...
பேசினால்-நான்
துரோகி!

முதன்முதலில்
பார்த்தாள்.
எனக்குள்
வதைமுகாம்!

அவள் என்னைக்
கடக்கும்போதெல்லாம்
நான் கிளாலியைக்
கடந்தேன்!

சிரித்தாள்...
என் நெஞ்சில்
50 கலிபர்
'குண்டுகள்'
பாய்ந்தன!

புன்னகைத்தாள்.
என் சிந்தனைக்
காவலரண்கள்
தகர்க்கப்பட்டன!

பழகினாள்.
பழகினேன்.
கண்மூடித் திறக்கையில்
என் இதய முகாம்
அவள் கையில்!

(இப்போது
பகல்நேர
ஷெல்லடிகளைத்
தாங்கமுடியவில்லை!)

முன்பு
கைப்பற்றினாள்.
பின்பு
சரணடைந்தாள்!

இப்போ
அவள் எனக்கு...
ஒரு பழைய
யாழ்ப்பாணம்!
புதிய
"வெள்ளை"க் கனவு!

காலம் கடந்தது.
வடக்குக் கிழக்கைப்
போல்....

நெருக்கம் கூடியது,
அகதி முகாம்களைப்
போல்....

பார்வையால்
அழைத்தாள்,
வட்டமேசைக்கு!

மன்னித்துவிடு-என்
யுத்தகால
முதலுதவிப் பெட்டியே!
தற்போது "பேச்சுவார்த்தை"
வேண்டாம்!
பொறுத்திரு
இரண்டு மாதங்கள் மட்டும்!!

-எம். சுரேஷ்-

### மனிதன் சப்பிய நிம்மதி!

உன்-விழிகளுக்குள்,
கொலைவெறி
இல்லையா...
வா-
என் விழிகளுக்குள்,
தூசாய் கிட!

•

மாடு சப்பிய வைக்கோலாய்,
மனிதனை தின்னாத-
உன்-
வாய்க்குள்,
நான்-
வெல்லமாய் கசிவேன்.

•

மரம் கொத்தியைப்போல்-
கொத்தி...கொத்தி-
எடுத்த-
உன் சகோதரனின்,
உயிர்களுக்காய்-
நீ-
மெளனமாய் அழுதுபார்!
உனக்காக
என் பிரார்த்தனையை
நீட்டிக்கொள்வேன்.

•

இனவாத 'மூட்டை'கள்
உன்-
கைவிரலால்
செத்திருப்பின்,
அதற்காக-
நான்
உன் அடிமையாவேன்.

•

குறுக்குக் கோழியாய்-
ஒற்றுமைக்காய்-
புறுபுறுக்கும்,
என்னை
நீ
பைத்தியம்-
என்றாலும்,
அதை நான் வரவேற்பேன்.

•

அதோ பார்...!
இரத்தங்களையும்...
சதைகளையும்...

உன்னால் முடியுமா
பிசைந்தெடுத்து
ஒரு 'மனிதன்' படைக்க...?

•

இந்த
இலங்கைத் தீவிற்கு
ஒரு நிமிடமேனும்
நிம்மதி தா-
என் உயிரை குடித்தாவது;
அது போதும்
எனக்கு!

ஒட்டமாவடி-அறபாத்.

### -கனவுகளில் நான்-

வானவில்லின் முதுகு
அதில்
வரிசையாய்
வண்ணாத்திகள் உட்காரும்.
என்னையும் அழைக்கும்.
வழுக்கும் பனியின்
வட்டப் பரப்பில்
சந்தோசப் பூக்களைச்
செருகும் விரலாய் மனம்
கவலைகள் மொத்தமாய்
களவு போயிருக்கும்.
மகரந்தக் கூட்டின்
உள்ளார்ந்த மணிகளாய்
மெதுமையாய்
பிரகாசித்து மினுங்கும்

என்னுலகம்.
குருவியின் சிறகில்
குந்திப் பறக்கும்
அருவமாய் என்னுரு.
புள்ளியாய் ஒடுங்கும்
பூமியைப் பார்க்கும் நான்
ஆகாசப் பூக்களை அள்ளிச்
சேகரிப்பேன்.
"ரீ....ரீ...ரீ...ங்..ங்.."
ஓ...கலைந்திடும் கனவும்
அதைக் கலைத்திடும் அலாரமும்...
மீண்டுமொரு உதயத்தில்
புதிதாய் விழிப்பேன்.

-ஷர்மிளா இஸ்மாயில், கண்டி-

### புதிதாய்ச் சொல்

மானுடம் பாடும்
கவிஞன்-
என்னைத் தேடி
அவர்களும்,
இரு துப்பாக்கியும்!

•

"எழுக கவிஞரே,
எழுதுக, நலமாய்
நம்மைப்பற்றி
நாலு வரியில்
புதிதாய் சொல்க!"
என்றவர், சென்றனர்.

•

என்னை எழுதினால்
இவர்கள் இல்லை,

இவர்களை எழுதினால்
நானே இல்லை
எதை எழுத?
எப்படி எழுத?

•

எண்ணி நாலு
வரியில் எழுதலாம்,
இப்படி-
......................
......................
என்ன எழுதினேன்
புரிகிறதா உங்களுக்கு?
புரிந்தால் சரி!

-யாத்திரிகன்-

# இந்த வாரம் உங்கள் பலன்

## (27.02.94 முதல் 05.03.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், வெள்ளி, சனி, செவ்வாய் |
| இடபம் | - கேது |
| துலாம் | - விழாயன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - புதன் |

சந்திரன் -சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.
4.3.94இல் மீனச் சுக்கிரன்

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனப்பயம், கடன் தொல்லை. | காலை 7 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் அதிகம், பணச்செலவு. | பகல் 12 மணி |
| சனி- | கோபமிகுதி, குடும்பக் கலகம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | அதிகாரவிருத்தி, பணவரவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பி.ப 1 மணி |
| புதன்- | பணத்தட்டுப்பாடு, மனக்கவலை. | பி.ப 3 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, மனக்கவலை நீங்கும். | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| சனி- | துயர் நீங்கும், செலவு மிகுதி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்றசெயல், வீண் மனஸ்தாபம். | காலை 9 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் சகவாசம், கௌரவம். | காலை 9 மணி |
| வெள்ளி- | வெளியிடப்பயணம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- | உறவினர் கலகம், பணத்தட்டுப்பாடு. | காலை 8 மணி |
| செவ்வாய்- | செய்கருமம் வெற்றி, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | உறவினரால் தொல்லை, வீண் மனஸ்தாபம். | காலை 10 மணி |
| வியாழன்- | கடன்பயம், அந்நியர் சகவாசம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, செய்தொழில் விருத்தி. | பி.ப 1 மணி |
| சனி- | கௌரவக்குறைவு, மனப்பயம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரியக்கேடு, மனக்கவலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தெய்வ நம்பிக்கை, முயற்சி மேன்மை. | பகல் 10 மணி |
| புதன்- | உறவினர் பகை, வீண் கலக்கம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பணவரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | தனலாபம், செய்தொழில் நன்மை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 8

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள- | தொழில் மேன்மை, காரியசித்தி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனத் தெளிவு. | பகல் 12 மணி |
| புதன்- | அதிகார விருத்தி, உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | தொழில் மேன்மை, புதிய ஸ்தானம். | காலை 10 மணி |
| வெள்ளி- | பணவரவு, மனக்கவலை நீங்கும். | பி.ப 2 மணி |
| சனி- | உயர்ந்த எண்ணம், புதிய முயற்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், செய்தொழில் விருத்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய சித்தி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | மனப்பயம் நீங்கும், சுபகாரியசித்தி. | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் சகாயம், உயர்ச்சி நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | கடன்பயம், வீண் முயற்சி. | பி.ப 3 மணி |
| சனி- | துயர் அதிகம், செலவு மிகுதி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கடன் பயம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | செய்தொழில் நஷ்டம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த எண்ணம், புதிய முயற்சி. | காலை 8 மணி |
| புதன்- | வீண் தொல்லை, நினைத்த காரியத் தடை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பணவரவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, கௌரவம். | பி.ப 4 மணி |
| சனி- | அந்நியர் உதவி, புதிய நன்மைகள். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இல்லச் சிறப்பு, குடும்ப மேன்மை. | காலை 9 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, உயர்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகாயம், தேகசுக நன்மை. | பி.ப 1 மணி |
| புதன்- | வீண் முயற்சி, காரியத்தடை. | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பண வரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| சனி- | காரியசித்தி, உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை நீங்கும், செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | உயர்ந்த எண்ணம், பண வரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | கௌரவம், செய்தொழில் மேன்மை. | பி.ப 1 மணி |
| புதன்- | பணவரவு, முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | தொழில் பலிதம், காரிய மேன்மை | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், நிலைப்பிரிவு. | பி.ப 1 மணி |
| சனி- | செய்தொழில் நட்டம், மனப்பயம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செலவு மிகுதி, கடன் பயம். | காலை 9 மணி |
| திங்கள்- | உறவினர் சகாயம், மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வீண்தொல்லை நீங்கும், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | செய்தொழில் நட்டம், மனப்பயம். | காலை 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப 3 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தூர இடப் பயணம், கௌரவ நிலை. | காலை 9 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, முதலீட்டு மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பதவி மாற்றம், மன மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- | செய்தொழில் மேன்மை, காரியசித்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | உயர்ந்த எண்ணம், பணத்தட்டுப்பாடு. | கால்ல 9 மணி |
| சனி- | செய்தொழில் சித்தி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## கணவன் உயிர் மனைவியின் கையில்!

### தகுந்த நேரத்தில் உரிய நடவடிக்கைக்கு உகந்த வழிகள்!!

கணவனுடைய நோய் அறிகுறிகளை ஒரு மனைவியால் கண்டுகொள்ள முடியும். நோய் பீடித்து அபாயகரமான நிலை உண்டாவதற்கு முன்னர் உரிய முன் ஏற்பாடுகளைச் செய்து உயிரைக் காப்பாற்றும் வல்லமை ஒரு மனைவியிடமே இருக்கிறது, என்று பிரபல மருத்துவ நிபுணர் கூறுகிறார்.

"ஒரு குழந்தையின் உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்களை ஒரு தாய் உடனடியாகக் கண்டுகொள்ளுகிறாள். அதே போன்று தன் கணவனுடைய உடல் நிலையில் தோன்றும் நோய் அறிகுறிகளை ஒரு மனைவிதான் முதலில் அவதானிக்கிறாள்.

"சில பாரிய நோய்கள் தன் கணவனுக்கு ஏற்படக்கூடும் என்பதற்கான எச்சரிக்கைக் கூறுகளை முன்கூட்டியே அறிந்தவுடன் உரிய நடவடிக்கையினை எடுத்துக் கொண்டால் கணவனின் உயிரைக் காத்துக்கொள்ள முடியும்."

இவ்வாறு கூறுகிறார் டாக்டர் வில்லியம் கண்ணிக் என்ற மருத்துவ நிபுணர். அவர் தொடர்ந்து கூறுகையில், "ஒரு ஆண் தனக்கு ஏதாவது நோய் இருக்கிறது என்பதை யாராவது சுட்டிக் காட்டினால் பெரும்பாலும் நம்ப மறுப்பார். இதனால் மருத்துவரிடம் சென்று உரிய மருத்துவம் பார்ப்பது தாமதமாகலாம். இதேவேளை கணவருக்குள்ள நோய் அறிகுறிகளை அவரிடம் பக்குவமாகத்தான் மனைவி எடுத்து விளக்கவேண்டும். அதிர்ச்சி அடைவதோ அல்லது கணவரை அதிர்ச்சிக்குள்ளாக்குவதோ கூடாது. மிகவும் மென்மையாக கணவரிடம் கூறி அவரை மருத்துவரிடம் அழைத்துச் செல்லவேண்டும்" என்கிறார்.

"நீங்கள் உடனடியாக டாக்டரைப் போய்ப் பார்க்க வேண்டும்" என்று கணவரிடம் கூறினால் அவர் அதிர்ச்சிக்குள்ளாக நேரிடும். ஆகவே நிலமையை கணவரிடம் பக்குவமாக விளக்க வேண்டியது மனைவியின் பொறுப்பு," என்றும் டாக்டர் வில்லியம் சொல்கிறார்.


உயிர்கொல்லி நோய்கள் என்று கருதப்படும் 6 நோய்களின் ஆரம்ப அறிகுறிகளை டாக்டர் வில்லியம் தருகிறார்:

- **மாரடைப்பு:** நடுநெஞ்சிலே அல்லது சற்று இடது புறத்திலே வலி தோன்றி மெல்ல மெல்ல இடது புஜம் அல்லது இடது தாடை போன்ற இடங்களுக்குப் படரும். தலைச்சுற்று அல்லது மயக்கம் ஏற்படும். சோர்வு ஏற்படும். அத்துடன் உடல் வியர்க்கும். ஒரு வகை சோகை முகத்திலும் உடலிலும் தென்படும். மாரடைப்பு நோய்க்கு வயது விதி கிடையாது. எந்த வயதிலும் ஏற்படலாம். வலி தொடர்ந்திருக்குமானால் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும்.
- **உயர் இரத்த அழுத்தம்:** கடுமையான தலைவலி; கண்பார்வையில் கோளாறு, மூச்சுத் தடுமாற்றம் ஆகியவை இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள். இத்தகைய அறிகுறிகள் கண்டும் காணாதிருந்தால் இரத்த நாளங்கள் தடிப்படைந்து மாரடைப்பு மற்றும் இருதயக் கோளாறுகள் தோன்றக்கூடும். ஏற்கனவே ஒருவருக்கு இரத்த அழுத்தம் இருந்து, குணமாகி விட்டாலும் மீண்டும் மீண்டும் இந்நோய் வருவதற்கு வாய்ப்புண்டு. ஆகவே இரத்த அழுத்தத்திற்கான மாத்திரைகளை எப்போதும் கைவசம் வைத்திருப்பது அவசியம். மருத்துவரின் ஆலோசனைப்படி மாத்திரைகளை வேளாவேளைக்கு உட்கொள்ளுவதற்கான தூண்டுதலை மனைவி கொடுக்கவேண்டும்.
- **நீரிழிவு:** அடிக்கடி தாகம் ஏற்படும்; அதேபோல் அடிக்கடி சிறுநீர் கழியும்; சோர்வும் பலவீனமும் உண்டாகும். குறுகிய காலத்துள் உடலின் எடை சடுதியாகக் குறையும். பசியும் அதிகரிக்கும். நீரிழிவு கண்டவர்கள், உணவுக்கட்டுப்பாட்டை தொடர்ந்து கடைப்பிடித்து வருவதற்கு மனைவிதான் பெரும் பங்கினை வகிக்கவேண்டும். ஆரம்பக் கட்டத்தில் உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் நல்ல பலன் காணலாம். இதனை கவனிக்காமல் விட்டுவிட்டால் ஆயுள்காலம் முழுவதும் மாத்திரைகளோ ஊசி மருந்தோ தினசரி பாவித்து வரவேண்டிய நிலை ஏற்படும்.
- **நுரையீரல் புற்றுநோய்:** இருமும்போது இரத்தம் வெளிவருதல்; இடைவிடாத தொடர் இருமல், (புகைப்பதனால் ஏற்படும் இருமல் போன்றதல்ல) குரலில் கருதி மாற்றம் ஏற்படும். தொண்டையில் கரகரப்பு தொடரும். இத்தகைய அறிகுறிகள் கண்டால் தன் கணவனை மிகவும் பக்குவமாக-புகைப்பதை நிறுத்தும்படி வற்புறுத்துவதுடன் மருத்துவ பரிசோதனைக்கு அவரை அழைத்துச் செல்ல வேண்டும்.
- **ஆண்குறியுடனிணைந்த சுரப்பியில் புற்றுநோய்:** அசாதாரணமான வேளைகளில் சிறுநீர் கழிதல். குறிப்பாக இரவு நேரங்களில் சிறுநீர் பெருகும். அதே வேளை சிறுநீர் கழிக்கும் போது வலியும் நீர் வெளியேறுவதில் சிரமும் காணப்படும். இத்தகைய நிலை பொதுவாக 60 வயது கடந்த முதியவர்களுக்கே ஏற்படும். கணவரின் சிறுநீர் கழிக்கும் போது படும் துன்பத்தைக் கண்டு மனைவி நோயின் நிலையினை அறிந்து மருத்துவரிடம் அழைத்துச் செல்லலாம்.
- **சருமப் புற்றுநோய்:** தோலில் அசாதாரண வளர்ச்சி, மருந்துகள் தடவியும் ஆறாத புண், புறச்சதை வளர்ச்சி, பாலுண்ணி போன்ற கொப்புளங்கள் அல்லது இடம் மாறும் மச்சம் ஆகியவை சருமப் புற்றுநோய்க்கான அடையாளங்களாகும்.

ஒரு மனைவி தன் கணவனின் சருமங்களில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களை அவதானிக்கவேண்டும். மேற்கூறியவற்றில் எவையேனும் அளவில் பெருப்பதைக் கண்டால், அவற்றிலிருந்து நீரோ அல்லது இரத்தமோ வடிவதைக் கண்ணுற்றால் உடனடி மருத்துவ உதவியினை நாடவேண்டும்.



## கண்மணியாய் பிறந்த குழந்தைக்கு கண்களில் ஏற்பட்ட துயரம்!



குழந்தை மத்தியூக்கு தனது வீட்டில் நத்தார் பண்டிகைக்காகச் செய்யப்பட்டிருந்த ஒளி அலங்காரங்களைப் பார்க்க முடியவில்லை. இத்தனைக்கும் அவனுக்கு அதுதான் முதல் கிறிஸ்மஸ்.

பிறந்து 7 மாதங்களில் மத்தியூ தன் பார்வையினை இழந்துவிட்டான்.

சத்திரசிகிச்சை மூலம் இரு கண்களையும் அகற்றாவிட்டால் மத்தியூ தன் உயிரையே சில வாரங்களில் இழந்துவிட நேரிடும் என்றும்; ஏதாவது முறையில் உயிர் போவது தாமதிக்க நேர்ந்தாலும் அவன் கண்கள் அவனுக்கு பெரும் துன்பத்தை அளிப்பதுடன், பார்வையும் முற்றாக இல்லாமல் போய்விடும் என்றும் மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

அவனுடைய தாயாரான அலிசனும் தந்தையான திமோதியும் பல நாட்கள் துயரம் தாங்காமல் துடித்தனர்.

இறுதியில் மத்தியூ கண்பார்வையற்றவனாக - உயிருடன் வாழ்வதே மேல் என முடிவெடுத்தனர்.


சத்திர சிகிச்சை சீராக முடிவடைந்தது. இன்று உடல் நலத்துடன் மத்தியூ காணப்படுகிறான். விரைவில் அவனுக்கு பொய்க் கண்கள் பொருத்தப்படும். ஆனால் பார்க்க முடியாது.

'றெட்டினோபிளாஸ்ரோமா' என்றவகை நோய் குழந்தை மத்தியுவின் கண்களைத் தாக்கியிருந்தது. இது ஒருவகைப் புற்றுநோய் போன்றதென மருத்துவர்கள் கூறினர். பிரிட்டனில் 20,000 குழந்தைகளில் ஒன்றுக்கு இத்தகைய நோய் ஏற்படுகிறதாம்.

அவனுடைய தாயான அலிசன் 12 வருடங்களாக பிரிட்டன் தேசிய மருத்துவ சேவைப் பணியிலீடுபட்டவர் என்பதனால் இத்தகைய முடிவினை எடுப்பதில், கடற்படைத் துறையில் பணிபுரியும் கணவன் திமோதியைவிட முந்திக்கொண்டு தைரியமாகவும் இருந்தார்.

ஆரம்பத்தில் ஒருகண் பார்வையினை யாவது பாதுகாக்கலாம் என்று ஆலோசித்தார்கள். ஆனால் மத்தியூவின் இரு கண்களிலும் வெண் படலங்கள் மிக வேகமாகப் படரலாயின. தாமதித்தால் மூளைவரை கிருமிகள் பரவி விரைவிலேயே அக்குழந்தையின் உயிர்போய் விடும் என்பதனை உணர்ந்த மருத்துவர்கள் உடனடியாக சத்திரசிகிச்சைக்கு நாள் குறித்தனர்.

இரண்டு மணிநேரம் நடைபெற்ற சத்திரசிகிச்சையின் போது அலிசனும் திமோதியும் தங்கள் மகனை உயிரோடு காப்பாற்றித்தரும்படி தீவிர பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனராம். ●



## நாக்கின் சுத்தம் பேண மிகச் சுலபமான வழி

ஒவ்வொரு நாளும் காலையில் பல்துலக்கும் போது நாக்கினையும் சுத்தப்படுத்துவது மிகமிக அவசியம். இதனால் பற்களையும் பாதுகாக்க முடிவதுடன் வாயிலிருந்து துர்நாற்றம் வீசுவதையும் தடுக்கமுடியும். இவ்வாறு பல் மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

பக்டீரியா எனப்படும் நுண்கிருமிகள் வாயின் எந்தப் பகுதியையும் விட நாக்கிலேயே குடியேறிப் பல்கிப் பெருகுகின்றன. இங்கிருந்தே பற்களின் இடைவெளிகளில், முரசில், ஏன் தொண்டைக்குள் புகுந்து உடலின் உட்பகுதிகளெங்கும் சுலபமாகச் சென்றடைகின்றன. இதனால் பற்களைப் பாதுகாக்க எடுக்கும் கவனத்தைப் போல் நாக்கினைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும் சிரத்தை எடுக்க வேண்டும்.

வாயைக் கொப்புளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகளால் மட்டும் நாக்கில் உறையும் கிருமிகளை ஒழித்துக்கட்டுவது முடியாத காரியம். பற்சுத்தத்துக்காகப் பயன்படுத்தப்படும் பற்பசையினை, அதே 'பிரஷ்'ஷில் சிறிதளவு தடவி நாக்கை-அடியிலிருந்து நுனிவரை மேலும் கீழுமாகத் தேய்க்க வேண்டும். கூடுமானவரை நாக்கில் படியும் வெண் படலத்தை ஓரளவாவது வழித்துவிடல் வேண்டும். இதனால் சொற் சுத்தமும் இருக்கும்.

நாக்கை 'பிரஷ்' கொண்டு சுத்திகரிக்கும்போது அதிக அழுத்தம் கொடுக்கலாகாது. நாக்கு மிக மென்மையான திசுக்களாலானது. சில சுரபிகளும் நாக்கில் உள்ளன. அவற்றை புண்படுத்திவிடாமல் நாக்கினை மென்மையாகத் தேய்த்தல் அவசியம். ■

## ஆவியுலகத்தை நம்பும் அமெரிக்கர்கள்! இங்குபோலவே அங்கும்!!

அமெரிக்க மக்களில் பெரும்பாலானோர் அற்புதங்களிலும் தேவதைகளிலும் இறந்த பின்னர் ஏற்படும் மறுவாழ்விலும் அசையாத நம்பிக்கை வைத்துள்ளனர். சிக்காகோ பல்கலைக்கழக தேசிய அபிப்பிராய ஆய்வு மையம் அண்மையில் நடத்திய கருத்துக் கணிப்பில் இந்த உண்மை அறியப்பட்டது.

அமெரிக்க மக்களில் 10ல் 9பேர் கடவுள் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.

70சதவிகிதமானோர் அற்புதங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

இறந்தவர்களுடன் 40 சதவிகிதமானோர் நேரடித் தொடர்பு வைத்திருப்பதாகக் கூறுகின்றனர். இறந்தவர்கள் மீண்டும் பிறக்கின்றனர் என்றும் ஆவியுலகம் இருக்கிறது என்றும் 78 சதவிகிதமானோர் கூறுகின்றனர்.

பிரபல 'ரைம்' சஞ்சிகை எடுத்த கருத்துக்கணிப்பின்படி 69 சதவிகிதமானோர் தேவதைகளின் நடமாட்டத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர். 46 சதவிகிதமானோர் தங்கள் குடும்பங்களை குறிப்பிட்ட தேவதைகள் வழி நடத்துவதாக நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

டாக்டர் பில்லி கிறஹாம் எழுதிய "தேவதைகள்-இறைவனின் அந்தரங்கத் தூதுவர்கள்" என்ற நூல் 2 கோடி 60 இலட்சம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

19,000 பேரிடம் தகவல்கள் திரட்டப்பட்டு தரவுகள் தயாரிக்கப்பட்டன. நம்பிக்கை மூலம் நோய் குணமாக்குதல், எதிர்காலத்தைப் பற்றிக் கூறுவோர் மற்றும் மந்திர தந்தரங்களைச் செய்வோர் மீது நம்பிக்கை வைத்துள்ள




அமெரிக்கர்களும் கணிசமானோர் இருப்பதாக கணிப்புகள் கூறுகின்றன.

"புதுமைகள், அற்புதங்கள் ஆகியவற்றை அனுபவ வாயிலாகக் கண்டறிந்தவர்களின் தகவல்களை செய்தி மையங்கள் புறக்கணிக்கின்றன. இவற்றை 'பொய்யும் புனைகதையும்' என்று ஒதுக்கிவிடுகின்றனர். இருப்பினும் இவற்றில் பல உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன" என்று அமெரிக்காவில் வெளியாகும்-மிகக் கூடுதலான விற்பனையுள்ள வாரப்பத்திரிகை ஒன்று கூறுகிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்


சநதோஷத்தோடு உங்களுக்கு, 'கண்ணே மதுமிதா' தொடருக்கு உங்களிடமிருந்து வந்த நிறைய-நிறைய நிறைவான கடிதங்கள் நிரம்பிய உற்சாகம தந்துவிட்டன.
உங்கள் அன்புக்கு நெகிழ்ந்தபடி நன்றி-நன்றி.
என்றும் உங்கள்
ரசிகன்

# கொலை விழும் நேரம் 3












## எழுதுவது ரசிகன்

டி.ஐ.ஜி. டென்சில் பிரசாத் வீட்டுக்கு தொலைபேசியில் முயன்று, தோற்று, மீண்டும் முயன்று முயன்று, தொடர்பு கிடைக்காமல் போக விபரீதமாய் உணர்ந்து, ரிசீவரை வைத்துவிட்டு, வைத்தவுடன், சப் இன்ஸ்பெக்டர் தயாளனை அழைத்து,

"ஹரிகரனின் அறைக்குள் வெளியார் யாரையும் உள்ளே விடவேண்டாம். உடலை அப்புறப்படுத்தியவுடன் அறையைப் பூட்டிவிடுங்கள்."

"யெஸ் சேர்."

"என் உத்தரவில்லாமல் எந்த நடவடிக்கையும் வேண்டாம். ஆ... மிஸ்டர்..... மிஸ்டர்... மனோகர்! ஹரிகரனின் உறவினர்கள் ஐ.மீன் பிரசாத் தவிர?"

"மனைவியும் இரு பிள்ளைகளும் ஊரில் இல்லை சேர். வெளியூர் போயிருப்பதாக சொன்னார்."

டி.ஐ.ஜி. அதிர்ந்து,

"வட் டு யூ மீன்.. ஹரிகரன் கல்யாணமானவரா?"

ஏன் இப்படி ஒரு கேள்வி கேட்கிறார் என்று மனோகர் ஆச்சரியமாகி,

"யெஸ் சேர்."

ஹோலின் மூலையில் வட்ட வடிவான சிவப்பு நிற சோபாவில் விடாமல் பொழியும் வானம்போல இப்போதும் அழுதுகொண்டிருந்த, மெல்லிய கைக்குட்டை எடுத்து மூக்கை சிந்திக்கொண்டிருந்த சித்ரா மீது டி.ஐ.ஜியின் பொலிஸ் பார்வை ஆழமாய் அழுத்தி நின்று மீண்டது.

பின் மனோகரைப் பார்த்து,

"ஓ.கே. ஆ...மிஸ்டர் மனோகர் உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் எங்களுக்கு தேவைப்படும்."

"காத்திருக்கிறோம்."

"சந்தோஷம். மிஸ்டர் பிரசாத் வீடு முகவரி வேணுமே."

மனோகர் சொல்ல மனதில் வாங்கிக்கொண்டு,

"தாங்யூ! தயாளன் நான் வரும் வரை நீங்கள் இங்கேயே இருங்கள். இங்கிருந்து ஊழியர்கள் யாரும் வெளியில் போகவேண்டாம். வந்து கொஞ்சம் விசாரிக்கவேண்டும். மனோகர் நீங்களும்தான்."

அவசரமாய் விரைந்துவர, அது புரிந்து ஜீப்பின் இஞ்சின் உயிர்ப்பித்து சாரதி தயார் செய்ய, பிரசாத் வீட்டு முகவரி சொல்லி "வேகமாய் போ" என்றார் டி.ஐ.ஜி. டென்சில்.

■

வேகமாய் வீட்டுக்குள் ஓடிவந்த பிரசாத், காலடியில் ஈரமாய் உறுத்த, குனிந்து பார்க்க, பணக்காரத்தனமாய் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட பளபள தரையில் வழிந்து வந்து கொண்டிருந்தது இரத்தம்.

உடம்பெங்கும் சிலிர்த்து நிமிர்ந்து பார்வை வீச,

முன்ஹோலின் வலது புறத்தில், தொலைபேசி வைக்கப்பட்டிருந்த சின்னதான மேசைக்கு முன்பாக, கீழே தரையில், மேலே கூரையைப் பார்த்தபடி, வாய் திறந்தபடி, நெஞ்சின் மையத்தில் இருந்து வழிந்துகொண்டிருந்த இரத்தத்தோடு கிடந்தான் அவன்.

உடலெங்கும் பயத்தில் வெட வெடக்க, கால்கள் ஒத்துழைக்க மறுக்க, பெருமுயற்சியாய் தள்ளாடி நடந்துபோக,

அவன் விழுந்து கிடந்த இடத்தில் இருந்து ஐந்து அடி தூரத்தில் நிரோசாவும் செடியில் இருந்து பிய்த் தெறியப்பட்ட மலர்போல மல்லாந்து விழுந்து கிடந்தது பார்வையில் பட, அதிர்ச்சி தாங்காமல்,

"ஐயோ... நிரோசா..." என்று வாய்விட்டு கத்திய சத்தம் வெளியே காரில் இருந்து இறங்கிய சாரதிக்கும் கேட்டது.

விழுந்து கிடந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தவளை கவனியாமல், பிரசாத் நிரோசாவை நோக்கி ஓட, நீட்டியபடி கிடந்த அவன் கால்களில் இடறுப்பட்டு, தரையில் சாய, சிந்தியிருந்த குருதி சட்டையில் பட்டு நனைத்தது.

தடுமாறி எழ முயல அவன் முகத்தில் பார்வை பட்டது.

சின்னதாய் அளவோடு வெட்டப்பட்ட மீசை வைத்து, தலைமுடியை மேல் நோக்கி வாரியிழுத்துவிட்டு, சில நாட்கள் சவரம் செய்யப்படாமல் இருந்த முகத்தோடு, நல்ல திடகாத்திரமான உடற்கட்டோடு, நெஞ்சின் மையத்தில் செருகப்பட்டிருந்த கறுத்த உருக்குப் பிடி வைத்திருந்த கத்தியோடு செத்துப் போயிருந்தான். திறந்து வெறித்திருந்த விழிகள் நிச்சயமாய் செத்துப்போனான் என்று உறுதி சொல்லிக்கொண்டிருக்க,

"யார் இவன்? இங்கே எப்படி வந்தான். யார் இவனை கத்தியால் செருகி..." என்றெல்லாம் மனதில் எழுந்த பதட்டம் நிரம்பிய கேள்விகளோடு, நிரோசாவின் அருகே போய், கைகள் நடுங்க, ஐயோ என்று மனது பதற, "உயிர் இருக்கவேண்டும். நிரோசா உயிரோடு இருக்க வேண்டும்" என்று மனதுக்குள் மன்றாடியபடி குனிந்து, விழிகள் செருகி, தலையை தரையோடு ஒரு புறம் திருப்பிக்கிடந்த நிரோசாவின் மூக்கருகே பிரசாத் கைவைத்துப் பார்க்க,

நிரோசா...பிரசாத்தின் செல்வமகள், செல்ல மகள் நிரோசா,

மடிந்துவிடவில்லை. மயக்கத்தில்தான் கிடக்கிறாள் என்பதை நாசிவழியே வந்துகொண்டிருந்த மூச்சுக்காற்று சொன்னது.

அதிர்ச்சியிலும், அருகே ஒரு கொலையான உடல் கிடக்கும் பயத்திலும் கூட சற்று நிம்மதியாகி, நிரோசாவை மயக்கத்தில் இருந்து முதலில் மீளவைக்க வேண்டும் என்று நினைக்க, அவர் முகத்தின் முன்பாக ஒரு கரம் நீண்டு, தண்ணீர் நிரப்பிய கிளாசை கொடுக்க, நெஞ்சுக்குள் 'திக்' என்று உணர்ந்து நிமிர்ந்து, நீட்டிய கரத்திற்குரியவனைப் பார்க்க,

சாரதி ராசைய்யா முகத்தில் பயக் களையோடு தெரிய, பயத்தில் இழுத்துப் பிடித்த மூச்சை வெளியேற்றி, நிரோசாவின் முகத்தில் தண்ணீர் தெளித்து, நிரோசா மெல்ல, மெல்ல விழிகள் மலர்த்த, சாரதி இராசையா சூழலின் விபரீதம் உணர்ந்து கைகளை மார்பின் குறுக்கே கட்டியபடி திகைப்பு மாறாமல் நின்றுகொண்டிருக்க,

வெளியே ஜீப்பில் வந்து இறங்கி, வழிகளால் வீட்டை அளவெடுத்துவிட்டு, துணைக்கு இரு கான்ஸ்டபிள்கள்வர சீரான நடையில் வந்து முன்ஹோல் கதவில் விரல்களால் தட்டினார் டி.ஐ.ஜி.டென்சில்.

யார் என்று நினைத்து பிரசாத் திரும்பி நிரோசாவுக்கு அருகில் இருந்தபடியே பார்க்க, இராசையா திறந்திருந்த கதவு வழியே தெரிந்த காக்கி உடைகள் கண்டு மலைத்துப்போக, உள்ளே வந்த டி.ஐ.ஜி. கிடைத்த தகவல் பொய் சொல்லவில்லை என்று புரிந்து, தலையில் இருந்து பொலிஸ் தொப்பி அகற்றி கையில் எடுத்தபடி நடந்து, விழுந்து கிடந்தவனின் அருகே போய், நடந்துவிட்ட விபரீதத்தை விழிகளால் உள்வாங்கிக் கொண்டு, பிரசாத்தையும், கீழே கிடந்த நிரோசாவையும் நோக்கி பார்வையை செலுத்தினார்.

பிரசாத் நிமிர்ந்து பார்த்து, முகத்திலே ஆக்கிரமித்திருந்த பயத்தோடு, 'பொலிசுக்கு எப்படி யார் தகவல் கொடுத்திருப்பார்கள்?' என்று மனதில் யோசித்தபடி நிற்க, அருகே போன டி.ஐ.ஜி.

"யூ ஆர் மிஸ்டர் பிரசாத்?"

என்று பாதிச் சந்தேகத்தோடு கேட்க, 'ஆம்' என்பதாய் தலையாட்டினார் பிரசாத்.

அதிர்ச்சியில் இருந்து மீளாத முகத்தோடு, முகத்தில்பட்ட குளிர்ந்த நீர் உபயத்தில் மெல்ல, மெல்ல விழிகள் திறந்து, திறந்த விழிகளை சுற்றிலும் ஓடவிட்டு, தந்தையும், அருகே காக்கி உடைகளும் நிற்பதைப் பார்த்து, தலை திருப்பி அருகே பார்த்து, விழுந்து கிடந்தவன் மார்பிலே கத்தியைப் பார்த்து, மீண்டும் மரண அபாய நொடிகள் மனதில் எழுந்து காட்சியாக விரிய,

"வீல்" என்றொரு சத்தம் மட்டும் உரத்து எழுப்பிவிட்டு, மீண்டும் விழிகள் சாத்திக்கொண்டு மயக்கமானாள் நிரோசா.

எல்லாவற்றையும் நிதானமாக அவதானித்தபடி பிரசாத்தைப் பார்த்து,

"மோசமான சூழ்நிலைதான். என்றாலும் நாங்கள் எங்கள் வேலையைத் தொடங்குவதற்கு ஆரம்பப்புள்ளி தெரிந்தாக வேண்டும். சோ... மிஸ்டர் பிரசாத் நீங்கள் சிரமப்படாமல் இப்போது சில கேள்விகளுக்கு மட்டும் பதில்சொன்னால் போதும்" என்றார் டி.ஐ.ஜி.

கவலையாய் முகம் இருக்க, சரி என்று தலையசைத்தார்.

"தாங்யூ... நாம் அங்கே போய் இருந்து பேசலாமே."

என்று முன்ஹோலின் மத்தியில் இருந்த சோபாக்களை நோக்கிப் போக பிரசாத் தளர்ந்து நடந்து பின்னால் போய், தளர்வாகவே சோபாவை காட்டி டி.ஐ.ஜியை இருக்கச் சொல்லி, தானும் தளர்வாய் இருந்து, என்ன கேட்கப் போகிறீர்கள்? என்பது போல முகத்திலே வினாக்குறி காட்ட,

"எப்போது கொலை நடந்தது?"

என்ற சாதாரணக் கேள்வியில் இருந்து ஆரம்பித்தார் டென்சில்.

பிரசாத் பலவீன மான குரலில் எல்லாம் சொல்ல, அனைத்தையும் செவிகளால் வாங்கிக்கொண்டு, பிரசாத்தின் முக பாவங்களை விழிகளால் பிரதி எடுத்துக் கொண்டு, அனைத்தையும் மனதிற்குள் பத்திரப்படுத்திக்கொண்டு,

"இப்போதைக்கு இது போதும். சிரமம் தந்ததற்கு மன்னிக்க வேண்டும்."

என்றபடி சோபாவிட்டு எழுந்தார். நிரோசாவுக்கு மயக்கம் தெளிவிப்பதில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள், அவள் மீண்டும் விழிகளை மெல்ல விரிப்பதை பார்த்துவிட்டு, டி.ஐ.ஜி. டென்சிலை நோக்க, அவர் அர்த்தம் புரிந்து நிரோசாவை நோக்கி விரைந்தார்.

விரைந்துவரும் டென்சில் மீது வெறித்த பார்வை வீசியபடி தரையில் இருந்து முதுகு உயர்த்தி எழுந்தபடி,

திடீரென்று வாய்விட்டு பலமாகச் சிரிக்கத் தொடங்கினாள் நிரோசா.

■

இன்ஸ்பெக்டர் மோகனுக்கு பெரிய சங்கடமாக இருந்தது.

சங்கடத்திற்கு காரணம் அவர் முன்னால் இருந்தது. முழங்கால்களுக்கு ஒரு அங்குலம் மேலே நின்றுவிட்ட மினிஸ்கேட்டில், அந்த மினிஸ்கேட்டின் பரிபூரணமான இறுக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக அபாரமான அழகுகள் இரண்டு கழுத்திற்கு கீழே உயர்ந்து நிமிர்ந்து போராடிக்கொண்டிருக்க, காலுக்கு மேல் கால்போட்டபடி, அதனால் தெரிந்த கால்களின் திரட்சி, பளிச்சென்று விழிகளில் பட்டு அவஸ்தை விதைக்க சோபாவில் இளமை மிடுக்கோடு கம்பீரமாய் அமர்ந்திருந்தது பிரியா.

. பிரியாவுக்கு பிடித்தது பத்திரிகைத் தொழில். பிரியாவுக்கு பொழுது போக்கும் அதே.

இன்ஸ்பெக்டர் மோகன் பிரியாவை நேரே பார்க்காமல் இருக்க முயற்சி செய்து, சோபாவுக்கு நேர்மேலே பிரேம் செய்து மாட்டப்பட்டிருந்த மொனாலிசாவின் ஓவியத்தை இரசித்தார். மனம் மொனாலி சாவில் இருந்து விலகி கீழே இறங்கப் போவதாக முரண்டுபிடித்துக் கொண்டிருந்தது.

"என்ன இன்ஸ்பெக்டர் எனக்காக நீங்கள் வந்து காத்திருப்பதாக போனில் சொன்னார்கள். ஏன்-எதற்கு என்று அறிய பாதிவேலையை இடையில் போட்டுவிட்டு இங்கே பத்திரிகை அலுவலகத்திற்கு ஓடி வந்தால், நீங்கள் மொனாலிசாவை ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள்."

கேலி குரலில் தொணித்தது.

"உங்களை டி.ஐ.ஜி. பார்க்க வேண்டுமாம்."

"எந்த டி.ஐ.ஜி. மொட்டையாகச் சொன்னால் எப்படி?"

"டி.ஐ.ஜி. டென்சில்."

மோகன் சொல்ல, யோசனையாய் நெற்றியின் மையத்தில் ஆட்காட்டி விரலால் இரண்டுமுறை தட்டி,

"ஓ...அந்த மதுமிதா விவகாரத்தில் பேசப்பட்டவராச்சே. எங்கே அந்த இன்ஸ்பெக்டர் குலாம்ஷா? ஆளையே காணவில்லையே. அது சரி என்னை எதற்கு பார்க்கவேண்டும் உங்கள் டி.ஐ.ஜி?"

"காரணம் சொல்லப்படவில்லை."

விழிகள் அவர் அனுமதியில்லாமல் பிரியாவின் கழுத்துக்கீழே இறங்கி அலைய கட்டுப்படுத்துவது கஷ்டமாக இருந்தது.

மோகனின் சங்கடம் புரிந்து பிரியா மனதுக்குள் இரசித்தாள். தன் அழகு ஏற்படுத்தும் அவஸ்தையால் சோபாவில் இருந்தபடி அவர் நெளிவதை விழிகளால் பருகிக்கொண்டே கேட்டாள்."

"எப்போது பார்க்க வேண்டுமாம்?"

"கையோடு கூட்டி வரச் சொன்னார்."

"கையோடு கூட்டி வரச் சொன்னாரா அல்லது கையைப் பிடித்துக் கூட்டிவரச் சொன்னாரா?"

என்ன? என்பதுபோல் அவள் முகத்தைப் பார்க்க விழிப்புருவங்கள் உயர்த்தி, மெல்லியதாய் லிப்ஸ்டிக் பூசிய உதடுகளால் சிரித்தாள்.

"ஓ.கே. வன் மினிட்" என்றுவிட்டு எழுந்து, அலுவலகத்தில் உள் நோக்கிப் போக, பின்புற அழகுகள் மேலும் வதைத்தன.

கைப்பையோடு வந்து,

"போகலாமே"

என்றாள்.

"ஜீப்பில்தானே வருகிறீர்கள்."

"நான் ரெடி. பட். திருப்பிக் கொண்டுவந்து பக்குவமாக விட்டு விடவேண்டும்."

"ஓ.கே.."

என்று நடக்க,

"என்ன சாதாரணமாக சொல்லி விட்டீர்கள் என் கற்பு இப்போது உங்கள் கையில்."

என்று மெல்லியதாய் சத்தம்வர சிரித்தாள்.

ஜீப்பை நெருங்கியபோது திடீரென்று கேட்டாள்.

"ஹரிகரன் கொலை விவகாரத்தில் குற்றவாளியை மடக்கிவிட்டீர்களா இன்ஸ்பெக்டர்?"

"அதை டி.ஐ.ஜிதான் நேரடியாக கவனித்துக்கொள்கிறார்."

"அப்படியானால் டி.ஐ.ஜியைத்தான் நான் விசேஷமாகக் கவனிக்க வேண்டும்."

"என்ன?"

"யெஸ். நான் யார் தெரியுமா இன்ஸ்பெக்டர்?"

என்றாள் குரலை உயர்த்தி.

சந்தேகமாய் திரும்பி அவளைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

அவர் சந்தேகம் புரிந்து சிரித்து "சொல்லட்டுமா?"

என்றாள்.

இன்ஸ்பெக்டர் மோகன் ஆர்வமானார்.

(இன்னும் வரும்)

# பேனா நண்பர் அரங்கம்



பெயர்: வீ. திருச்செல்வம்
வயது: 18
முகவரி: மே/பா, பி. வீரமுத்து
பெட்ரோ எஸ்டேட்
நுவரெலியா.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: ஏ.சி. பர்ஸானா
வயது: 19
முகவரி: 29, செட்டி வீதி,
கல்பிட்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: ப.ஞா. பிரகாஷ்
வயது: 24
முகவரி: சோளங்கந்தை எஸ்டேட், மொன்றிகிறிஷ்டோ, நாவலப்பிட்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகைகள், புத்தகங்கள் வாசித்தல்.



பெயர்: எம். முபாரக்
முகவரி: காங்கேயனோடை-12,
காத்தான்குடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: யூ. காந்தன்
முகவரி: CONST DEPT.
P.O.BOX-1679
BURAYDAH
K.S.A.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல், வீடியோ பார்த்தல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எம். பரீட்
முகவரி: நளீபா மன்ஸில்
எம்.சி.எம்.லேன்,
காத்தான்குடி-06.
பொழுதுபோக்கு: கதைகள் எழுதுதல், பத்திரிகை, புத்தகம் வாசித்தல்.

பெயர்: செல்வி. கதிர்வேல் சரோஜினி
முகவரி: சோலண்ட்ஸ் கீ/பி,
சோலண்ட்ஸ் எஸ்டேட்,
லுணுகல.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கதைப்புத்தகம் வாசித்தல், கூடைப்பந்து விளையாடுதல்.

பெயர்: எல். ரம்ஸான் பேகம்.
வயது: 14
முகவரி: கல்பிட்டி ரோட்,
நுரைச்சோலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், டி.வி. பார்த்தல், வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# மீனா!...அமீனா!

ஆக்கம்: ஈழக்கூத்தன்

சமகால நடப்புக்களை
சித்தரிக்கும்போதே
கலை-இலக்கிய முயற்சிகள்
காத்திரமாகின்றன.
கலை-இலக்கியத்திற்கான
ஊற்றுமூலம் மக்கள் மத்தியில்தான்
இருக்கிறது. அதில் இருந்து சிறந்த
படைப்புக்களை உருவாக்கி தான் வாழும்
காலகட்டத்தின் சோகங்களை,
துயரங்களை, மனித மாண்புகளுக்கு
எதிரானவற்றை வெளிக்காட்டுதலே
முக்கியம். 'மீனா!...அமீனா!' என்னும்
இக்கதை நம்கால சோகத்தின்
வெளிப்பாடு. ஃபிரான்சில் இருந்து
வரும் 'ஓசை' சஞ்சிகையில்
பிரசுரமானது.
'ஓசை'க்கு நன்றி.

பொலன்னறுவைப் பொதுக்குழியில்
புதைபட்ட என் அமீனா!
பன்னிரு ஆண்டின் முன்
என் வாழ்வில்
மத்தாப்பாய்ச் சிரித்த
ஆறு வயது மின்னல்!
இன்று
அவளோர் இளமங்கை.
உயிர்தப்பிப் பிழைத்திருந்தால்!
இல்லையென்றால்,
பதினெட்டில் கருகிவிட்ட
என் ஆறுவயது
மின்னல்!

கொழும்பிலே வாழ்ந்த காலை...!

வேலை முடித்து,
மாலையிலே வீடு வந்து
படியேறுகின்றேன்!

வாயிலைக்கடந்து,
வெளியே பாய்கின்றதொரு பிஞ்சு!
அதன் பின்னால்,
வால்பிடித்து ஓடுகின்றாள்!
எனது குழந்தை மகள்!
பாயும் வழியில் இவள் உதிர்க்கிறாள்.
"அது, அமீனா"

"ஓ! மீனாவா?"
"அ!அ!மீனா, இல்லே, அமீனா!"

இந்தத்தடவை மின்னலே சிணுங்கியது!
மறுகணமே உள்ளே அது ஓடியது!
காதர் நானா வீட்டுக் கதவமும்
மூடியது!

உள்ளே நான் செல்கிறேன்!
ஆடை களைந்து,

வீட்டுடை அணிந்து,
முற்றத்து நாற்காலியில்
முடங்குகின்றேன்!
காதரும் வந்து சேருகின்றார்!

கடைவியளம் கூறுகின்றார்!
ஊர்ப்புதினம் கதைக்கின்றோம்!
"பொலன்னறுவைத் தங்கை
இங்கே வந்திருக்கா:
நோன்புக்கு இங்கேதான்,
யெங்கூட இருப்பா."

மன்னாரில் ஒரு தங்கை இருப்பது
அறிவேன் நான்.

புராதனத் தலை நகர்
பொலன்னறுவையிலுமா?
"ஓ அமீனாவின் அம்மாவா?"

"அட! வந்ததும் வராததுமா,
சினேகிதம் புடிச்சிட்டாளா?"

"இல்லை!
கவிதாவைக் கூட்டிக்கொண்டு
ஓடிச்சே ஒண்ணு!"
"அவளேதான்!"

உரையாடல் அலைகிறது!

மனைவியின் அதட்டல் உலகுக்கு
இழுக்கிறது.
சாதம் பிசைந்தபடி,
கவிதாவைக் கூவுகிறாள்!

வாண்டுகள் பாய்ந்தோடி வந்து
வளைகின்றன...!
"நான் சாப்பிட்டிட்டேன்!"

"உம்மா ஊட்டிடிச்சு!
ரெண்டு பேருமே திங்கியாச்சு!"

சிற்றாறு இரண்டும் உள்ளே குதித்தோட,

களை கட்டும் விளையாட்டின்
அமர்க்களம்
கேட்கிறது!

எங்கள் கதைவளர,
இருவீட்டுச் சாப்பாடும்
முற்றத்தில் வந்து பொலிகின்றன!
பொலன்னறுவைப் புதுச்சமையல் என்
தட்டில்
மணக்கின்றது!
நீளக் கதைத்த பின்,
தூங்கவென்று எழுகின்றோம்!
கவிதாவின் கட்டிலிலே,
பொம்மைகளின் நடுவிலே,
பாலகியர் இருவரும் பாவைகளை
அணைத்தபடி
தூங்குகிறார்!
காதர் குனிந்து பொம்மைகளை
அகற்றுகிறார்!
விமலா துணியால் இருவரையும்
போர்த்துகிறாள்!

கணப்பொழுது வாழ்க்கை போல்,
ஓரிரவுத் தூக்கமே!
குழந்தைகள் தூங்க என் வீடு,
உன் வீடா?

யாருமே பேசவில்லை! உறக்கத்தைக்
கெடுக்கவில்லை!
அன்றிலிருந்து,
ஒன்றரை மாதம்
அமீனா உறங்கியது
கவிதாவின் கட்டிலிலே!

மறுநாளே
மான் குழந்தை ஒட்டிக்கொண்டு
விட்டாள்!

கவிதா என் மடியேறிக்கதை
கேட்க,
எட்டத்தே அமீனா
விழிச்சிலம்போடெதிர் நிற்க,
நடிப்பும் பாடலுமாய்க் கதை கூற





நான் துவங்க,
குஞ்சுகள் இரண்டும் கூத்தாட,
"கவிதாவின் வாப்பா" என முளைத்த
துளிர் உறவு
"யெம் மாமா" ஆகி, இறுகி இணைகிறது!

"மீனா!"
"வரமாட்டேன்!"
"சரி, அமீனா!"
"வந்திட்டேனே!"

விளையாடத்துவங்குவோம்!

என் கண்ணைக் கட்டிவிட்டுச்
சுற்றி வந்து குட்டுவார்கள்!
வலிக்குதென்று நான் சிணுங்கத்,
துடி துடித்துப் போவார்கள்!
சிங்க நடை நான் தவள முதுகில்
உலா வருவார்கள்!
ஒலி கூட்டும் ஆட்டத்தில்
விலங்கு இனம் காண்பார்கள்!
இங்கேதான்
எமக்கிடையே எழுந்ததொரு
ஒழுங்குச் சிக்கல்!
கீச்சுக்குரலில்
உரத்தெழுந்ததென் குரவை!
திடுக்கிட்ட அமீனா, வாயிலுக்கு
ஓடுகிறாள்!
கவிதா மிருகத்தை இனங்கண்டுகூவ,
திரும்பி வந்த அமீனா,
திரும்பவும் ஓடுகிறாள்!

எதிரில் வரும் விமலாவிடம்,
முறைபாப்பாடு!
"சரி! என்னதான் நான் சொன்னேன்?"

"ஷெல்ல மாட்டேன்."
"ஏன்?"
"அது, ஹறாம்! விலக்கப்பட்ட விலங்கு!"

அன்று ஒரு போழ்து கேலியும் ·
கும்மாளமும்!
எச்சில் துப்ப ஓடுவதும்,
சிணுங்குவதும்!
அவள் வருந்தக்கண்டு
விட்டுக்கொடுத்தவன்
நானேதான்!

நாட்களும் ஒவ்வொன்றாய்
நகர்கின்றன...!

நோன்பு துறந்த பின் ஒவ்வொரு
மாலையும்
தட்டோடு என் முன்னே வந்து நிற்பாள்!
பிடித்த ஒரு பட்சணத்தைத்
தூக்க என் கைநீண்டால்
உடனே என் கையில் ஒரு தட்டு!
பேரீச்சம் பழத்தை முதலிலே
தூக்கென்று
கண்ணால் பொய்க் கட்டளைகள்
வைப்பாள்!
பட்சணத்தைச் சுவைக்கும் வேளையிலே
குறியாக
முகத்திலே கண் பதித்து நிற்பாள்!
புரிந்துகொண்டு,
"ருசியே இல்லை" என்பேன்!
முகம் உடனே சுருங்கிவிடும்!
மறுகணமே,
நான் சுவைத்து உண்ணுகின்ற
பாங்கினைப் பார்த்தவுடன்
பொலன்னறுவைத் தாமரை
மலர்ந்துவிடும்!

திடீரென்றொரு நாள் இதம்
இசைக்க வந்ததுபோல்
திடீரென்றப் பூங்காற்று
பொலன்னறுவை போயிற்று.!
மாலையிலே வந்தபோது மனைவி
தான் சொன்னாள்!

"யெம் மாமா வருமுன்னர் வண்டியை
எடுங்க" என்று
பிடிவாதமாய் நின்று போனாளாம்!
மாமாவைக் கண்டால்
அழுதுவிடுவாளாம்!
மாமா
மற்றவர் முன்
கலங்கக்கூடாதென்று
குஞ்சுமகள் விரும்பியதை யார்
அறிவார்?

அதன் பின்னர்
புறக்கண்ணால் அவளை நான்
பார்த்ததில்லை!
நாடுவிட்டு நான் பெயர்ந்து விட்டேன்!
ஆனாலும்,
ஆண்டாண்டு நோன்புப் பெருநாள்
வரும்போது,
எப்படித்தான் அப்படியே ஓடிவரக்
கற்றாளோ?
வாழ்த்துமடல் நான் இங்கிருந்தனுப்ப,
நினைவு கூர்ந்து அவள்
அங்கிருந்தெழுத,
எங்கள் உறவும் இனித்து மலர்ந்தது, ஓ ம்!

நாங்கள் வளரவில்லை!
அவளுடைய இதயத்தில் மாமா
கிழமாகவில்லை!
ஆறுவயது மின்னல், இன்றும்
அவள் எனக்கு!

கடந்தாண்டு மார்ச்சிலே நோன்பு
வந்து செல்கையிலே!
"ஈத்" அன்றவள் கடிதம் கரம்
வந்தினித்தது!
"யெம் மாமோ!
யாழ்ப்பாணத்திலே
சனங்கள் கஷ்டப்படறாங்களாம்!
உணவில்லை!
மருந்தில்லை!
மின்சாரமும் இல்லை!
உங்க உம்மாவும் வாப்பாவும்
எதுக்கங்கை இருக்கோணும்?
யெங்கூட வந்து இருக்கட்டுமே!
ஆறு வயசில்லே, எனக்கிப்போ!
பதினெட்டு!"

கொழும்புக்கடை அடைத்து,
பொலன்னறுவைக் கிராமத்தில்
புதுக்கடை விரித்த காதரும்
வரைந்திருந்தார்!

அலையிடைத்துரும்பாய் அலைகின்ற
இனத்தினனை
அன்போடணைக்கின்ற அரவணைப்புச்
சுகம் கண்டேன்!

வானொலி செய்தி ஒன்று இடியாய்
இறங்கியது!
பொலன்னறுவைக் கிராமத்தில்
கொடியோர் வெறியாட்டு
பாலகரை,
பாவையரை,
சூதுரையா முதியவரை
கண்ட துண்டமாக வெட்டிக்
களத்திலே எறிந்த
கதை!
மறு நாளைச் செய்தி வயிற்றை
மேலும் குதறியது!
மையக் கிடங்கென்று தனிக்குழி
ஒன்றில்லாது
மூன்று பெரும் பொதுக்கிடங்கில்
மையங்களைப் புதைத்தாராம்.

கொடிய மிருக, கோரச் சொரூபிகளைச்
சபிக்கவா? திட்டவா? அழுது
அரற்றவா?

எதுவும் முடியவில்லை! விறைத்துப்
போய் நிற்கின்றேன்!
என்றோ ஒரு நாள் நிதானம்
நான் அடைந்த பின்னர்
நெஞ்சத் துணர்வைப் பகிர்கின்றேன்!

அதுவரைக்கும்
ஆறுவயது என் அமீனா இளம்மின்னல்
ஆயுள் பிழைத்திருக்க இறைவா
அருள்கவென்று
உதட்டுத் துடிப்பினுள் பிரார்த்தனை
ஏந்துகின்றேன்!

# அப்பா டாடா.....

என். உதயகுமார்



கார்த்திக்கிற்குப் புரியவில்லை. அப்பாவின் இந்தச் செய்கையின் காரணம் தெரியவில்லை. திடீரென்று அப்பாவின் இந்த மனமாற்றம் அவனுக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது.

ஏன் இப்படிச் செய்தார்....?எதற்காக இப்படிச் செய்திருப்பார்....?தனக்கு அவர் அப்பா மட்டும் இல்லையே. மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம் அவனுக்கு அவர்தானே....!

அவனுக்குச் சோறு ஊட்டிச் சீராட்டிய தாய் அவர்...

அவனுக்கு நல்லது கெட்டதை புரிய வைத்த தந்தை அவர்...

அவனுக்கு குருவாய் இருந்து கல்வி யறிவைப் புகட்டியவர் அவர்.. கார்த்திக்கிற்கு என்ன பிரச்சனை, குழப்பம் என்று வந்தாலும் அவன் அதை அப்பாவிடம் தானே முதலில் வந்துசொல்வான்.

தகப்பன் மகனாய் அவர்களது உறவு இருந்ததில்லையே.. எப்போதும் இரண்டு நண்பர்கள் பழகிக்கொள்வது போலத்தானே பழகுவது வழக்கம்...

கார்த்திக்கிற்கு ஆங்கிலப் படம் பார்ப்பதென்றால் நல்ல விருப்பம். ஆனால் அவனது அம்மா அதற்கு ஒரு நாளும் அனுமதிப்பதில்லை. ஆங்கிலப் படம் பார்த்தால் பிள்ளைகள் கெட்டுப்போய்விடுவார்கள் என்றொரு கணிப்பு அவனது அம்மாவின் மனதில் இருந்து வந்தது.

ஆனால் நல்ல ஆங்கிலப் படங்கள் திரையிடப்படும் போதெல்லாம் அம்மாவிற்குத் தெரியாமல் அப்பா அவனை கூட்டிச் செல்வதுண்டு.

ஒரு சமயம் அப்பாவின் பாக்கெற்றுக்குள் படத்துக்குப் போனதற்கான டிக்கெற்றுகள் இருந்து, அது துரதிஷ்டவசமாக அம்மாவின் கையில் பிடிபட்டபோது... "ஒரே பிள்ளை, ஒரே பிள்ளை என்று நீங்கள் தான் அவனை தவறான பாதையில் இட்டுச் செல்கிறீர்கள்" என்று அப்பா, அம்மாவிடம் பேச்சு வாங்கிக்கட்டிக்கொண்டதும் உண்டு. ஆனால் அம்மாவை எதிர்த்து ஒருநாளும் அவர் பேசியதை அவன் பார்த்ததில்லை.

அப்படிப்பட்ட அன்பு அம்மாவின் மேல் வைத்திருந்தவர், அம்மாவின் மரணத்தின் போது ஒரு சொட்டு கண்ணீர்விடாதது எல்லோருக்கும் ஆச்சரியமான விஷயமாய்த் தானிருந்தது.

ஆனால் கார்த்திக்கிற்கு அப்பாவைப் பற்றித் தெரியும்.... அப்போது அவனது பாடசாலை இறுதிப் பரீட்சை நேரம். எங்கே அவரும் கண்ணீர்விட்டு அழுது துக்கத்தை வெளிக்காட்டினால்........

அதனால் அவனுடைய மனமும் இன்னும் வேதனைப்படும், அம்மாவினுடைய இழப்பை ஏற்றுக்கொள்ளமுடியாது போகும், இதனால் அவனுடைய படிப்பு பாதிக்கப்படும் என்று, அவர் அத்தனை துக்கத்தையும் தனக்குள்ளேயே போட்டி மூடி மறைத்துக்கொண்டது அவனுக்கு மட்டும்தானே தெரியும். எப்படி அவரால் முடிகிறது... எப்படி அப்பாவால் இவ்வளவு பெரிய இழப்பையும் தாங்கிக்கொண்டு சாதாரணமாய் இருக்க முடிகிறது என அவன் வியந்ததுண்டு.

அப்பாவின் இந்தச் செய்கை, அவன் அவர்மேல் வைத்திருந்த அன்பை இன்னும் பன்முகப்படுத்தியது.

இப்படிப்பட்ட ஒருவருக்கு மகனாய்ப் பிறக்கும் பாக்கியம் கிடைத்ததை பெருமையாய் நினைத்துக்கொள்வான்.

அம்மாவின் மரணத்தின்பின் அவர்களிடையே இருந்த பிணைப்பு இன்னும் நெருக்கமாகியது.

கார்த்திக்கிற்கு முழுப்பணிவிடைகள் செய்வதும் அவர்தான். முக்கியமாக அவனுக்கு அம்மாவின் பிரிவு தெரியக்கூடாது என்பதில் அவர் மிகவும் கவனமாயிருந்தார்.

அவன் மாகாணத்திலேயே முதல் மாணவனாய் சித்தியடைந்தபோது அவரது சந்தோஷத்திற்கு அளவு கிடையாது. மனைவி மரகதத்தின் படத்துக்கு முன்னால் நின்று அவர் புலம்பினார்.

"மரகதம், உன்ர எண்ணப்படியே உன் மகனை படிப்பிச்சிட்டன், அவனுடைய எதிர்காலம் நல்லபடியா அமையிறதுக்கு உன் ஆசிர்வாதம் எப்பவும் அவனுக்கு இருக்க வேணும். நீதான் எனக்கு பின்னணியா இருந்து அவனை வழிநடத்திச் செல்ல எனக்கு உதவவேணும்..." அப்பாவின் கண்களில் நீர்திரையிட்டதை அன்றுதான் அவன் பார்த்தான்.

அவன் யூனிவசிற்றிக்கு தெரிவாகிச் சென்றபோது, முதன்முதலாக மகனைப் பிரிந்து இருக்கப்போகிறோம் என்ற வேதனையை அந்தக் கிழவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு விடுமுறைக்கும் கட்டாயம் வந்துவிட வேண்டுமென்று அவர் அவனுக்கு கட்டளை யிட்டிருந்தார்.

கார்த்திக் விடுமுறைக்கு வரும் நாட்களே அவருக்கு பசுமையான நாட்கள். ஏனைய நாட்களில் மகனின் நினைவே அவருக்குத் துணை.

கார்த்திக் படிப்பு முடிந்து வந்தபோது பிரிந்த நண்பர்கள் கூடியதுபோல் அவருக்கு பூரிப்பு.

கார்த்திக் வேலை செய்து சம்பாதிக்கத் துவங்கியபோது, மகனது உழைப்பில் சாப்பிடுகின்றோமே என்ற பெருமை, சந்தோஷம். மறுபுறம் இதற்கு தன் மனைவி கொடுத்துவைக்கவில்லையே என்று கவலையும் அவர் மனதில் இருக்கத்தான் செய்தது.

திடீரென அவரது மகனின் போக்கில் ஏற்பட்ட மாற்றம் அவருக்கு ஆரம்பத்தில் ஆச்சரியமாயிருந்தாலும் நாளடைவில் புரிந்துகொண்டார்.

கார்த்திக் சரியாக சாப்பிட மறுப்பதும், இரவில் நித்திரையின்றிப் புரள்வதும், அளவுக்கதிகமான மௌனமும் தன் மகனும் 'காதல்' நோயில் வீழ்ந்து விட்டான் என்று அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. அமைதியாக அவனிடம் கேட்டார்.

"யார் அந்தப் பெண்...?"

அப்பாவின் ஒரே கேள்வியால் அதிர்ச்சியுற்ற அவன் கூறினான்.

"ஆபிஸில கூடவேலை பார்க்கிற பெண்ணை..."

அவருக்குப் புரிந்தது. தாயின் ஸ்பரிசத்தையே உணர்ந்த தன் மகன், இன்று இன்னொரு பெண்ணின் மூச்சுக்காற்றில் திணறுகிறான் என்று.

"விபரம் சொல்லு, பேசி முடிச்சிடலாம்."

"ஸ்வப்னா என்று பெயர், அழகா யிருப்பாள், ஆபிஸில எல்லோருடனும் கலகலவென்று சிரிச்சுப் பேசுவாள். ஆனால் என்னுடன் மட்டும் அதிகம் பேசமாட்டாள். அதனால் தான் எனக்கு அவள் மனதை புரிந்துகொள்ள முடியவில்லை..."

"நிச்சயம் அவள் உன்னை விரும்புகிறாள். ஆயிரம் தான் கலகலப்புடனிருந்தாலும் எந்தப் பெண்ணும் தான் நேசிப்பவன் முகத்துக்கு முன்னால்'அச்சம்' என்ற பெண்களுக்கேயுரிய குணம் தொற்றிக்கொண்டு, அவர்களை பேசவிடாது தடுத்துவிடும்,

"அதனால் நீ தைரியமாக உன் விருப்பத்தை அவளிடம் சொல்."

அவன் ஸ்வப்னாவிடம் கூறியபோது, அவள் வீட்டில் வந்து முறைப்படி பெண்கேட்கும்படி கூறியதை அப்பாவிடம் சொல்ல, அவர் தாமதிக்காது தானே முன் நின்று தங்கள் கல்யாணத்தை நடத்தி வைத்தவர்...

இப்படி உயர்ந்த மனிதனாய் நடந்து கொண்டவர், ஏன் இப்படிச் செய்தார்...?

கார்த்திக் மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான்...

**அன்பு மகனுக்கு,**

**இதுவரை தாயாகவும் தகப்பனாகவும் இருந்த உனக்கு, இப்போது அந்த ஸ்தானத்தை நிரப்புவதற்கு உன் மனைவி வந்துள்ளாள். உனது அம்மா இல்லாத இடைவெளியும் நான் இல்லாத இடைவெளியும் உன் மனைவியால் நிரப்பப்படும். எனக்கு இனி வேலையில்லை. என் பணி முடிந்துவிட்டது. நீ என்மீது காட்டிய அன்பு அனைத்தையும் இப்போது உன் மனைவிமீது காட்ட வேண்டும். உன்னுடைய அப்பா இறைவனுக்கு தொண்டு செய்யப் புறப்பட்டுவிட்டேன்.. நான் எங்கிருந்தாலும் எனது ஆசிகள் உங்கள் இருவருக்கும் என்றும் இருக்கும்.**

**இப்படிக்கு,**
**அப்பா.**

கடிதத்தை படித்துமுடித்த போது கார்த்திக்கின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

# அம்மா எங்கே...?

-ரமேஷ் கண்ணன்-



**அ**ந்த ஒற்றைக் கதிரையில் சாய்ந்தபடி ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்த செல்வனை, தபாற்காரனின் மணியோசை திசை திருப்பியது. எழுந்து தபாலைப் பெற்றுக்கொண்டவன், அஞ்சலுறையில் தன் பெயர் இருப்பதைக் கண்டதும் விரைவாக பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

'அன்பின் செல்வனுக்கு உன் நண்பன் சத்தியா எழுதிக்கொள்வது' தலைப்பை வாசித்ததும் முகத்தில் சிறு மலர்ச்சி. சத்தியா.... ஆமாம் செல்வனின் பள்ளிக்கால நண்பன். மூன்றுவருட இடைவெளியின் பின்னர் இன்றுதான் நினைவு வந்துள்ளது போல் தனக்குள் நினைத்துக்கொண்டவன், மீண்டும் அந்த ஒற்றைக் கதிரையில் சாய்ந்துகொண்டு கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

'நலம். உன் நலமறிய ஆவல். நண்பா நீண்ட இடைவெளியின் பின் இன்று உன்னுடன் கடிதம் மூலமாவது தொடர்புகொள்ள முடிந்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நண்பா அன்று நம் பள்ளி இறுதி நாளன்று நீ எனக்குக் கூறிய அதே வரிகளை இவ்வேளையில் நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

"வருடங்கள் சென்றால் என்ன உள்ளத்தில் என்றும் நாம் நண்பர்கள்தான்" அன்று நீ கூறியது இன்றுகூட என் மனதைவிட்டகலவில்லை. அன்றைவிட இன்று உன்னை என் நண்பன் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன்.

'காரணம் இன்று இந்த சத்தியா சமூகத்தில் ஒரு நல்ல மனிதனாய், உத்தமனாய், தலைநிமிர்ந்து நடப்பதென்றால் அது உன்னால்தான். பள்ளியில் "கேடிச் சத்தியா" என்றால்தான் என்னைத் தெரியும். அந்தளவிற்கு அன்று நான் மோசமானவன். அப்போதெல்லாம் நீ எனக்குக்கூறிய புத்திமதிகளை நான் ஏளனம் செய்துள்ளேன். ஏன் உன்னையே எத்தனைத தடவைகள் துன்புறுத்தியிருப்பேன்.

"படிப்பில் வல்லவன், குணத்தில் நல்லவன்" என்றெல்லாம் உன்னை மற்றவர்கள் போற்றும்போது, நான்மட்டும் "பைத்தியக்காரன், மடையன், வீணாப் போனவன்" என்று எப்படியெல்லாம் உன்னைத் திட்டியிருக்கின்றேன். அப்போதும்கூட நீ என்னுடன் கோபப்படவில்லை. மாறாக அறிவுரை கூறினாய்.

'உன் செயல் ஒவ்வொன்றின் பின்னும் உன் தாய் துணைநிற்கின்றாள். மொத்தத்தில் உன் வெற்றிக்குக் காரணமே உன் தாய்தான், என்று நீ கூறும்போது நான் எப்படியெல்லாம் உன் தாயைத் திட்டியிருப்பேன். காரணம் அன்று அன்பு, பாசம், நட்பு என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ளும் சக்தி எனக்கிருக்கவில்லை. மாறாக அடி, உதை, குத்து, வெட்டு மட்டும்தான் தெரியும்.

'அவற்றின் விளைவுகளை நான் பள்ளி முடிவின் பின்னர்தான் உணர்ந்துகொண்டேன். அன்று நீ கூறியபடி நடந்திருந்தால் இன்று நானும் உன்னைப் போன்று ஒரு பட்டதாரி ஆகியிருக்கலாம்.

"கண்கெட்ட பின்பு-சூரிய நமஸ்காரம் எதற்கு" என்பதைப் போன்றதுதான் என் கதையும். ஆனாலும், அன்று நீ கூறிய புத்திமதிகள் இன்று என்னை மனிதனாக்கியது. அந்த வகையில் நீ என் நண்பனல்ல தெய்வம். நான் கையெடுத்து கடவுளைகூட வணங்கியது கிடையாது. ஆனால், உன்னை நான் ஆயிரம் முறையாவது கைகூப்பி வணங்கத் தயார். காரணம் என்னை மனிதனாக்கியவனே நீதான்.

'நண்பா உன்னைப்பற்றி எனக்குத் தெரியும். நான் இவற்றையெல்லாம் உன் அருகிலிருந்து கூறியிருந்தால் நீ "சத்தியா... என்னைப் புகழாதே. என்னை வழிநடத்தும் என் தாயைப் புகழ். என் தாய் இல்லையென்றால் நானும் உன்னைப்போன்று கெட்டவனாய்த்தான் இருந்திருப்பேன். ஆகையால் என்னை நல்வழிப்படுத்திய, நல்லவன் என்ற பெயர் பெறச்செய்த, என்னை உன் நண்பனாய் பெற்றுத்தந்த என் தெய்வத்தை, என் தாயைப் பாராட்டு" என்று கூறியிருப்பாய்.

'மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சின்னவயதில் ஆசிரியர் கற்பிக்கும்போது அதன் அர்த்தம் எனக்கும் புரியவில்லை. ஆனால், இன்றுதான், உன்மூலமாக நானதை உணர்ந்துகொள்கின்றேன். இந்த உலகத்தில் முதன்மைக் காரணியே தாய்தான் என்பதை நீ நிரூபித்துவிட்டாய்.

'சிலவேளைகளில் நான் பொறாமைப் பட்டுக்கொள்வேன். உன்னைப் போன்று எனக்கொரு தாய் கிடைக்கவில்லையே என்று. நண்பா உன் தாயை நான் இதுவரைகாலமும் பார்த்தது கிடையாது. ஆனால் நிச்சயம்

சின்னக் கதை

உன்தாயை நான் பார்க்கவேண்டும். நீ போற்றும் அந்த மனிததெய்வத்தைப் பார்க்க வேண்டும்.

'மறுமுறை மடல் வரையமாட்டேன். உன்னையும், உன் தாயையும் காண நானே வருவேன். அதுவரை உன்னிடமிருந்து விடைபெறும்,

**உன் நண்பன்,**
**சத்தியா**

கடிதத்தைப் படித்து முடித்தவனின் கண்களில் கண்ணீர் வடிந்தோடின. தன் நண்பன், தன் தாயைப்பற்றி கூறிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவனது இதயத்துடிப்புடன் மீண்டும் மீண்டும் எதிரொலித்துக்கொண்டன.

சிவந்துபோன கண்களுடன் நிமிர்ந்து பார்க்கின்றான். தலைநிறையப் பூவும், நிறைந்த குங்குமமும், சிரித்த முகமுமாய் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த படத்தில் சுமங்கலியாய் காட்சியளிக்கின்றாள் அவன் தாய்.

ஆமாம். அவன் தாய் இப்போது உண்மையாகவே தெய்வமாகிவிட்டாள். அவள் இறைவனடி சேர்ந்து இன்றுடன் ஒருவருடம் நகர்ந்துவிட்டது. ஆனால் செல்வன் இன்னும் அவள் நினைவுகளுடன்தான்.

சிவந்த கண்களுடன் விரக்தியாய் எழுந்தவன், உரத்துக் கத்துகின்றான்.

"அம்மா எங்கே..? என் அம்மா எங்கே...?" நாலாபக்கமும் அவன் குரல் எதிரொலிக்க, உணர்ச்சியற்றவனாய் மீண்டும் அந்த ஒற்றை கதிரையில் சாய்ந்துகொள்கின்றான்...

(முற்றும்)

---

நோன்புகாலச் சிறுகதை

# "கொடிதிலும் கொடிது புறம்"

-ஹரீரா அனஸ்-

புண்ய நோன்பு காலத்தில் எத்தனையோ நல்ல காரியங்களுக்குப் பயிற்சி உண்டாகிறது. பசித்திருத்தல், கெட்ட பார்வைகளை வீசாதிருத்தல் கெட்ட வார்த்தைகளைப் பேசாதிருத்தல், கெட்ட விடயங்களில் ஈடுபடாமல் மனதை ஒருமுகப்படுத்தி ஆத்மாவை இறைவனோடு இணைத்துவிடல்...இதில் "புறம்" என்பதும் தடுக்கப்படவேண்டியது. புறம்பேசுதல் கொடிய பாவமாகும்.




**வீ**ட்டின் பின்புறமாய் போடப்பட்டிருந்த திராட்சைப் பந்தலின் கீழ் சாய்மனக்கதிரையில் படுத்திருந்தார் யூஸுப் ஹாஜியார். நோன்புகால வெய்யில் அகோரத்தை திராட்சைப் பந்தல் குளுமையாக்கிக் கொண்டிருந்தது.

"என்ன முந்திரிகைக் கொடி குளுமை போல.." என்றபடி அவரருகே வந்தாள் அவர்மனைவி ருக்கையா. "ஓ...ருக்கையா நீயும் வாவன். உந்த யாழ்ப்பாண வெயிலுக்குள்ளை இந்தக் குளிர்ச்சியும் இல்லாட்டி இந்த நோன்பு காலத்திலை எப்பிடி ஆலாய்ப் பறக்கவேணும்?

"இஞ்சைருங்கோ!"

"என்ன ருக்கையா."

"உவள் சியானி.. என்ன எங்கடை மகன் பாருக்கின்ர பொஞ்சாதி தானே..."

"ஓம் ஓம். அவள்தான்."

"அட உன்னர மருமகளில்லையே."

"மருமகள்தான்! அதை யார் இல்லையெண்டது. ஆனால் அவளின்ரை குணமெல்லாம் இப்ப வரவர மோசமாகிக்கொண்டு போகுது."

"ருக்கையா உனக்கு அவளிலை பொறாமை வந்திட்டுது. என்னதான் ஆனாலும் அவள் என்ரையும் உன்ரையும் மருமகள். அதை மட்டும் மறந்திடாதே ஓ..."

"ஓம். ஓம் அவள் மருமகள்தான். ஆனால் இப்ப என்னை மதிக்கிறாளே...? அதுமட்டுமில்லை அவள் மகன் பொடியனையும் தன்ரை பக்கமெல்லே சொக்குப் பொடி போட்டு மாயாஜாலம் பண்ணி வைச்சிருக்கிறாள்."

"ருக்கையா இந்த நோன்பு காலத்திலை புறம் பேசுறது நல்லதில்லை. வீணாப் பாவத்தைச் சம்பாதிக்காம எழும்பிப்போ..."

சியானி எவ்வளவு நல்ல பிள்ளை. அவளைப்பற்றி குறை கூறுவதையே யூஸுப் ஹாஜியாரால் பொறுக்க முடியவில்லை.

"ருக்கையா நீ எவ்வளவுதான் சொன்னாலும் என்னாலை நம்பமுடியாது. அதுமட்டுமில்லை அதுக்காக வேண்டி நீ பாவமன்னிப்புத்தேடிக்கொள். இல்லாட்டி நோன்பு காலத்திலை ஹறாமான பொருளைச் சாப்பிடுறது மாதிரி ஆயிடும்" கூறிவிட்டு கால்முகம் கழுவுவதற்காக குளியலறைக்குப் போனார் யூஸுப் ஹாஜியார்.

தனது கணவனிடம் மருமகளைப்பற்றிக் கதைக்க வந்த குறையை கதைக்க சந்தர்ப்பமில்லாததால் கோபத்துடன் போன ருக்கையா... சியானியைப் பற்றி ஊர் முழுக்கச் சொல்லித் திரிந்தாள்.

"ஒரு முஸ்லிமுடைய குறையை மறைப்பவனுடைய குறையை அல்லாஹ் மறைத்து விடுகிறான். ஒரு முஸ்லிமுடைய குறையை வெளிப்படுத்துபவனது குறையை அவன் நான்கு சுவர்களுக்குள் அடைபட்டிருந்தாலும் வெளிப்படுத்தியே தீருவான்" என்பது நபி மொழிக் கருத்து.

•••

**த**னது மகன் செய்யும் தவறுகளுக்கெல்லாம் ருக்கையா மருமகள் சியானியையே குற்றம்சுமத்தி வந்தாள். அழுத கண்களும் சிவந்த முகமுமாய் எத்தனையோ தடவை சியானி தனது கணவனிடம் வந்து முறையிட்டபோதும் தாயின் பாசத்தால் எதனையுமே அவன் கணக்கெடுத்ததாக இல்லை. இறுதியில் மாமியாரின் சிரமம் தாளாமல் அவள் இறுதி முடிவே எடுத்துவிட்டாள்.

கணவனின் வீட்டைவிட்டுப் போவது என்று தீர்மானித்துவிட்டாள்.

இறுதியில் யூஸுப் ஹாஜியார் தனது மனைவி ருக்கையாவையும் மகனையும் எச்சரித்தார். அவரை மீறி அந்த வீட்டில் யாருமே நடந்துகொள்வதில்லை. சியானியைத் தேற்றி சமாதானப்படுத்தினார்.

•••

**எ**ட்டாவது நோன்பின் காலைப்பொழுது. "ச்ஹர்" செய்து விட்டு சிறிது நேரத்தின்பின் பாங்கு சொல்ல "சுபுஹு"ம் தொழுதுவிட்டு, தூங்கியதில் நேரம் போனதே தெரியவில்லை. ஒன்பது மணியாகிவிட்டிருந்தது. வீட்டின் அழைப்பு மணி அடிக்க கதவைத் திறந்தாள் ருக்கையா...

அங்கே உடுப்புப் பெட்டியோடு கணவனில்லாமல் தனது மகள் நாஸிலா நிற்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றாள். அவளின் சிந்தனையில் ஒரு கிழமைக்கு முன் சியானி புறப்படப் போன காட்சிகள் ஒவ்வொன்றாய் மனத்திரையில் அவசரமாய் ஓடி மறைந்தன.

"வாம்மா...எங்கம்மா புருஷன்?" என்று கேட்ட தனது தாயைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள் நாஸிலா.

வாசலில் அழும் சத்தம் கேட்டு யூஸுப் ஹாஜியார் வந்தபோது, தனது மகள் நாஸிலா தாயைக் கட்டிக்கொண்டு அழுவதைச் சகிக்க முடியாதவராய்... "என்னம்மா....விஷயத்தைச் சொல்லம்மா.." என்றவருக்கு...

"வாப்பா அவர் என்னைத் 'தலாக்" சொல்லீட்டார் வாப்பா..." அதற்கு மேல் யூஸுப் ஹாஜியாரால் அந்த இடத்தில் நிற்க முடியாமல் ஒரு கதிரையில் அமர்ந்துவிட்டார்.

மங்களமாய் இருந்த தன் மகளின் அருமை வாழ்வுக்கு நடந்த கதி என்ன...?

நாஸிலா...ஒவ்வொன்றாய் விவரித்தாள்.

தான் மாமியுடன் அன்னியோன்யமாய் இருந்தது....

பின்னர் தனிக்குடித்தனம்போனது, அதுமுடியாமல் மாமியுடனேயே சேர்ந்தது... அன்பின்னர் வேலையின் நிமித்தம் தன் கணவர் வேற்றூர் ஒன்றுக்கு மாற்றலாகியது... அதனால் கணவன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் தன்னுடன் பாசமாக இருந்ததைக் கண்டு மாமியார் பொறாமை கொண்டது. பின்னர் மாமியாரின் கோளினால் கணவன் தன்னை வெறுத்தது. அடித்துத் துன்புறுத்தி இறுதியில் தன்னை "தலாக்" சொன்னது வரை சொல்லி முடித்தாள்.

•••

"**அ**மு! நல்லா அழு! இன்னொரு பிள்ளைக்கு நீ நினைச்சதை அல்லாஹ் உன்ரை பிள்ளையை வைச்சே பழிவாங்கிட்டானே ருக்கையா...! உனக்கு எத்தனை தடவை சொன்னன். ஆனா நீ கேக்கேல்லை. புறம் பேசுறது எண்ட விஷயம் எவ்வளவு பாரதூரமானது! இனியாவது நீ விளங்கிக்கோ. சியானி மாதிரித்தான் நாஸிலாவும். நாஸிலா மாதிரித்தான் சியானியும். அண்டைக்கு சியானி இங்கையிருந்து போயிருந்தா.... அவளைப் பெத்தவயிறு எப்பிடி எண்ட விஷயத்தை இப்போதாவது உணர்ந்துகொள்.

"புறம் பேசுறது முஸ்லிம்களுக்கு அழகில்லை. குர்ஆனிலை எப்படிப்பட்ட கடுமையான எச்சரிக்கை வருகுதெண்டால், "புறம் பேசுகிற ஒருவன் தனது சகோதரனின் இறந்த மனித மாமிசத்தை தின்பவன் போல" எவ்வளவு கடுமை...

"எல்லாம் உன்னாலை வந்த வினையடி ருக்கையா..."

ஆத்திரமாய் பேசிய கணவனை ஏறிடப் பயந்தவளாய் ருக்கையா அப்பால் போனாள்.

தன் மகளின் இந்த வாழ்விழந்த நிலைகண்டு அவளைக் கட்டிக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதார் யூசுப் ஹாஜியார்.


---

# காத்திருக்க நேரமில்லை

**தி**னமுரசில் மூழ்கியிருந்த செம்பருத்தியை தபால்காரனின் மணியோசை சுயநினைவிற்குக் கொண்டுவந்தது. கடிதத்தை வாங்கி, அவசர அவசரமாக பிரித்தான். அது அமரனின் கடிதம்.

செம்பருத்தி! எனக்கு எதிர்வரும் கிழமை பெற்றோரால் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. பெண்ணின் பெயர் 'ரோஜா' நாங்கள் இனிமையாய் பழகிய காலங்களை மறந்து என்னை மன்னித்துவிடு. உனக்கென ஒரு 'உத்தம புருஷனை'த் தேடி இனிமையாய் வாழ்வதே எனது விருப்பம். இன்றிலிருந்து நாம் 'நண்பர்க'ளாக இருப்போம்.

'அமரன்" (நண்பன்)



-அன்பரசி தவபாலன்-

கடிதத்தைப் படித்து முடித்ததும் கதம்பமாலை நிகழ்ச்சியில், "நெஞ்சமடி நெஞ்சம் அது நெஞ்சமடி நெஞ்சம் அன்று நான் கொடுத்தது, இதுதானா...நெஞ்சை இன்றே திருப்பிக்கொடு முடிந்தால் எனை நீ மறந்துவிடு" எனும் பாடல் ஒலித்தது. செம்பருத்திக்கு இந்த உலகமே கசந்தது.

**அ**ன்று செம்பருத்தியின் தாய், "செம்பருத்தி, உனக்கு அப்பா பார்த்து வைத்த பையன் கடிதம் அனுப்பியிருக்கிறான். சீக்கிரம் படி.." என்றாள். எரிச்சலுடன் கடிதத்தை வாங்கிய அவள் படித்தாள்.

'செம்பருத்தி' உங்களின் நிலையை உமது நண்பி ரேவதி மூலம் அறிந்தேன். மனிதனாக பிறந்தால் இன்பத்தையும் துன்பத்தையும் மாறிமாறி அனுபவிக்கவே வேண்டும். இனிக் 'காத்திருக்க நேரமில்லை.' சீக்கிரம் உங்கள் பெற்றோரிடம் சம்மதத்தை தெரிவியுங்க.


"பரதன்"(எதிர்கால கணவன்)

பரதனின் கடிதத்தைப் படித்து முடித்ததும் கதம்பமாலை நிகழ்ச்சியில் இரண்டாவது பாடலாக "எல்லோரும் சொல்லும் பாட்டு அதை சொல்வேனே உன்னை பார்த்து. மேடையே வையகம் ஒரு மேடையே வேஷமே அங்கெல்லாம் வெறு வேஷமே...." எனும் பாடல் ஒலித்தது. செம்பருத்திக்கு அப்பாடல் பரதன் பாடுவதுபோல் இருந்தது.

•••

**அ**ன்று செம்பருத்தியின் வீட்டிற்கு வந்த ரேவதி "அடியே அமரன் வேறு ஒருத்தியை மணம் முடிக்கும்போது நீ இப்படி இருப்பது உனக்கே நல்லாக இருக்கா? சீக்கிரம் உன்னுடைய முடிவை மாத்திக்கொள். பரதன் ரொம்ப நல்லவர்" அது தானே! ஏன் செம்பருத்தி அமரனிற்காக இருக்க வேண்டும்? நாளை அமரன் ரோஜாவின் கழுத்தில் தாலி கட்டப் போகிறான். அதே நேரம் பரதனின் கையால் செம்பருத்தி கழுத்தில் தாலி ஏறப்போகிறது. இத்திருமணத் தம்பதிகளை நாளை நாங்களும் வாழ்த்துவோம்.

(யாவும் கற்பனை)



www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# புன்னகையும் பொருள் சொல்லும்

இயற்கை கொடுத்திருந்த போர்வையாய் இருள் விரிந்து கவிந்திருக்க, அந்த இருள் நாகதேவனுக்கு பிடித்திருந்தது. அவன் அருகே இருந்த பாமினிக்கும் பிடித்திருந்தது.

அந்தப்புரத்தின் அழகுமிகு நந்தவனத்தில் இரகசிய சந்திப்பு. மனதுக்குள் பரவியிருந்தது தித்திப்பு. காதலின் வீதியில் இரகசியமான சந்திப்புக்களுக்கு தனிச்சுகம் இருக்கிறது.

தடைகளை மீறி சந்திக்கிறோம் என்பதில் காதலர் இருவரும் தம் உறுதி வியந்து மகிழும் சுகம் இருக்கிறது.

"பாமினி!"

தாழ்ந்த குரலில் நிறைய அன்பு சொரிந்து அழைத்தான். என்னவென்பதாய் தலையை மேலும் கீழும் மெல்ல அசைத்தாள். இருளின் போர்வைக்குள் அந்த அசைவு புரியாமல், குரலை சற்று உயர்த்தி,

"பாமினிக்குட்டி."

என்று அழைத்தான் மீண்டும்.

"ம்..."

என்று ஒற்றைச் சொல் உதிர்த்தன சித்திர விழி மயிலின் செவ்விதழ்கள்.

அந்த ஒற்றைச் சொல் எழுந்துவந்த விதமும், இதமும் நாகதேவனின் மனக் குளத்தில் கல்லெறிந்து சலனம் கொடுத்தது.

"அழகில் ஆபத்தும் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

அவன் சொல்ல, அழகு முகம் மெல்ல அவன் புறம் திருப்பிப் பார்த்தது.

"இப்போது அது உண்மை என்று உணர்ந்துகொண்டிருக்கிறேன்."

பிறையாய் வளைந்து தெரிந்த நெற்றியில் உள்ளே எழுந்த வினாவால் விளைந்த சின்ன சின்ன சுருக்கங்கள் கோலம் காட்ட பாமினியின் இதழ்கள் அசைந்தன.

"குழப்புகிறீர்கள். புரியும்படி சொல்லுங்கள்."

"சில விசயங்களை நேரில் சொன்னால் கோபம் வரும். மேலும்..."

"மேலும்."

என்று கேட்டு துரிதப் படுத்தினாள்.

"நேரம் காலம் தெரியாமல் பேசினால் நினைத்தது ஒன்று நடப்பது வேறொன்றாகியும் விடும்."

"ஐயோ குழப்புகிறீர்கள். சமயங்களில் தாங்க முடியாமல் குழப்பி விடுவதே உங்கள் வேலையாகிவிடுகிறது. அதனால்..."

என்று மேலே சொல்லாமல் நிறுத்தி, அவன் முகத்தில் விழிகள் செலுத்தி இதழ்களில் மெல்லிய புன்னகை அணிந்து காட்டினாள்.

"அதனால்....?"

வினா தொடுத்தான். கரம் நீட்டி தொட்டால் துவண்டுவிடுமோ, கரம் சற்று வேகமாய் பட்டால் முறிந்து விடுமோ என்று நினைக்கத் தோன்றும் பாமினியின் இடையிலே கிள்ளினான்.

"வலிக்கும்.... நீங்கள் பேசி நான் குழப்புவதைவிட நீங்கள் பேசாமல் இருந்துவிடுவதே மேல் என்று படுகிறது."

"கோபம் வந்து விட்டதாக்கும் என் கோல மயிலுக்கு. சொல்லுகிறேன் கேள்.என் மனதில் பதிந்துவிட்ட மாசற்ற உன் அழகு முகம் அணுஅணுவாய் என்னைப்படுத்தும் பாடு இருக்கிறதே. அப்பப்பா.... விழி மூடிக்கொண்டால்கூட தூக்கத்தை வழி மறித்து எழுந்து நிற்கும் உன் அழகு முகம் செய்யும் கொடுமைகள் என்னவென்பதை யெல்லாம் நான் எப்படிச் சொல்வேன்?"

"பொய்தானே?"

உள்ளே ஊற்றெடுத்த சந்தோச நதியை போலியான கேள்வியால் அரண்போல் அமைத்து, மறைத்து கேட்டாள்.

நாகதேவன் கலங்கிப்போனான்.

"எது பொய் பாமினி? பாலின் நிற வெண்மை என்பது பொய் என்றால், கடலின் நிறம் நீலம் என்பது பொய் என்றால் நான் சொல்வதும் பொய்."

தழுதழுத்த குரலில் அவன் உணர்ச்சி புரிந்து, பாமினி தவித்துப்போனாள். தன் கரம் நீட்டி நாகதேவன் அணிந்திருந்த மேல் அங்கியில் பிடித்து அவனை தன் நோக்கி இழுத்தாள். துடித்த இதழ்களால் அவன் நெற்றியில் இன்பவலி கொடுத்தாள்.

அதுபோதும். நாகதேவன் தரையில் இருந்து வானத்திற்கு உயர்ந்தது போல் உணர்ந்தான்.

அழகு ரதமாய் இருந்தவளை தன்மேல் அணைத்தபடி, இடது கன்னத்தில் தன் உதடுகள் பிரித்து மெல்லக் கடிக்க, பாமினி சிணுங்கி,

"ஏன் கடிக்கிறீர்கள்?"

"ஆசை! நீ இல்லம் செல்லும்போது இந்த மாம்பழக் கன்னம் மட்டும் என்னிடம் இருக்கட்டும்."

அவன் சொல்ல, விழிகளில் பயம்காட்டி,

"அய்யய்யோ......உங்களை நம்பவே முடியாது. செய்தாலும் செய்வீர்கள்."

என்று சொல்லியபடியே இல்லம் செல்ல எழுந்தாள்.

"ஏன் அவசரம்?"

"ஆசையைப்பார். இனியும் தாமதித்தால் இல்லத்திற்கு போக முடியாது."

சொல்லியபடியே வேகமாய் குனிந்து அவன் நெற்றியில் இதழ்களை ஒற்றி எடுத்துவிட்டு, விழிகளை மூடித்திறந்து நளினம் காட்டிவிட்டு துள்ளி ஓடினாள். சற்றுத் தூரம் சென்று நின்று திரும்பிப் பார்த்தது தேவதை. இதழ்களில் தோன்றியது புன்னகை. அந்தப் புன்னகையில் ஒரு பொருள் இருந்தது. இருளுக்கு பழக்கப்பட்டுப்போன விழிகளால் அந்தப் புன்னகையை வாங்கி, உள்ளத்தில் போட்டு பொருள் அறிந்து கொண்டான் நாகதேவன்.

பொருள் அறிந்தமையால் மனதில் உற்சாக உயிர்ப்பும் பெற்றான்.

இதழ்கள் பேசாத போதும் புன்னகையே பேசிவிடும் மாயம்தான் என்ன? என்று மனம்வியக்க திருவள்ளுவர் சொன்ன குறள் ஒன்று நினைவுக்கு வந்தது.

**"முகை மொக்குள் உள்ளது**
**-நாற்றம்போல் பேதை**
**நகை மொக்குள் உள்ளதொன்று**
**-உண்டு."**

அதிகாரம் 128
குறள்- 1274

## இலக்கிய நயம்



தருவது- ரசிகன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல—39

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | 3 |
| 4 | | | | | ■ | |
| | ■ | 5 | | | 6 | |
| | 7 | ■ | 8 | ■ | | |
| ■ | | ■ | | ■ | | |
| 9 | | | | ■ | ■ | |
| | | ■ | | 10 | | |

**இடமிருந்து வலம்**

1. இராமாயணத்தில் இவர் ஒரு தூதர்.
2. கண்ணில் விழுந்தால் நீர் வரும்.
4. முதல் மந்திரி என்றும் சொல்லலாம்.
5. இதைப் பெருக்குவதற்கு விளம்பரம் முக்கியம்.
9. மூலதனத்தின் உரிமையாளர்.
10. தொடுக்கப்படுவதைக் குறிக்கும்.

**மேலிருந்து கீழ்**

1. விசிறி என்றும் சொல்லப்படுபவர்.
3. வீர விளையாட்டுகளில் ஒன்று.
6. பற்றுச்சீட்டு என்றும் அழைக் கலாம்.
7. உலகில் இதனை மிக நீளமாகக் கொண்டவரின் படமொன்று தகவல் பெட்டியில் வெளியாகி இருந்தது.
8. இவர்கள் மட்டும் பங்கு கொள்ளும் போட்டி ஒன்று முரசில் உண்டு.
9. காலில் தைத்து விடும் கவனம்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 05.03.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-39**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-37க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பி | ர | ம் | 2 பு | ■ | 3 ரா | 4 ஜா |
| ரா | ■ | 5 பா | றா | ங் | க | ல் |
| 6 ர் | யி | 7 உ | ■ | 8 க | தே | ரா |
| த் | ■ | டு | ■ | டை | வ | ■ |
| 9 த | 10 ழு | ம் | பு | ■ | ன் | 11 மை |
| னை | கு | பு | ■ | 12 க | ■ | து |
| ■ | க | ■ | 13 நெ | ரு | ப் | பு |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.37இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. சி. ஆனந்தராஜ் திருமலை.
2. எம். மஸ்னவி புத்தளம்.
3. எல். தவமணி கண்டி.
4. ஆர். செல்வராணி வவுனியா.
5. எம். இம்தியாஸ் ஏறாவூர்.
6. எஸ். நித்தியகலா கொழும்பு-04.
7. ஜே. கதிரவன் பண்டாரவளை.
8. கு. யோகராஜ் நீர்கொழும்பு.
9. ஏ. பாத்திமா கொழும்பு-07.
10. ஆர். தேவசகாயம் மட்டக்களப்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## படித்ததில் இரசித்தவை

**மார்த்தாண்டன்**

இந்திய கிரிக்கெட் வீரர்கள் பணம் சேர்ப்பதில்தான் குறியாக இருக்கிறார்கள் என்று சொன்ன பட்டோடி முன்னாள் கப்டன். உடனே இந்நாள் கப்டன் அசாருதீன் சொன்ன நெத்தியடியான பதில், "அவரது வங்கிக் கணக்கை பெருக்கச் செய்ய, ஒரு போட்டி நடத்த விரும்பினால் அவருக்காக ஆட நாங்கள் தயார்."

■

வானலை வழியாக தொலைதூர தேச தொலைக்காட்சிகளை இங்கே கொண்டுவர டிஷ் ஆண்ட்டெனாக்கள் பேருதவி புரிகின்றன. விலை தான் மிக அதிகம். நம்நாட்டில் குறைவு. தலைநகரில் சில இடங்களில் பெரிய அலுவலகங்கள், மற்றும் முக்கிய புள்ளிகள் வீடுகளின் கூரைகளில் பெரிய குடையை தலைகீழாய் கவிழ்த்தது போல் தெரிவதை பார்க்கிறோம். இந்தியாவில் டிஷ் ஆண்டெனாக்கள் கூரைகளில் நிறைய இடங்களில் முளைத்திருக்கின்றன. டிஷ் ஆண்டெனா பற்றிய ஒரு கவிதை படிக்க முடிந்தது. இரசிக்க கூடியதாய் இருந்தது.

எழுதியது- நா. முத்துக்குமார்.

டிஷ் ஆண்டெனா
மாடிவீட்டு முட்டாள்
மழைவரும்போது
குடையை ஏன்
திருப்பிப் போட்டிருக்கிறான்?

■

திரைப்பட பாடலாசிரியர்களில் தற்போதுள்ளவர்களில் பழைமையானவர் பிரபலமானவர் கவிஞர் வாலி. எம்.ஜி.ஆர். படங்களுக்கு நிறையப் பாடல்கள் எழுதியவர். அவருக்கும் நெருக்கமானவர். தற்போதைய முதல்வர் ஜெயலலிதாவை அவர் ஒரு பெண் என்பதற்காக தரக்குறைவாய் விமர்சிப்பவர்களை வெறுப்பவர் வாலி. தமிழக சட்ட மன்றத்தில் கலைஞர் முதல்வராக இருந்த போது அவர் எதிரில் ஜெயலலிதாவின் சேலையைப்பிடித்து துரைமுருகன் இழுத்தார். தமிழகம் முழுவதும் ஜெயலலிதாவுக்கு அனுதாபம் தேடிக்கொடுத்ததில் அந்தச் சம்பவத்துக்கும் பங்கு உண்டு. அப்போது வாலி எழுதிய சுவையான கவிதையில் ஒரு பகுதி.

"நான்...
அரசியலில்
கோஷ்டிகளின் சண்டையைக்
கண்டிருக்கிறேன்.
ஒரு
சேலையை எதிர்த்த
வேஷ்டிகளின் சண்டையை
உன்னால்தான் காண நேர்ந்தது."

■

பாசம்-அன்பு-உறவுகள் யாவும் பொருளாதார அளவுகோலால் அளக்கப்படும் காலம். "அன்புக்கு உண்டே அடைக்கும் தாழ்" என்பது மறந்துபோய் அன்புக்கு இங்கே இடம் உண்டோ? என்பதே இன்றைய கேள்வி. பாசம் பற்றிய இன்றைய நடப்பை படம்பிடித்துக்காட்டிய ஒரு உரைநடை. மனதில் காயம் தந்தது.

நீங்களும் பாருங்கள்.

எழுதியவர்-ஆர்.இரத்தினசாமி.

**பாசம்**

அம்மாவுக்கு வணக்கம்
நீ கேட்டுக்கொண்டபடி
முன்னூறு ரூபாய்
அனுப்பி வைக்கிறேன்.
கீதா உண்டாகியிருக்கிறாள்.
பெரியசாமிக்கு
வேண்டிக் கொண்டபடி
காவடி எடுத்துவிடலாம்.
பையன் பிறந்தால்
அப்பா பெயர் வைக்க
கீதா சம்மதித்துவிட்டாள்.
அப்பாவின் பென்ஷன்
பணத்தில் 300 ரூபாயை
வரும் மாதம்
தந்திட வேண்டும்.
இங்கும் வரவர
கஷ்டம்தான்."

(19ம் பக்க மகாபாரதம் தொடர்ச்சி)

**துரியோ:** இல்லை! இது எமது இல்லம்.

**திருத:** இது உனது இல்லமே...அதே வேளை அவர்களுக்கும் இதுதானே வீடு.

**துரியோ:** இல்லை...இது எனது சொந்தவீடு. எனக்கு மட்டுமே உரியது.

**காந்தாரி:** துரியோதனின் பேச்சு எனக்கே அச்சம் தருவதாக உள்ளது மகாராஜா!

**திருத:** இது ஓர் இளவரசனுக்குரிய அடையாளம் காந்தாரி! வாயிலுக்கு இன்னும் எவ்வளவு தூரம் உள்ளது?

**காவலன்:** மகாராணி இதோ வந்துவிட்டார் மகாராஜா..!

**குந்தி:** மகாராஜா..!

**திருத:** எழுந்திரு குந்தி..! பாண்டுவின் மறைவால் நான் தடுமாறிவிட்டேன். முடமாக்கப்பட்டுவிட்டேன். உங்களை ஆதரிக்கும் சக்தியற்றவனாக நிற்கிறேன்.

**குந்தி:** அக்கா..!

**காந்தா:** எங்கே குந்தி! உன்னை அணைத்துக் கொள்ள விரும்புகிறேன். என்கால்களில் விழுந்துவிடாதே!

**குந்தி:** எல்லாவற்றையும் இழந்தவளாக- வெறுங்கையுடன் வந்திருக்கிறேன் அக்கா...!

**காந்தா:** அவ்வாறு ஏன் கூறுகிறாய்? அற்புதமான புத்திரர்களைப் பெற்றிருக்கிறாயே!

**குந்தி:** ஐயா! இதோ இவன்தான் மூத்தவன், யுதிஷ்டிரன்-தருமன்.

**திருத:** கடவுள் காப்பாற்றுவார்.

**காந்தா:** துரியோதனா! உனது அண்ணனை வணங்கு..!

**துரியோ:** உம்...ம்...

**திருத:** ஆமாம்! உன் அண்ணனுக்கு மரியாதை செய். அவர்களை அழைத்துக்கொண்டு போய் அவர்களுக்குரிய மாளிகையில் சேர்த்துவிடு. போ மகனே!

**அம்பிகா:** குந்தி! ராஜமாதா உனக்காகக் காத்திருக்கிறார்.

-காட்சி மாற்றம்-

**சத்தியவதியும் அம்பாலிகாவும் அழுத வண்ணம் உள்ளனர்.**

**அம்பா:** அம்மா...அமைதியாக இருங்கள்.

**சத்தியவதி;** நான் அழுவதைத் தடுக்க வேண்டாம். அம்பாலிகா! எனது துயரத்தை சற்று புரிந்துகொள். இன்று மூன்றாவது சந்ததிக்காக நான் அழுதுகொண்டிருக்கிறேன். பீஷ்மருக்குச் செய்த துரோகத்துக்காக இன்னும் எத்தனை பரம்பரை நான் பிராயச்சித்தம் தேட வேண்டுமோ தெரியாது. முதலில் எனது புதல்வர்களின் பிரிவால் அழுதேன். பின்பு எனது பேரனின் மறைவுக்காக அழுகிறேன். ஆண்டவன் இன்னும் எத்தனை துயரச் சம்பவங்களை எனக்காக வைத்திருக்கிறானோ தெரியாது.

•••

குந்தி தனது ஐந்து பாண்டு புத்திரர்களுடன் வருகிறாள்.

**அம்பாலிகா:** குந்தி! எனது மகனை கானகத்தில் ஏன் தனித்துவிட்டாய்? ஏன் என்று கூறு...

**சக்தி:** அம்பாலிகா! மகனைப் பிரிந்த துயர் உனக்கு! அவள் தனது மாங்கல்யத்தை இழந்து கைம்பெண்ணாக வந்திருக்கிறாள். உன் துயரத்தைவிட அவளுடைய துன்பம் மிகமிக அதிகம் அல்லவா?

**குந்தி:** அம்மா...அம்மா...!

**சத்தி:** அம்பாலிகா...! குந்தி உன் மகன் பாண்டுவுடன் மட்டுமே ஆரண்யம் சென்றாள். இன்று ஐவருடன் திரும்பியிருக்கிறாள் பார்த்தாயா?

இன்றைய தொடரில் உள்ள பல காட்சித் தொகுப்புடன் முடிகிறது.

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

# மகாபாரதம்

அங்கம் 18

**இவ்வாரம் (27.02.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** மகாபாரத மகாகாவியத்தைக் கூற வந்தநான், அதனைவிடுத்து அல்லது பாதைவிலகிச் சென்று விட்டேன் என்று கருதலாம். மகாபாரதத்தின் பிரதான சூத்திரதாரி கிருஷ்ணபர்மாத்மாவே என்பதனால் அவனுடைய இளமைக்கால லீலைகளில் கூடுதலான நேரத்தைச் செலவிட நேர்ந்தது. மகாபாரதத்தின் அத்தியாயங்களுடன் கிருஷ்ணனின் லீலைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. மா முனிவரான வேதவியாசரின் ஆசிகளுடன் கிருஷ்ண லீலாவில் சற்றுத் தாமதித்தேன்.

கொடிய கம்சனைக் கொன்றொழித்த கிருஷ்ணன் இப்பொழுது தனது பெற்றாரையும் மாமன்னர் உக்கிரசேனரையும் விடுவிக்கப் புறப்பட்டு விட்டான்.

–காட்சி துவக்கம்–

மதுராபுரி–சிறைகூடம்

**வாசுதேவன்:** எமது கவலைகளெல்லாம் தீரும் நாள் எந்நாளோ..?

பலராமனும் கிருஷ்ணனும் சிறைக்குள் வருகின்றனர்.

**ஒரு வீரன்:** *(கிருஷ்ணன், பலராமனிடம்)* மகாபிரபு! தங்கள் மற்ற மாமாவான சுதாமன் தங்களுக்கெதிராக சூழ்ச்சித் திட்டம் வகுப்பதாக அறிகிறேன். அவ்வாறானால், படைகளுள் பிளவு ஏற்பட்டு கிளர்ச்சி ஒன்று தோன்றக் கூடும்...!

**பலரா:** அப்படியா...! கிருஷ்ணா! நீ பெற்றோரிடம் போ! நான் மாமா சுதாமனைப் போய்ப் பார்க்கிறேன்.

**கிருஷ்:** அப்படியே! வீரனே! எனது பெற்றோரை மாமா எங்கே அடைத்து வைத்துள்ளார்?

**காவலன்:** என்னுடன் வாருங்கள் பிரபு!

காவலன் தேவகி மற்றும் வாசுதேவன் இருக்கும் சிறைக் கதவைத் திறந்து விடுகிறான்.

**கிருஷ்:** *(பெற்றார் முன் சென்று)* என்னை யார் என்று தெரிகிறதா...?

இருவராலும் கிருஷ்ணனை அடையாளம் காண முடியவில்லை. திகைப்படைகின்றனர்.

**கிருஷ்:** நான்தான் நந்தகோன் கிராமத்தில் வளர்ந்த யசோதாவின் மகன்- உங்கள் எட்டாவது மகன்...!

**தேவகி:** ஐயோ என் மகனே! யசோதா உன்னை இங்கு ஏனப்பா அனுப்பி வைத்தாள்...?

**கிருஷ்:** அன்னையே! நான் இங்கு வருவதற்காகவே அவதரித்தவனல்லவா....?

**வாசு:** உனது வருகையினை கம்சன் அறிந்தால் விபரீதம் ஏற்படுமே மகனே!

**அக்கு:** நண்பரே! கம்சன் எட்ட முடியாத எல்லைக்கப்பால் சென்றுவிட்டான். உமது மகன் கிருஷ்ணன் அவனை ஒழித்து விட்டான். உங்களை விடுவித்து உங்கள் ஆசியினைப் பெற உங்கள் மகன் வந்திருக்கிறான்.

**கிருஷ்:** இது நடக்கும் என்று உங்களுக்கு முன்னமே தெரியுமல்லவா? அப்போ ஏன் வியப்படைகிறீர்கள்...?

கிருஷ்ணன் தாய் தந்தையரை வணங்குகிறான்.

**தேவகி:** மகனே..! என் மகனே...என் கண்ணா...

**கிருஷ்:** தந்தையே என்னை வாழ்த்துங்கள்!

**வாசு:** நானா உன்னை வாழ்த்துவது? உன்னை வாழ்த்த எனக்கென்ன தகுதி இருக்கிறதப்பா?

**கிருஷ்:** பெற்றவர்களின் ஆசிக்கு வேறு எதுவுமே ஈடாகாதே!

*(காவலனிடம்)* என் பெற்றாரை விடுதலை செய்!

**வாசு:** முதலில் மகாராஜா விடுதலையாகட்டும்!

**கிருஷ்:** தங்கள் சித்தப்படி அப்பா.

கிருஷ்ணன் உக்கிரசேனரின் சிறைகூடம் செல்கிறான்.

**உக்கி:** குழந்தாய்! நீ யாரப்பா?

**கிருஷ்:** நான் நந்தகோபன் மகன்?

**உக்கி:** நந்தனா.....யார் நந்தகோபன்..?

**கிருஷ்:** நந்தகோன் கிராமத்து நந்தகோபன் மற்றும் யசோதாவின் மகன். உங்களை விடுதலை செய்ய வந்திருக்கிறேன். காவலரே! மகாராஜாவை விடுதலை செய்யும்!

**உக்கி:** ஆண்டவன் அருள் பாலிப்பானாக....

**கிருஷ்:** நீங்கள் விடுதலையாகிவிட்டீர்கள் மகாராஜா!

**உக்கி:** மகனே! நான் மன்னவனல்ல...நான் பெற்றமகனே என் பதவியினைப் பறித்தான். கம்சனை நீ வென்றமையினால் அந்நாட்டின் கிரீடம் உன் சிரசுக்கே உரியது. தேவகியின் மைந்தனே! மதுராவை வென்றுவிட்டாய். மதுராபுரி இனி உன்னுடையதே..!

**கிருஷ்:** நான் எந்த ராஜ்ஜியத்தையும் வென்றவனல்ல. எனது தாய் நாட்டுக்கான சேவையினைப் புரிந்துள்ளேன்.

**உக்கி:** நான் ஒரு சத்திரியன். சத்திரியன் தானம் பெறலாகாது. தருமமாக நீ கூட் எதைத் தந்தாலும் என்னால் ஏற்க முடியாது.

**கிருஷ்:** இது தானமுமல்ல- தருமமுமல்ல. இதோ என் தலையில் மயிலின் இறகே முடியாக அமைகிறது. மதுராவின் முடியினை தாங்குவதற்காகவே தங்கள் தலை தயாரானது. மதுராபுரியைப் பொறுத்தவரை எனது கடமையைப் புரிந்துவிட்டேன்.

**உக்கி:** அப்படியானால் வாசுதேவரே ஆட்சி பீடம் ஏறட்டும்.

**கிருஷ்:** அந்த விருப்பம் அவருக்கு இருக்குமானால், அவர்களுக்கு முன்னதாக தங்களை விடுவிக்கும்படி கூறியிருப்பாரா?

**உக்கி:** *(அக்குதரிடம்)* வாசுதேவரிடம் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும்படி நீர் சொல்லலாம் அல்லவா?

**அக்கு:** கொடுமையே உருவான கம்சனிடமிருந்து எம்மையெல்லாம் விடுவித்தவன் கிருஷ்ணன். அவனுடைய அபிப்பிராயங்களுக்கும் செவிசாய்க்கவேண்டும் மகாராஜா!

**உக்கி:** என்னை தேவகியிடம் அழைத்துச் செல்லுங்கள். மதுராவைக் கட்டிக்காக்கும் வலுவிழந்த என்னால் இப்பாரத்தை இனிச் சுமக்கமுடியாது. இதனை தேவகி தன் மகனிடம் தெளிவாகக் கூறும்படி கோரலாம்.

**அக்கு:** வாருங்கள் மகாராஜா.....

**கிருஷ்:** மகாராஜா! எனது பெற்றாரை விடுதலை செய்யும்படி ஆணையிடுங்கள்.

**உக்கி:** தேவகி! முடியினை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனை உன் மகனிடம் எடுத்துக்கூறு....!

**கிருஷ்:** ஆரம்பமும் முடிவுமற்ற ஒரு வட்டத்தையே நாங்கள் திரும்பத்திரும்பச் சுற்றி வருகிறோம். எனது தாய் தந்தையர் விடுவிக்கப்படவேண்டும் என்று நீங்கள் விரும்பவில்லையா? மகாராஜா! நீங்கள் தான் அதற்கான ஆணையினைப் பிறப்பிக்கவேண்டியவர்...!

**தேவகி:** ஆணியிடுங்கள் மகாராஜா! நான் என் மகனை இன்னும் பூரணமாக அறியவில்லை. அவனையே இதுநாள் வரை எண்ணி ஏங்கிக்காத்திருந்தேன். ஆணையிடுங்கள்- என் மகனை நான் அரவணைத்து மகிழவேண்டாமா...?

**கிருஷ்:** என் தாயாரின் அரவணைப்பின் ஆனந்தத்தை உணர ஆவல் பெருகுகிறது மகாராஜா!

**உக்கி:** அவ்வாறானால் நானே அவர்களை, என் கைகளால் விடுவிக்கிறேன்!

உக்கிரசேனர் தேவகி–வாசுதேவர் சங்கிலிகளை அவிழ்க்கிறார். இருவரும் அவரின் தாழ் பணிகின்றனர்.

**உக்கி:** என்றும் மகிழ்ச்சியுடன் நீடூழி வாழ்க!

உக்கிரசேனரும் மக்களும் கிருஷ்ணனை வாழ்த்துகின்றனர்.

'உக்கிரசேன மாமன்னர் வாழ்க' என்னும் கோஷங்கள் முழங்குகின்றன. அக்ரூர் மதுராபுரி கிரீடத்துடன் வருகிறார்.

**உக்கி:** என்னை வாழ்த்த வேண்டாம்! வாசுதேவ கிருஷ்ணனை வாழ்த்துங்கள்.

**மக்கள்:** வாசுதேவ கிருஷ்ணன் வாழ்க வாழ்க!

**கிருஷ்:** என்னை வாழ்த்த வேண்டாம். சமாதானம் நிலைக்க, உண்மையும் நீதியும் நிலைபெற வாழ்த்துங்கள். பிருந்தாவனத்தை வாழ்த்துங்கள். எனது தந்தை நந்தகோபரை, அன்னை யசோதாவை வாழ்த்துங்கள்!

–காட்சி மாற்றம்–

கிரீடத்தை எடுத்து கிருஷ்ணன் உக்கிரசேனரின் சிரசில் வைக்கிறான். மக்கள் வாழ்த்துகின்றனர். மலர் சொரியப்படுகிறது.

**கிருஷ்:** வாசுதேவ கிருஷ்ணனாகிய நான் மதுராபுரி மாமன்னர் உக்கிரசேன மகாராஜாவுக்கும் எனது வளர்ப்புத்தந்தை நந்தகோபருக்கும் மதுராபுரி மக்களுக்கும் என் தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வாழ்க பாரதம்!

–காட்சி மாற்றம்–

தேவகி கிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் வெண்ணை ஊட்டுகிறாள்.

**வாசு:** மதுராபுரி வெண்ணை சுவையாக இருக்கிறதா கண்ணா?

**கிருஷ்:** நந்தகோன் கிராமத்து வெண்ணையை விட இழுப்பாகத்தானிருக்கிறது அப்பா, அப்படித்தானே அண்ணா...?

**பலரா:** ஆமாம்...!

**நந்த:** நண்பரே! நான் விடைபெறட்டுமா? யசோதா அங்கு அமைதியிழந்திருப்பாள்.

**தேவகி:** உங்கள் காரணம் எங்களை மௌனமாக்கிவிட்டது.

**கிருஷ்:** அப்பா! நானும் உங்களுடன் வருகிறேனே!

**நந்த:** இல்லை. நீ இங்கேயே இரு.

**கிருஷ்:** இல்லை நான் உங்களோடு வரத்தான் வேண்டும்.

**நந்த:** பிடிவாதம் கூடாது கண்ணா.

**கிருஷ்:** அப்பாவிடம் மகன் பிடிவாதம் பிடிக்க உரிமையுண்டு. ஆண்டவனிடம் பக்தனுக்கிருக்கும் உரிமையினைப்போல...

**நந்த:** இருக்கலாம். பிள்ளைகளும் பெற்றாருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டுமல்லவா?

**கிருஷ்:** சரி அப்பா. தங்கள் சித்தப்படி நடக்கிறேன். ஆனால் முதலில் என் யசோதா அம்மாவை நான் பார்க்க வேண்டும்.

**வாசு:** உண்மைதான் மகன். எனக்கோ உன் அன்னை தேவகிக்கோ இல்லாத உரிமை உன்மீது நந்தகோபனுக்கும் யசோதாவுக்கு முண்டு என்பது உண்மையே! ஆனால் நீ உனது கல்வியைத் தொடர குருதேவரிடம் போக வேண்டுமல்லவா?

**தேவகி:** அதற்கென்ன அவசரம் இப்போது?

**ரோகி:** காலம் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறதல்லவா?

**தேவகி:** உங்களுக்கென்ன? பலராமனை 15 வருடங்களும் கிருஷ்ணனை 12 ஆண்டுகளும் உங்கள் அருகிலேயே வைத்திருந்தீர்கள். நான் எனது வாழ்நாளில் பாதியை இருட்டறையில் கழித்துவிட்டேன். எனது பிள்ளைகளின் பாசம் எட்டாத தூரத்தில் இருந்தேன். இந்தத் தருணத்தையே எண்ணிக்காத்திருந்தேன்.

**நந்த:** இளவரசி! கோபாலன் தனக்கான அந்தஸ்தினை அடைவதற்கான பயிற்சியினைப் பெறவேண்டுமல்லவா?

**தேவகி:** நீங்களும் அவர்களுடன் சேர்ந்து விட்டீர்களா?

**வாசு:** தேவகி உனது மகன் எதிர்காலத்தின் திறவுகோலை அல்லவா தன்னிடம் வைத்துள்ளான்!

**தேவகி:** சரி! எப்படியோ உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்.

**நந்த:** யசோதாவிடம் சொல்ல ஏதாவது தகவல் உண்டா தேவகி?

**தேவகி:** அவரை என்றென்றும் நான் மறக்கமாட்டேன் என்று கூறுங்கள். என் வாழ்நாளில் என்றுமே அவருடைய கடனை என்னால் அடைக்க முடியாது. கண்ணன் யசோதாவை வாட்டி வதைத்திருப்பான். அவளும் அவனை மன்னித்திருப்பாள். ஆயுளுள்ளவரை யசோதாவை நான் மறக்கமாட்டேன் என்று கூறுங்கள்.

**கிருஷ்:** அம்மாவிடம் கூறுங்கள். அம்மாவை என்றும் நான் மறக்கமாட்டேன். என் அன்பினைக் கூறுங்கள் அப்பா... அவருடைய ஆசிகள் என்னை என்றும் வழி நடத்தும்.

**நந்த:** கண்ணா–

–காட்சி மாற்றம்–

- நந்தகோன்கிராமம்– நந்தகோபன் தனியாக சோகத்துடன் வருகிறார்.
- யசோதா பூஜையிலிருப்பவள்.
- நந்தகோபன் தனிமையில் வருவதைக் கண்டு கிருஷ்ணனும் கூடவே வந்திருப்பான் என்று கருதுகிறாள் யசோதா.

**யசோ:** கண்ணா...! கண்ணையா...! என் கண்ணன் எங்கே? பொல்லாத துடுக்குப் பயல்! எங்கோ ஒளிந்துகொண்டான்! கண்ணா..மகனே கண்ணையா...! எங்கே ஒளிந்துகொண்டிருக்கிறான்? கடவுளுக்குத் தான் வெளிச்சம்! வருவதாகச் சொல்லி அனுப்பியிருந்தால் உங்களுக்கு வெண்ணை எடுத்து வைத்திருப்பேன். நான் என் கண்ணனுக்கு மட்டும் கொஞ்சம் பத்திரமாக எடுத்து வைத்திருக்கிறேன். என் கண்ணன் எங்கே? ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? அவன் எங்கேயோ ஒளிந்துகொண்டான். எனக்குத் தெரியும். எப்படியாவது கண்டுபிடிக்கிறேன்!

**நந்த:** யசோதா! எங்கே போகிறாய்?

**யசோ:** என் கண்ணனைத் தேடுகிறேன்!

**நந்த:** வேண்டாம் யசோதா? அவனை எங்கே தேடப் போகிறாய்? அவன் வெகு தூரத்துக்கு அப்பால் இருக்கிறான்!

**யசோ:** எனக்குத் தெரிகிறது.

**நந்த:** என்ன தெரியும்?

**யசோ:** தேவகி என் கண்ணனை தடுத்து விட்டாள். அவன் என்னிடம் வர விரும்பியிருப்பான். அவனை தடுத்து விட்டார்கள். அவனுடைய உண்மையான தாய் நானல்லவே! அவன் எனது சொந்த மகனாயிருந்தால் அவனை எவர் தடுக்கமுடியும்? இயற்கை தானே! அவன்மீது எனக்கு என்ன உரிமை இருக்கிறது?

**நந்த:** அப்படி சொல்லாதே யசோதா! அவன் மீது உனக்குள்ள உரிமை அளவிடமுடியாததொன்று. ஆனால்...! தேவகி மற்றும் வாசுதேவன் ஆகியோருக்கு மட்டுமல்ல மதுராபுரியிலும் அவனுக்கு பெரும் கடமை இருக்கிறது. உனக்கு மட்டும் உரிமையானவனல்ல. கிருஷ்ணன் இந்த அண்ட சராசரமனைத்தின் மீதும் உரிமை உடையவன். நீ சுயநலவாதியாக இருக்கலாகாது. உன்னுடைய கைகளுக்குள் மட்டும் அவனை இனி அடக்கி விடமுடியாது. உலகனைத்துடன் நீயும் அவன் கருணையைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

**யசோ:** அவனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள அவன் என்ன வெண்ணெயா? அவனுக்கு இந்த உலகம் என்ன செய்தது? அவனை தூங்க வைக்க உலகம் தாலாட்டுப்பாடியதா? அவனுக்கு சிரிப்புச் சொல்லித்தந்ததா? இல்லை நந்தகோன்கிராமத்து கோபியர்கள் அவனைப் பற்றிக் கோள் சொல்லும் போதெல்லாம் அவனை உலகமே வந்து கண்டித்ததா? அவனுடைய குறும்புகளைத்தானும் அண்டசராசரமே பொறுத்துக்கொண்டிருந்ததா...? சரி அவன் என்னிடம் வர வேண்டும் என்று வற்புறுத்தவே இல்லையா?

**நந்த:** வற்புறுத்த மட்டுமா செய்தான்- அடம் பிடித்தான் யசோதா...! கூடியிருந்த மக்களெல்லாம் "வாசுதேவகிருஷ்ணன் வாழ்க" என்று வாழ்த்தியபோது என்ன சொன்னான் தெரியுமா? "என்னை வாழ்த்தாதீர்கள். என் அன்னை யசோதாவையும் தந்தை நந்தகோபரையும் வாழ்த்துங்கள்" என்று கூறினானே! எவ்வளவு பெருமையாக இருந்தது தெரியுமா? உலகையே படைத்த அவனை வளர்த்த பெருமைக்குரியவள் நீயல்லவா? அவன் உனக்கு எப்போதும் வெண்ணைத் திருடன்தான். அவனை உணவூட்டி வளர்த் **தாய்**. நடக்கக் கற்றுத்தந் **தாய்!** பேச வைத்**தாய்**..! அவனுடைய கடமையைச் செய்ய- அவனுக்கு வலு வூட்டிவைத் **தாய்**. இறுதியில் நீ கொடுத்த ஊக்கமே கம்சனை ஒழிக்க அவனுக்கு துணை நின்றது.

**யசோ:** இப்பொழுது எனக்கு எல்லாமே புரிகிறது. •அவன் இனி என்னிடம் வரமோட்டான்.

**நந்த:** கண்ணன் திரும்பி வரமாட்டான் என்று ஏன்கூறுகிறாய் யசோதா? அவன் உன் இயத்தைவிட்டு எப்போது பிரிந்தான்? அவன் என்றும் உன்னுடனேயே இருப்பதை உணரமாட்டாயா? அவன் உன்னை மறந்துவிட்டான் என்று கருதாதே! அவன் நம்மிடம் வந்ததே ஒரு மாயை. வீணாகப் பதட்டமடையாதே! நேற்றுவரை நந்தகோன் கிராமம் மட்டுமே உன்னைத் தெரிந்திருந்தது. இன்று உன்னை அண்டசராசரமே அறிந்து கொண்டது. அழாதே...!

**காலத்தின்குரல்:** கிருஷ்ணனின் ஆரம்ப லீலைகள் இத்துடன் தற்காலிகமாக முடிவடைகின்றன. யசோதாவின் கண்ணீர்த் துளியினைப்போல், கண்ணனின் ஆனந்தமயமான லீலைகளை நினைவில் நிறுத்திவிட்டு தபோவனத்திலுள்ள பாண்டுவையும் புத்திரர்களையும் பார்க்க உங்களை அழைத்துச் செல்கிறேன்.

தபோவனம்–குந்தியும் பிள்ளைகளான ஐவரும்.

**குந்தி:** யுதிஷ்டிரா! பீமா! அர்ச்சுனா! நகுல சகாதேவா..!

**ஐவரும்:** இதோ வந்துவிட்டோம் அம்மா!

**குந்தி:** குருதேவர் காத்துக்கொண்டிருப்பார் அல்லவா? சீக்கிரம் புறப்படுங்கள்.

**மாதுரி:** அக்கா நானும் புறப்படுகிறேன்.

–காட்சி மாற்றம்–

குருகுலம்– ஐவருடன் ஏனைய மாணவர்களும் குருவும்.

**குரு:** அர்ச்சுனா...! 'ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி' இதற்கு விளக்கம் சொல்லு பார்க்கலாம்.

**அர்ச:** பல்லாயிரம் நாமங்களால் அழைத்தாலும் ஆண்டவன் ஒருவனே!

**குரு:** முற்றிலும் சரி! யிதிஷ்டிரா! 'ஏகோ விஷ்வாசே புவனசே' என்றால் என்ன?

**யுதிஷ்:** இறைவன் ஒருவனே- அவன் எங்கும் நிறைந்தவன்.

**குரு:** அரசன் என்றால் அர்த்தம்..?

**யுதிஷ்:** ஏனையோரை ஆள்பவன் என்பதுதான் பொருள் குருஜி!

**குரு:** அரசு என்றால்...?

**யுதிஷ்:** மக்களுக்கு வழிகாட்டுவது-அதாவது மகிழ்ச்சியுடன் வாழவழிவகுப்பது.

–காட்சி மாற்றம்–

வனத்தில் பாண்டு தியானத்திலிருக்கிறார். மாதுரி நீர்வீழ்ச்சியில் குளிக்கிறாள்.

•••

குந்தி தபோவனத்தில் உணவு சமைக்கிறாள்.

**பீமன்:** அம்மா...! எனக்கு உணவு கொடுங்கள்!

**குந்தி:** உனக்கு எப்போதும் பசிதான். நீ மூத்தவனா அல்லது எல்லோருக்கும் இளையவனா? இல்லையே! நகுலனும் சகாதேவனும் வரட்டும். அவர்களுக்குப் பரிமாறிவிட்டு உனக்குத் தருகிறேன்.

**பீமன்:** அவர்களுக்குப் பசி எடுப்பதில்லையே?

**குந்தி:** உண்மைதான்! அவர்களுக்கு இருக்க வேண்டிய பசியெல்லாம் உன்னிடம் தஞ்சமடைந்து விட்டனவே! சற்றுப் பொறு.

**பீமன்:** வேண்டாம்... எனக்கு உணவே வேண்டாம்.

**குந்தி:** உன் சகோதரர்கள் வரும்வரையாவது உன்னால் பொறுத்திருக்க முடியாதா?

**பீமன்:** கடவுளே! இனி ஒரு பிறவி எடுத்தால், என்னை இரண்டாவது மகனாகப் பிறக்கவைத்து விடாதே! ஆகக் கடைசி மகனாகப் பிறக்கவைத்துவிடு.

அர்ச்சுனன், நகுலன், யுதிஷ்டிரன் மற்றும் சகாதேவன் வருகிறார்கள்.

**எல்லாரும்:** அம்மா...அம்மா...எங்களுக்குப் பசிக்கிறது அம்மா....!

**குந்தி:** உம்... உணவும் ஆயத்தமாக இருக்கிறது.

**பீமன்:** நானே சாப்பிடட்டுமா அம்மா?

**குந்தி:** சரி, சாப்பிடு.

அர்ச்சுனன் பீமனின் உணவுடனிருந்த ஒரு பழத்தை எடுக்கிறான்.

**பீமன்:** ஏய் எடுக்காதே!

**யுதிஷ்:** அம்மா! அப்பா இன்னும் வரவில்லையே!

**குந்தி:** அவர் வந்துவிடுவார்.

–காட்சி மாற்றம்–

நீர்வீழ்ச்சியில் குளித்துவிட்டு மாதரி ஈரத்துணியுடன் வருவதை தியானத்தி லிருந்து விழித்துக்கொண்ட பாண்டு காண்கிறார்.

**பாண்டு:** மாதரி...இங்கே வா...!

**மாதரி:** வேண்டாம் பிரபு!

**பாண்டு:** ஏன்..? நீ மிகவும் அழகாக இருக்கிறாய்!

**மாதரி:** வேண்டாம் பிரபு வேண்டாம்...

- அடங்காத ஆசையுடன் மாதரியை பாண்டு அணைத்ததும் உயிரிழந்து மடிகிறார்.
- கிந்தம முனிவரின் சாபம் எதிரொலிக்கிறது:

**கிந்தம:** ஒரு பெண்ணை நீ எப்போது தழுவுகிறாயோ அப்போதே நீ இறந்துவிடுவாய்.

**மாதரி:** ஐயோ பிரபு...!

–காட்சி மாற்றம்–

**குந்தி:** கடவுளே! யுதிஷ்ட்ரா! தம்பிமாரைப் பார்த்துக்கொள்.

கணவன் இறந்துகிடக்கும் இடத்தை குந்தி அடைகிறாள்.

**மாதரி:** ஐயோ பிரபு! கண் திறந்து பாருங்கள். என்னோடு பேசுங்கள்! பிரபு! பிரபு என்னோடு ஒருவார்த்தை பேசுங்கள். அக்கா..அக்கா...நான் அவரைத் தடுத்தேன். உண்மையாக அவர் என்னை நெருங்கவொட்டாமல் தடுத்தேன் அக்கா..! என்மீது எந்தக் குற்றமும் இல்லை அக்கா...! எனது கணவனைக் காப்பாற்ற என்னால் முடியவில்லையே! அக்கா... உங்களைப் போல் நான் உறுதியுள்ளவள் அல்லவே அக்கா...

**குந்தி:** விதியை வெல்ல யாரால்தான் முடியும்? எது நடக்கவேண்டும் என்றிருந்ததோ அது முடிந்துவிட்டது.

–காட்சி மாற்றம்–

- வாசுதேவனும் தேவகியும் இரதத்தில் கானகம் வருகின்றனர்.
- பாண்டுவின் உடல் கிடந்த இடத்தை அடைகின்றனர்.
- குந்தி உடலைத் தன்மடி மீது கிடத்திய வண்ணம் அழுது கொண்டிருக்கிறாள்.

**வாசு:** என்ன நடந்தது...?

**குந்தி:** தம்பி! நான் எல்லாவற்றையும் இழந்த பாபியாகிவிட்டேனே! பிரபு! என் தம்பி உங்களைத் தேடி வந்திருக்கிறான். அவனிடம் பேசுங்கள் பிரபு!

**வாசு:** இது இறைவன் விட்ட வழி. அழுது பயனில்லை. மனதைத் திடப்படுத்திக் கொள் அக்கா.

**குந்தி:** எல்லாமே முடிந்துவிட்டன. தம்பி நீதானே என்னை அஸ்தினாபுரத்து மணமகளாக அனுப்பிவைத்தாய்! இன்று எனது கணவருடன் என்னையும் சேர்த்து அனுப்பிவை! அவரைத் தனியே போக விடமாட்டேன்.

**மாதரி:** நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது. நான் தான் அவரைத் தொடர்வேன்.

**குந்தி:** இல்லை மாதரி. இது எனது உரிமை. நான்தான் மூத்தவள். அவருடைய மூத்த மனைவியும் நானே!

**மாதரி:** நீங்கள் எனக்கு எதையுமே மறுத்தவல்ல.... அக்கா...! நீங்கள் மூத்த அன்னையைப் போன்றவள் அல்லவா?

**குந்தி:** இருக்கலாம். ஆனால் எனது உரிமையை விட்டுக்கொடுக்கும்படி என்னைக் கேட்காதே!

**மாதரி:** நீங்கள் உங்கள் குழந்தைகளைப் போன்று எனது பிள்ளைகள் மீதும் அன்பு பாராட்டுபவர். நகுலனும் சகாதேவனும் எனது பிள்ளைகள் என்பதைவிட உங்களுடையவர்கள் என்றே கொள்ளலாம். அவர்கள் எதற்கெடுத்தாலும் உங்களிடமே வருகின்றனர். அந்தக் குழந்தைகளின் வாழ்க்கையை சீரழித்து விடாதீர்கள் அக்கா!

**காலத்தின்குரல்:** **மாதரி பாண்டுவுடன் உடன்கட்டை ஏறுகிறாள். பிள்ளைகள் ஐவரையும் பராமரிக்கும்பொறுப்பினை குந்தி ஏற்கிறாள். அவளுடைய முற்காலம் விடைபெறுகிறது. எதிர்காலம் தெளிவற்று- புகைமண்டலமாகத் தோன்றுகிறது. அவள் எங்கே போவாள்? தனது தம்பி வாசுதேவனுடன் மதுராவுக்கா அல்லது...! அஸ்தினாபுரிக்கா...? அல்லது...!**

**வாசு:** முனிபுங்கவரே! எனது சகோதரியை என்னுடன் மதுராவுக்கே அழைத்துச் செல்லட்டுமா?

**முனிவர்:** அவர் அஸ்தினாபுரியின் மகாராணி! அஸ்தினாபுரத்தின் நம்பிக்கைச் சின்னமாக அவரை ஏற்றுள்ளோம். அஸ்தினாபுரி, அவர், தங்களுடன் மதுராவுக்கு வருவதை ஆட்சேபிக்கவில்லையானால் தாராளமாக அழைத்துச் செல்லுங்கள்.

–காட்சி மாற்றம்–

–திருதராட்டிரரின் அரண்மனை–

**திருத:** பெரிப்பா! பாண்டுவின் மறைவு என்னை முடக்கிவிட்டது. செயலிழந்து தவிக்கிறேன். பாண்டுவின் பிள்ளைகளை வரவேற்க நான் அஸ்தினாபுரி நகர் எல்லைக்குப் போகப் போகிறேன்.

**பீஷ்ம:** வேண்டாம். குந்தியையும் புதல்வர்களையும் நானே போய் அழைத்து வருகிறேன்.

–காட்சி மாற்றம்–

நகரின் எல்லை. குந்தி பாண்டவர்களுடன் வருகிறாள். பீஷ்மர் சகலரையும் வரவேற்கிறார். குந்தி பீஷ்மரை வணங்குகிறாள்.

**முனிவர்:** எம்மீதுள்ள பொறுப்பினை ஒப்படைக்க வந்துள்ளோம் பீஷ்மாச்சாரியாரே!

பீஷ்மர் பாண்டவர்களை அணைக்கிறார். பாண்டுவின் அஸ்தியினையும் பெற்றுக் கொள்ளுகிறார். துக்கம் மேலிட விம்முகிறார்.

**பீஷ்ம:** பாண்டு! என் மகனே! என்னப்பா நடந்துவிட்டது? எங்களை விட்டு ஏன் பிரிந்தாய்? *(முனிவரிடம்)* முனிபுங்கவரே! தங்கள் பணிக்காக நன்றிகூறக்கடமைப் பட்டவன். வாருங்கள்...!

**முனி:** இல்லை கங்கா புத்திரரே! எமது பணி முடிந்துவிட்டது. நாங்கள்புறப்பட அனுமதி தாருங்கள்!

முனிவர்கள் புறப்படுகின்றனர்.

**பீஷ்ம:** மகளே குந்தி வாம்மா..!

எல்லோரும் அஸ்தினாபுரி அரண்மனையை அடைகின்றனர்.

•••

**திருதராட்டினன்:** துரியோதனா! வாயில்வரை என்னை அழைத்துச் செல்...!

**துரியோ:** அவர்கள் கானகத்திலிருந்து இங்கு ஏன் வரவேண்டும்?

**திருத:** வேறு எங்கே அவர்கள் போகமுடியும்? இதுதானே அவர்கள் வீடு.


(18ம் பக்கம் பார்க்க)

நன்றி - www.padippakam.com

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.



அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு–11.
தொ.பேசி: 436331




## உச்சரிக்கத் திறக்கும்!

சில பூட்டுகளுக்கு சங்கேத எண்கள் உள்ளன. அந்த எண்களை முறைப்படி அமைத்தால்தான் திறக்கும் பூட்டும். ஆனால் படத்தில் காணப்படும் இப்பூட்டுக்கு எண்கள் தேவையில்லை. 6 எழுத்துக்களைக்கொண்ட ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அந்தச் சொல்லை உச்சரித்தால் போதும் பூட்டு பட்டென்று திறந்து கொள்ளும்.

## வசதியான வாகனம்

மோட்டார் சைக்கிள் விற்பனையிலும் பலத்த போட்டிகள். அதனால் புதிய வடிவங்களில் வண்டிகளைத் தயாரிக்கிறார்கள். படத்தில் உள்ள வண்டி ஜப்பானிய ஹோண்டா நிறுவனத்தின் தயாரிப்பு. இதன் பெயர் 'பசிபிக் கோஸ்ட்'. மோட்டார் காரிலுள்ள பல வசதிகள் இதில் உண்டு. போட்டிகளால் புதிய உத்திகள், புதிய தயாரிப்புகள்.







வாரமலர் தினமுரசு

## நீ...ள...மா...ன...கார்!

இந்தக் காரை நிறுத்திவைக்க எங்கு இடமிருக்கிறதோ இல்லையோ உலக அதிசயத்தில் நிச்சயமாக இடம்பிடித்து விட்டது.

இதுதான் உலகில் மிக நீளமான கார். ஜப்பான்–அமெரிக்கா, அவுஸ்ரேலியா கார் கம்பனிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ளன. நீளம் 31 மீட்டர். 50 பேர் பயணம் செய்யலாம். 20 சக்கரங்களில் இயங்கும். உள்ளேயே சமையல் அறை, நீச்சல் தடாகம், கழிவறை, ஓய்வாக விளையாட ஒரு மைதானம் என்று பல வசதிகள் உண்டு.

படமும்–தகவலுதவி–
க. அன்புமுகன்–பிரான்ஸ்.

## போய் வந்தது போல......




விண்வெளியில் தாவி அந்தரத்தில் மிகவேகமாகப் பயணம் செய்யும்போது எத்தகைய அனுபவம் ஏற்படும்? இதோ இந்த வண்டியில் 8பேர் ஏறிக்கொள்ள வேண்டியது. இதனுள் அமைக்கப்பட்டிருக்கும் திரையில் விண்வெளிக்காட்சிகள் தோன்றும். நீங்கள் அமர்ந்து கொண்டிருக்கும் சாதனம் அப்படியே உங்களை வான்வெளியில் அதிவேகமாகக் கொண்டுசெல்வது போன்ற உணர்வினை ஏற்படுத்தும். காட்சி மட்டுமல்ல, எதிரே உங்களை முட்டி மோத ஒரு விண்வெளிக்கல் வரும்போது, உங்கள் வாகனம் வளைந்து நெளிந்து விலகி உங்களை அந்தக் கல்லுடன் மோதிவிடாமல் காப்பாற்றுவது போன்ற சூழ்நிலையைத் தரும்.

## யோகமுள்ள குதிரை



யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே. அதை இந்தக் குதிரையும் சொல்கிறது. பிறந்தநாள் கொண்டாடி கேக் தின்னும் யோகம் உள்ள குதிரை இது.

## அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்



## பிரமிக்கவைக்கும் பேனாவின் விலை

18 கரட் தங்கத்தால் செய்யப்பட்ட இந்தப் பேனாவில் 4,200 வைரக்கற்கள் பொருத்தப்பட்டுள்ளன. 'மொன்ற் பிளாங்க் சொலிற்றெயர் றோயல்' பேனா நிறுவனத்தினர் வடிவமைத்துள்ள இப்பேனாவின் விலை 100,000 அமெரிக்க டொலர். நமது நாட்டுப் பெறுமதிப்படி 50 இலட்சம் ரூபாய்கள்.

உங்கள் வாழ்நாளில் இத்தொகையினைச் சேமிக்க முடியுமானால், உங்கள் பேனாவை நீங்கள் வாங்கிக்கொள்ளமுடியும்.

